விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
e-mail: valampurii@yahoo.com

ஓங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 01 வெள்ளிக்கிழமை (17.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 210




# ஜனாதிபதிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

## பிக்குகள் அமைப்பு கொடி

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ளும்படி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்புடைய ஸ்ரீ லங்கா பிக்குகளின் அமைப்பின் தலைவர் வட்டினாபஹா சாமானந்த தேரர், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க வாகனங்களுக்கு ஓர் இலட்சம் ரூபாய் வாடகை

### அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

பிரதமர் உட்பட ஏனைய அமைச்சர்கள் தேர்தல் பணிகளுக்கு தமது உத்தியோக பூர்வ வாகனங்களை பயன்படுத்தினால், ஒரு வாகனத்திற்காக ஒரு மாத கட்டணமாக ஓர் இலட்சம் ரூபாயை வழங்க வேண்டும் என அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச் சரவைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன இதனை கூறியுள்ளார்.

இதனடிப்படையில், பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், மாகாண முதலமைச்சர்கள், பிரதி சபாநாயகர், அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் ஆகியோருக்கான சிறப்புரிமைகள் தொடர்ந்தும் வழங்கப்படும்.

சிறப்புரிமையாக கிடைக்கும் வாகனங்களை தேர்தல் பிரசாரப் பணிகளுக்குப் பயன்படுத்தினால், அதற்கான கட்டணத்தை அமைச்சுகளில் செலுத்த வேண்டும்.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் இப்படியான நடைமுறை செயற்படுத்தப்படுவது இதுவே முதல் முறையாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை தவிர உத்தியோக பூர்வ வாகனங்களை தேர்தலுக்கு பயன்படுத்தினால்,

அதற 23 ஆம் பக்கம் பார்க்க













நடுவுநிலை தவறா... ங்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

அச்சுவேலி நவக்கிரி
விளாத்தியடியில் 14 பரப்பு
கல்லுக்காணி உடனடியாக
விற்பனைக்கு உண்டு.
இரண்டு பகுதிகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர்களும் தொடர்பு கொள்ளலாம். (1154)

தொடர்புகளுக்கு: 077- 6143278, 077-0804473


## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

. புங்குடுதீவு சந்தையடி அருள்மிகு ஸ்ரீ கதிர்காமக் கந்தன் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 22 புதன் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு நாட்கள் நடைபெறும். (எ-12)


## விசேட கருத்தரங்கு

26.07.2015 நடைபெறவிருக்கும் திறந்த பல்கலைக்கழக கல்வி Diploma தெரிவு பரீட்சைக்கானது.

காலம்: சனி, ஞாயிறு — 9.00- 2.00 வரை

தொடர்புகளுக்கு ==> 0766883394 (C-1612)

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யா/ஆஸ்பத்திரி வீதி, Commercial வங்கிக்கு அருகில்)

## Data Analysis
## இலவச கருத்தரங்கு

Microsoft excel
பயன்படுத்துபவர்கள் சகலருக்கும்
மிகவும் பயனுள்ள விடயங்கள்
கலந்துரையாடப்படும்.

பல்கலைக்கழக மாணவர்கள்,
CA, CIMA, ACCA மற்றும் உயர்தர
வகுப்பு மாணவர்கள்

பாடசாலை ஆசிரியர்கள்,
அரச கருமங்களில் excel
பயன்படுத்துபவர்கள் மற்றும் ஆர்வம்
உள்ள அனைவரும் கலந்து
கொள்ளலாம் (C-1607)

இடம் : Student Success Centre
கட்டணம் இலவசம்
காலம் : சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில்

தொலைபேசி மூலம் தொடர்பு
கொண்டு முற்பதிவினை மேற்கொள்ளவும்

தொடர்புகளுக்கு
0776169470

## தேவை

வடமராட்சியில் உள்ள கல்வி
நிலையம் ஒன்றுக்கு நல்ல
நிலையில் உள்ள
தளபாடங்கள் தேவை (C-1603)

தொடர்புகளுக்கு : 0771613060

## வேலையாள் தேவை

பேக்கரி அனுபவம் உள்ள
வேலையாள் தேவை. (C-1609)

சுதா பேக்கரி
கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
021 221 3123

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி வடக்கு சங்கத்தானை
பெரிய அரசடி வீதியில் மிகவும்
நல்ல சூழலில் 4 1/2 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
A-9 வீதியிலிருந்து மூன்றாவது காணி
★ தரகர் வேண்டாம் (1148)

தொடர்புகளுக்கு: 0756486248

## அசத்தல் ஆடித்தள்ளுபடி

இன்று முதல் ஆகஸ்ட் 18 வரை

சரவணா ரெக்ஸ்

எமது கிளைகள் வேறு
எங்கும் இல்லை



ஆடி சேல்
அதிர்ஷ்ட சேல்

இல. 526, 529
பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (C-1604)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## பழைய மாணவர் சங்கம்
## புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை

### ஹென்றீசியன் சங்கமம் - 2015

எமது கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஹென்றீசியன் சங்கமம் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும், சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும் 18-07-2015 ந் திகதி (சனிக்கிழமை) மாலை 6 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் கலந்து சிறப்பிக்க பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (C-1610)

நிர்வாகத்தினர்

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.)(Bid fee) | Security Deposit(Rs.) | Validity Period of Bid Security(Days) | Approximate Direct cost of the work(Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation of Old Operation Theatre | 500.00 | 120,000.00 | 91 | 5.97 | C 7 |
| Construction of Condemning Stores | 500.00 | 36,000.00 | 91 | 1.76 | C 9 |
| Renovation of Mortuary | 500.00 | 35,000.00 | 91 | 1.70 | C 8 |
| Timber Flooring for Biochemistry Lab, Toilets Renovation of Ward No 06 and Aluminum Partition for Ward No 07 | 500.00 | 15,000.00 | 91 | 0.72 | C 10 |

2.Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

3.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

4.Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

5.A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 20.07.2015 up to 06.08.2015 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

6.Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 07.08.2015, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
17/07/2015. (c-1606)

## மரண அறிவித்தல்

திருமதி தவமணி கந்தசாமி
(காரைநகர்)



காரைநகர் குமிழங்குழியை பிறப்பிடமாகவும் களபூமியை வசிப்பிடமாகவும் தற்போது 176, பிறவுண் வீதி, யாழ்ப் பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி கந்தசாமி 15.07.2015 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பிரபல வர்த் தகர் A.S.ஆறுமுகம்-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மரு மகளும், காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் கந்தசாமியின் அன்பு மனைவியும், சண்முகநாதன், சபாநாதன், சண் முகலிங்கம், சசிகாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவாஜினி, சுதாஸ்தினி ஆகியோரின் அன்பு மாமியும் துவாரகன் பிரசாயினி, சுருதி, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த் தியும், காலஞ்சென்றவர்களான பாக்கியம் சோதிப்பிள்ளை மற்றும் ருக்மணி, காலஞ்சென்ற செ.சோமசுந்தரம் ஆகி யோரின் பாசமிகு சகோதரியும், அமரர் ஆ.பொன்னம்பலம், சரஸ்வதி, காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சறோஜினிதேவி, தனலக்ஷ்மி, நாகேஸ்வரி, கமலவேணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2015) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம் பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

176, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 9395,
0773151375, 0773107687 (1159)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சா பாவனையில் ஈடுபட்ட நால்வர் பொலிஸாரால் கைது

(கரணவாய்)

**யாழ். ஊர்காவற்றுறை சாட்டி கடற்கரைப் பகுதியில் கஞ்சாப்பாவனையில் ஈடுபட்ட நால்வரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்துள்ளனர்.**

இதில் 3 நபர்கள் புத்தளம் மாவட்டத்தினைச் சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் ஊர் காவற்றுறைப் பிரதேசத்தினைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கஞ்சாப் பொதிகளை விற்பனை செய்த சந்தேக நபர் பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பிச் சென்றுள்ளார் எனவும் தெரிய வந்துள்ளது. குறித்த பகுதியில் கஞ்சா விற்பனை இடம்பெற்று வருவதாகஊர்காவற்றுறைப்பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த இரகசிய தகவலினை அடுத்தே மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் அச்சந்தேகநபர்களது கார் ஒன்றும் பொலிஸாரினால் கைப்பற் றப்பட்டுள்ளது.

மேலும் அச்சந்தேக நபர்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் கஞ்சா பொதிகளை விற்பனை செய்த சந்தேக நபரினை தேடி வருவதாகவும் ஊர் காவற்றுறைப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5-60)

# திரைப்படத்திற்கான பூஜை நிகழ்வு இன்று

(சாவகச்சேரி)

டாக்டர் கலைஞானி கே.ரி குமரநாதன் தயாரிப்பில் முழு நீளத் திரைப்படம் ஒனறு விரைவில் தயாரிக்கப்படவுள்ளது.

இத்திரைப்படத்திற்கான ஆரம்பபூஜை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு கச்சாய் கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இம் முழுநீளத்திரைப்படத்தில் பாடல்கள்,சண்டைப் பயிற்சிகள் என்பனவும் அடங்கி முற்றுமுழுதாக தென்னிந்திய திரைப்படத்தின் பாணியில் அமையப் பெறும் என தயாரிப்பாளர் கே.ரி. குமரநாதன் தெரிவித்துள்ளார்.

கதை, திரைக்கதை, வசனம்,இயக்கம்,பாடல்கள் மற்றும் சண்டைப்பயிற்சி என்பனவற்றை கே.ரி.குமரநாதன்கையாள்வதுடன்அருணாசோதி இசையமைக்கவுள்ளார்.

மேலும்அண்மையில்வெளிவந்துள்ள பகுதி துளிர் விடும் தேவர்கள் ஆகிய குறும்படங்களை கே.ரி. குமரநாதன் தயாரித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5-29)

# பயிற்சி நெறிகள் விதாதா வள நிலையத்தில்

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி பிரிவின் கீழ்வரும் பயிற்சி நெறிகள் நல்லூர் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் இலவசமாக நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறிகளில் சவர்க்காரம் தயாரித்தல், சலவைத்தூள் தயாரித்தல், விற்பனை மற்றும் முகாமைத்துவம், வங்கி முகாமையாளரினால் சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் திட்டம் வழங்குதல் தொடர்பான ஆலோசனை, பொதி யிடல் தொழில்நுட்பம் என்பன பயிற்சிகளாக வழங்கப்படவுள்ளன.

பயிற்சி பெற ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் விதாதா வள நிலையத்தில் நேரில் வந்து தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என நல்லூர் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ-5)


## BCOM (1st IN COM) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

★நீண்ட நாட்களின் பின் யாழ் பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.

★A/Lல் வர்த்தகத்தில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.

**விரிவுரைகள் ஆரம்பம் :- 18-07-2015 காலை 8.00 மணி**

குறிப்பு: யாழ் பல்கலைக்கழகத்துக்குரிய BA 1st YEAR (GAQ)க்குரிய பதிவுகள் மிக விரைவில் கோரப்படும் என்பதையும் மாணவர்கட்கு அறியத்தருகின்றோம்.

(C-1558)

விபரங்கட்கு S.அருள்நங்கை (நிர்வாகி)

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

T.P No :- 0212228148
0215689477
0778469721



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி கற்கைகள் அலகு

வெளிவாரிப்புரீட்சைகள்-2012

1. கலைமாணி பகுதி-11-2012,
2. சிறப்பு கலைமாணி பகுதி-1 11 & 111 -2012

மேற்படி கலைமாணிப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 07.08.2015 (வெள்ளிக்கிழமை) வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள்பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா 500ஆகும் யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 300 இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணபப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 300க்கான காசுக் கட்டளை / தபாற் கட்டளையை சுயமுகவரியிடப்பட்ட ரூபா 40 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் உதவிப் பதிவாளர் திறந்த மற்றும் தொலைக்கல்வி கற்கைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ,திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். t ½ z gggg b t j j p d www.jfn.ac.lk/codl எனும் இணைய முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

***பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.***

***மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர். 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.***

பதிவாளர் 14.07.2015



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## விஞ்ஞானபீடம்

**விஞ்ஞானத்தில் பொதுப்பட்டத் தேர்வு -2014 நிலை 1 G, 2G, 3G**
**கணனி விஞ்ஞான பட்டத்தேர்வு -2014 நிலை 1S, 2S, 3S, 4S**
**விஞ்ஞானத்தில் சிறப்புப்பட்டத்தேர்வு -2014நிலை 3M, 4M**

**முதலாம் அரையாண்டு கற்கைநெறி இறுதித்தேர்வு**

முதலாம் அரையாண்டில் கற்பிக்கப்பட்ட கற்கைநெறி அலகுகளுக்கான கற்கை நெறி இறுதித்தேர்வுகள் ( End of Course Examinations) ஆவணி 2015இல் ஆரம்பமாகும்.

இவ்வலகுகளுக்கான கற்கை நெறி இறுதித் தேர்வில் மீள் பரீட்சார்த்தியாகத் தோற்ற விரும்பும் மாணவர்கள் பூரணப்படுத்திய தேர்வு அனுமதிப்படிவங்களை தேர்வுக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் 2015 ஆடி 29ஆம் திகதிக்கு முன்னர் விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

16-07-2015 பதிவாளர்


# ராசி பலன்

17.07.2015
(ஆடி 01, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
பிரதமை முற்பகல் 8.14மணிவரை
பூசம் பிற்பகல் 5.27 மணிவரை
இராகுகாலம் 10.30-12.00 மணிவரை
சுபநேரம்-6.00-7.30மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | செவ் |
| | கிரகநிலை | | சூரி, சந், புதன் |
| | | | குரு சுக் |
| | | சனி | ராகு |

**மேடம்** – வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், போக்குவரத்துகளால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்** – குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்** – தனவரவு திருப்திகரமாக அமையும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், உறவினர் வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும்.

**கடகம்** – நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், பயணங்களால் பலன் கிடைக்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**சிம்மம்** – தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம்.

**கன்னி** – எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசம் தரும்.

**துலாம்** – எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், சுப காரியங்கள் நடைபெறும் நாள், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** – எதிர்பார்த்த வருமானங்கள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, ... ளால் ஆதாயமுண்டு.

**தனுசு** – வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், திட்டமிட்ட பணிகளில் சில தடை தாமதங்களைச் சந்திக்க நேரிடலாம், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.

**மகரம்** – மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவலாம், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்** – உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**மீனம்** – அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என்ன செய்யப்போகிறது உச்சநீதிமன்றம்?

...அதாவது, தூக்குத் தண்டனையை ஆயுள் சிறைத் தண்டனையாகக் குறைத்த பின், ஆயுள் முழுக்கச் சிறையில் அடைத்து வைக்காமல் முன்-விடுதலை செய்ய இப்போதுள்ள சட்ட வழிவகைகள் நீடிக்கலாமா, கூடாதா? ஆயுள் தண்டனைக் கைதியை முன்-விடுதலை செய்வதற்கான வழிவகைகள் ஒருசில வழக்குகளில் மட்டும் பொருந்தாதபடி செய்யலாமா? அதாவது, என்ன நடந்தாலும் அந்த ஆயுள் கைதிகளைச் சாகும் வரை சிறையில் அடைத்து வைக்கலாமா? இப்படி ஒரு தனிவகைத் தண்டனையை நீதிமன்றமே வழங்கலாமா? கொலை செய்ததாகத் தண்டிக்கப்பட்டவருக்கு, கொலையுண்டவரின் குடும்பத்தினர் தரப்புக் கருத்தைக் கேட்காமலே தண்டனைக் குறைப்பு வழங்கலாமா?



நாம் தொடக்கத்தில் குறிப்பிட்ட குற்றம் - குற்றவாளி - தண்டனை தொடர்பான சீர்திருத்தக் குற்றவியலின் நோக்கில் இவ்வினாக்களுக்கு விடை காண்பது கடினமன்று. குற்றவாளி எவ்வளவுதான் திருந்தினாலும், மறுவாழ்வுக்கு எவ்வளவுதான் தகுதி பெற்றாலும், அவரை சாகும் வரை சிறையில் வைத்திருக்கும் தண்டனை ஒன்று இருக்கக் கூடுமென்றால், அது கொலைத் தண்டனையிலும் கொடிது. இதைப் பட்டறிவின் துணைகொண்டே என்னால் அறுதியிட்டுச் சொல்ல முடியும்.

### வினாக்களுக்கான விடைகள்

இந்த வினாக்கள் ராஜீவ் கொலை வழக்குத் தொடர்பானவை மட்டுமல்ல, சிறைப்பட்ட அனைவரின் மனித உரிமைகள் தொடர்பானவை. சிறைத் தண்டனையின் நோக்கங்கள் தொடர்பானவை. மாநில அரசுக்குள்ள அதிகாரங்கள் தொடர்பானவை. இந்த வினாக்களுக்கு இது வரை விடை காணப்படவில்லை என்று நினைக்க வேண்டாம். இப்போதுள்ள சட்டங்களிலேயே போதிய விளக்கங்கள் உள்ளன. போதவில்லை என்றால், சிறை தொடர்பான உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் உள்ளன. குறிப்பிடத்தக்க ஒன்று, வி.ஆர். கிருஷ்ணய்யர் தலைமையிலான நீதிபதிகள் ஆயம் 1980 இல் மாருராம் வழக்கில் வழங்கிய தீர்ப்பு.

ராஜீவ் வழக்குக் கைதிகளைப் பொறுத்த வரை, குற்ற நடைமுறைச் சட்டத்தின் 432 முதல் 435 வரையிலான விதிகளின்படி, மாநில அரசுக்குள்ள தண்டனைக் கழிவு மற்றும் தண்டனைக் குறைப்பு அதிகாரங்களே இந்தப் பூசலின் புயல் மையம். குறிப்பாகச் சொன்னால், பிரிவு 435 மாநில அரசுக்கு விதிக்கும் கட்டுப்பாடுகளை எப்படிப் புரிந்துகொள்வது என்பதே அடிப்படை வினா. குறிப்பிட்ட சில வழக்குகளில் மாநில அரசு, மத்திய அரசைக் கலந்துகொண்ட பிறகே செயல்பட வேண்டும் என்று இந்தப் பிரிவு 435 சொல்கிறது. இதன் இரு உட்பிரிவுகள் இருவகையான வழக்குகளைக் குறிப்பிடுகின்றன. முதல் உட்பிரிவு ஜ 435 (1) மூன்று கூறுகளைக் கொண்டது. இவற்றுள் முதல் கூறுதான் ஜ (435(1) (அ) ஸ இங்கு நம் கருத்துக்குரியது.

தண்டனைக் கழிவு அல்லது தண்டனைக் குறைப்பு வழங்குவதற்கு 432, 433 ஆகிய பிரிவுகள் வழங்கும் அதிகாரத்தை மாநில அரசு பயன்படுத்துவதானால், மத்தியக் காவல்துறை நிறுவனம் ஒன்றினால் புலனாய்வு செய்யப்பட்ட வழக்கில் மத்திய அரசுடன் கலந்தாய்வு செய்யாமல் பயன்படுத்தலாகாது.

### காலங்கடத்தும் இந்திய அரசு

ராஜீவ் கொலை வழக்கை மத்தியப் புலனாய்வு அமைப்பு புலனாய்வு செய்தது என்பதால், எழுவர் விடுதலைக்கு இவ்விதி பொருந்தும் என்பதில் ஐயமில்லை. அதனால்தான் தமிழக முதல்வர் அந்த எழுவரையும் விடுதலை செய்யும் முடிவை உடனே செயற்படுத்தாமல் இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தினார். மூன்று நாள் கெடு விதிக்கலாமா என்று கேட்பவர்களுண்டு. விதித்தால் என்ன? மூன்று நாள் போதாது என்று மத்திய அரசு கருதியிருந்தால், மாநில அரசுக்குத் தெரிவித்துக் கூடுதல் அவகாசம் பெற்றிருக்கலாமே! செய்தி தெரிவிப்பதை மட்டுமே கலந்தாய்வாக மதிக்க இயலாது என்றால், திறமான கலந்தாய்வு எப்படி இருக்க வேண்டும் என்பதை மத்திய அரசே எடுத்துரைக்கலாமே! இது கலந்தாய்வின் தொடக்கம்தான் என்பதைத் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்திலேயே சொல்லிவிட்டது. மாநில அரசு எழுதும் மடல்களைக் குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு மறுமொழியே இல்லாமல் காலங்கடத்துவதற்குப் பெயர்தான் திறமான கலந்தாய்வோ?

### ஜெயலலிதாவின் சரியான முடிவு

எழுவர் விடுதலை தொடர்பில் முதல்வர் ஜெயலலிதா செய்தது சட்டப்படியும் அறநெறிப்படியும் சரி. கலந்தாய்வு என்ற கட்டுப்பாட்டைக் காரணங்காட்டி, இந்திய அரசின் ஒப்புதல் பெற்ற பிறகே விடுதலை செய்ய முடியும் என்று காங்கிரஸ் அன்பர்கள் சொல்வது விபரீத அபத்தம்! கலந்தாய்வு (consultation) வேறு, ஒப்புதல் (concurrence) வேறு என்பதைத் தெரிந்து கொள்ளப் பெரிய சட்ட அறிவு ஏதும் தேவை இல்லை. எளிய ஆங்கில- தமிழ் அகராதியே போதும். கலந்தாய்வு என்று சட்டமியற்றியவர்களின் நோக்கம், இது தொடர்பில் மாநில உரிமையைப் பாதுகாப்பதே என்பது தெளிவு. இது நாளை உச்ச நீதிமன்றத்தில் தெளிந்துரைக்கப்படும் என்று நம்புகிறோம்.

### தர்க்கமன்று.. குதர்க்கம்

கலந்தாய்வு வேறு, ஒப்புதல் வேறு என்பதற்கு குறிப்பிட்ட சட்டப் பிரிவிலேயே அகச்சான்று உள்ளது. பிரிவு 432, உட்பிரிவு (2) இந்த வேறுபாட்டைத் தெளிவாக உணர்த்துகிறது. எவ்வாறான வழக்குகளில் மாநில அரசின் தண்டனைக் குறைப்பு ஆணை, மத்திய அரசின் தண்டனைக் குறைப்பு ஆணை இல்லாமல் நடைமுறைக்கு வராது என்று இந்த உட்பிரிவு தெளிவுபடுத்துகிறது. அதாவது, மத்திய அரசின் ஆட்சியதிகாரத்துக்கு உட்பட்ட பொருட்பாடுகள் தொடர்பான வழக்குகளில் மாநில அரசு மட்டும் தண்டனைக் குறைப்பு வழங்கினால் போதாது, மத்திய அரசும் வழங்கினால்தான் அது செயல்வடிவம் பெறும். அதாவது, மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் மாநில அரசு தண்டனைக் குறைப்புச் செய்ய முடியாது. கலந்தாய்வு என்றாலே ஒப்புதல்தான் என்றால், இந்த இருவேறு உட்பிரிவுகளே தேவைப்பட்டிருக்க மாட்டா. இரண்டும் சேர்ந்து ஒரே பிரிவாக இருந்திருக்கும்.

முதல் உட்பிரிவு கலந்தாய்வு கோருகிறது, இரண்டாம் உட்பிரிவு ஒப்புதல் கோருகிறது. அதாவது மத்திய காவல்துறை நிறுவனம் தொடர்ந்த வழக்கில், மத்திய அரசுடன் கலந்தாய்வு தேவை. மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்ட குற்றங்களில் மத்திய அரசின் ஒப்புதல் தேவை. ராஜீவ் கொலை வழக்கு முதல் வகையைச் சேர்ந்தது என்பதால், கலந்தாய்வே போதுமானது. இது முதல் வகையைச் சேர்ந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால், கலந்தாய்வு என்றாலும், இந்திய அரசின் ஒப்புதல் பெற்ற பிறகே விடுதலை செய்ய முடியும் என்று விவாதிப்பது தர்க்கமன்று, குதர்க்கம். மனித உரிமைகள் மகத்தானவை. இதை இந்தியாவின் தலைமை நீதிமன்றம் நாளைக்கு உறுதிசெய்யும் என்று நம்புவோம்!

-இணையம்- (முற்றும்)




### வாலிபரின் உடலில் உற்பத்தியாகும் மது: ஆச்சரியமளிக்கும் உண்மை

எல்லோரும் வழக்கமாக சாப்பிடுகிற உணவு வகைகளை சாப்பிட்டாலே போதும், போதை வஸ்துகள் சாப்பிட்டது போல நீடித்த போதைக்கு ஆளாகிவிடுகிறார்கள். ஆனால், மேத்திவ் ஹாக் என்ற இளைஞர் நடமாடும் சாராய வடிகலன் என நண்பர்களால் கேலியாக அழைக்கப்படுகிறார். இளமை பருவத்திலிருந்தே ஹாக்குக்கு இந்த பிரச்சினை இருந்து வந்துள்ளது. படிக்கிற வயதிலே சாப்பிட்டவுடன் மயங்கி விழுவதும், எந்த நேரமும் தூங்கிவிழும் நிலையிலும் தன்னால் இயல்பாக இருக்க முடியாமல் தலைவலி, உடல்வலி, மனத் தடுமாற்றம் ஆகியவற்றோடு போராடிக் கொண்டிருந்திருக்கிறார்.


அதுக்கு காரணம் என்ன? தானாக மதுவடித்தல் நோய் (ஆட்டொ ப்ரேவெரி சிண்ட்ரோம் - Auto-brewery syndrome) மேத்திவ் ஹாக்குக்கு 20 வருடங்களுக்கு மேலாக ஆட்டொமெடிக் ப்ரேவெரி சிண்ட்ரோம் நோய் இருந்து வருகிறது. இந்த நோய்க்கு காரணம் அவருடைய சிறுகுடலில் அதிகமாக கணப்படும் ஈஸ்ட் என்ற நுண்ணுயிர்கள்தான்.

பொதுவாக நாம் சாப்பிடுகிற அனைத்து உணவுகளிலுமே கார்போஹைட்ரேட், ஸ்டார்ச், சக்கரைசத்து அதிக அளவில் இருப்பதுண்டு, அவ்வளவையும் கொஞ்சம் கூட ஈவு இரக்கம் இல்லாமல் ஆல்கஹாலாக (Ethanal) இந்த ஈஸ்ட்டுகள் மற்றினால் என்ன கதியாகும். அவ்வளவுதான் எத்தனால் அதிக மாக சுரக்க சுரக்க, அது ரத்தத்தில் கலந்து நரம்புகள் புடைக்க சர்ரென போதை தலைக்கு ஏறிவிடுகிறது. சாப்பிட்டாலே மது அருந்தியது போல ஆகிவிட்டால் இயல்பு வாழ்க்கை எந்த அளவுக்கு பாதிக்கும், ஒரு நாளைக்கே பல வேளைகள் சாப்பிடுவோம். அவ்வளவும் ஆல்கஹாலாக மறினால், நாள் முழுக்க போதையிலேயே இருக்க வேண்டியது தான் என்கிறார் மேத்திவ் ஹாக்.





ஹாக் இறைச்சி, மீன், காய்கறிகள், கொட்டைகள் போன்ற இயற்கை உணவுகளை எடுத்துக்கொள்கிறார். இந்த உணவுகளும் என்னுடைய பிரச்சினையை தீர்த்துவிடுவதில்லை. இருந்தாலும் என்னால், ஓரளவுக்கு சமாளிக்க முடிகிறது என்கிறார்.




### கருப்பட்டி அல்வா



**தே.பொருள்கள்:-**

கருப்பட்டி- அரை கிலோ.

தேங்காய்- ஒன்றரை முறி.

தேங்காய் எண்ணை - 100 கி.

அரிசி மாவு - 100 கி.

முந்திரி பருப்பு - தேவையான அளவு, நெய் - 1 தேக்கரண்டி.

**செய்முறை:-**

முதலில் ஒரு பாத்திரத்தில் கருப்பட்டியை இடித்து போட்டு சிறிது தண்ணீர் சேர்த்து கரையும் வரை அடுப்பில் வைத்து சூடாக்க வேண்டும். கரைந்தவுடன் ஒரு பாத்திரத்தில் வடிகட்டி எடுக்க வேண்டும். ஒன்றரை முறி தேங்காயை துருவி முதல் பால், இரண்டாம் பால், மூன்றாம் பால் என எடுத்து அனைத்தையும் கருப்பட்டி கரைசலில் ஊற்ற வேண்டும். தேங்காய் பால் சேர்த்த கருப்பட்டி கரைசலில் அரிசி மாவை சேர்த்து அடுப்பில் வைத்து கிளற வேண்டும். பாதி வெந்து வரும் போது தேங்காய் எண்ணையை ஊற்றி அடுப்பின் தீயை குறைத்து அடியில் பிடிக்காமல் கிளறி கொண்டே இருக்க வேண்டும். தேங்காய் எண்ணெய் கொப்பளித்து வெளியே வரும், அதே சமயத்தில் பாத்திரத்தில் ஒட்டாமல் வரும் போது இறக்கி ஒரு தட்டில் நெய் தடவி கொட்டி அதில் முந்திரி பருப்பை தூவினால் சுடச் சுட சுவையான கருப்பட்டி அல்வா தயார். இதனை செய்ய 45 நிமிடங்கள் ஆகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்களை கொன்றொழித்தவர்களுக்கு நாம் தேர்தலில் பாடம் புகட்டவேண்டும்

## விஜயகலா தெரிவிப்பு

இறுதி யுத்தத்தின் போது எமது மக்களை கொன்றொழித்தவர்களுக்கு இம்முறை நாம் தேர்தலில் பாடம் புகட்டவேண்டும். இதேபோல் மக்களை ஏமாற்றி பிழைப்பு நடத்தும் அரசியல் தலைமைகளையும் நாம் நிராகரிக்க வேண்டும். குடாநாடு உட்பட வடக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் மட்டுமே முடியும் என்று அக்கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் பிரதி மகளிர் விவகார அமைச்சருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



வடமராட்சி பருத்தித்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்களை கொன்று குவித்தவர்கள் இன்று மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதற்காக களமிறங்கியுள்ளனர்.

இத்தகையவர்களை தமிழ் மக்கள் கடந்த ஜனாதிபதி தேர்தலில் வெறுத்து ஒதுக்கியிருந்தனர்.

ஆனால் மீண்டும் தலைதூக்குவதற்காக அவர்கள் தேர்தலில் குதித்துள்ளனர்.

எனவே இத்தகையவர்களுக்கு பாடம் புகட்டும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒருமைப்பாட்டுடன் செயற்பட வேண்டும்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மக்களின் காணிகள் இன்னமும் மீள ஒப்படைக்கப்படவில்லை.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு இன்னமும் உறுதியான தீர்வு காணப்படவில்லை.

விதவைகளின் வாழ்வாதாரத்திற்கும் உரிய நடவடிக்கைககள் எடுக்கப்படவில்லை.

அரசியல் கைதிகளின் விடுதலைக்கும் முழுமையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே புதிய ஆட்சியிலாவது இந்த விவகாரங்களுக்கு தீர்வு காணப்படவேண்டும்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மாற்று அணியினர் ஆட்சியைக் கைப்பற்றினால் பிரச்சினைகள் பூதாகரமாகவே மாறும்.

எனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை அமைப்பதற்கு ஒன்றிணைந்து அனைவரும் செயற்படவேண்டும்.

இதன் மூலமே ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சியை் உருவாக்கி பிரச்சினைகளுக்கு தீர்வைக்காண முடியும்.

குடாநாட்டு மக்கள் இந்த விடயத்தில் சிந்தித்து செயற்பட வேண்டும்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் இழைத்த தவறை நாம் இனிமேலும் செய்ய முடியாது.

எனவே எமது பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## சேவை நயப்பும் பாராட்டும்



திருமதி மேரிபிரக்சி
ரட்ணவதி கனகரட்ணம்

கடமையில் உயர்ந்து நின்றீர்
கட்டுப்பாட்டில் சிறப்பும் பெற்றீர்
மடமை நீங்கியே உரிமை பெற்றிடும்
மாணவர் சமூகம் மலர்ந்திடச் செய்தீர்
ஆவலுடன் மாணவர்கள் ஓடி வந்தே
அருஞ்செல்வம் பெறுகின்ற நிலையைத் தந்தீர்
வித்தகியே! விதந்தும்மைப் போற்றுகின்றோம்
பல்லாண்டு பல்லாண்டு வாழி ! வாழி !

சேவை விபரம்

| | |
|---|---|
| 03.06.1977 - 31.12.1979 | வ/பேயாடிகுழாங்குளம் அ.த.க. பாடசாலை |
| 01.01.1980 - 31.12.1982 | கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை |
| 01.01.1983 - 29.10.2000 | யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை |
| 30.10.2000 - 02.06.2002 | ஹற்றன் புளியாவத்தை தமிழ் மகா வித்தியாலயம் |
| 03.06.2002 - 19.07.2015 | யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை |

(C-1500)

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் ஆசிரியராக, தர இணைப்பாளராக, பகுதித் தலைவராக, உப அதிபராக, பிரதி அதிபராக இருந்து 30 ஆண்டுகள் சேவையாற்றி அகவை 60 நிறைவில் ஓய்வு பெறும் தங்களை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

ஆசிரியர் நலன்புரிக் கழகம் - யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை



## சேவை நலன் பாராட்டு



திரு.M.இராசநாயகம்
உதவிக்கல்விப் பணிப்பாளர்
(முறைசாராக் கல்வி)

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் ஒன்பது வருடங்கள் முறைசாராக் கல்விப்பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளராக சிறப்பாகச் சேவையாற்றி ஓய்வு பெறும் திரு.M.இராசநாயகம் அவர்கள் தம் ஓய்வுக் காலத்தினை தமது குடும்பத்தினருடன் சிறப்பாகக் களிப்பதற்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள் : கல்வி அபிவிருத்தி பிரிவு
வலயக்கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்.

(1152)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சுதாகரன் நிதர்சனா



வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் 19 வயதுக்குட் பட்ட பெண்களுக்கான 200 M ஓட்டப் போட்டி மற்றும் 100 M ஓட்டப் போட்டியிலும் 1st இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றதோடு சிறந்த சுவட்டு வீராங்கனை விருதையும் பெற்ற நவாலி ஊரின் புத்திரி சுதாகரன் நிதர்சனா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி) அவர்களை வாழ்த்துவதோடு இவருக்கு பயிற்சியும் ஊக்கமும் வழங்கிய உடற்கல்வி ஆசிரியை திருமதி மிதுலா ரமணன் அவர்களையும் வாழ்த்துகின்றோம்.

வலம்புரி T.C.
நவாலி கிழக்கு, மானிப்பாய்.

1149


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடிப்பிறப்பு நிகழ்வு இன்று

(தும்பளை)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்தும் ஆடிப் பிறப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளரும் கலாசார பேரவைத் தலைவருமான க.கனகேஸ்வரன் தலைமை தாங்கவுள்ளார். (இ-5-19)

# பணம், நகை திருட்டு!

(யாழ்ப்பாணம்)

**வீட்டிலிருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த வேளை வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் ஒருதொகை வெளி நாட்டுப் பணம் மற்றும் தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.**

நேற்று முன்தினம் இரவு யாழ். உரும்பிராய் ஒஸ்கா வீதியில் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்-ளதாக முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## விழிப்புணர்வு செயலமர்வு

தேசிய அருங்கலைகள் பேரவையினால் நடத்தப்படுகின்ற மாகாண மட்ட மற்றும் தேசிய மட்ட கண்காட்சி போட்டியில் பங்கு பற்றும் யாழ். மாவட்ட கைப்பணியாளர்களை விழிப்புணர்வூட்டும் செயலமர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் களிமண் உற்பத்திகள், பிரம்பு மற்றும் மூங்கில் சார்ந்த உற்பத்திகள் உலோக கைப்பணிப் பொருட்கள் ஆபரண வடிவமைப்புகள், சங்கீத உபகரணங்கள், துணியிலான கைப்பணிப் பொருட்கள், பற்றிக் உற்பத்திகள், மரச் செதுக்கல் உற்பத்திகள், கற்கள் மூல கைப்பணிப் பொருட்கள், சிரட்டையிலான உற்பத்திகள், பன்ன வேலை கைப்பணிப் பொருட்கள், கடதாசி உற்பத்திகள் என பல தரப்பட்ட பயிற்சிகள் தொடர்பான செயலமர்வு இடம்பெறவுள்ளன.

இத்துறைகளில் ஈடுபடுகின்ற வாகள் இச் செயலமர்வில் பங்குபற்றி பயன்பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாவட்டச் செயலக தொழிற்றுறைத் திணைக்கள தேசிய அருங்கலைகள் பேரவையின் மாகாண உதவிப் பணிப்பாளர் கே. நவதர்சன் தெரிவித்துள்ளார். (இ)

## தேர்தல் துண்டுப் பிரசுரம் விநியோகம்; பருத்தித்துறையில் ஒருவர் கைதானார்

(கரணவாய்)

பருத்தித்துறை நகரப்பகுதியில் தேர்தல் பிரசார துண்டுப்பிரசுர விநியோகத்தில் ஈடுபட்ட சந்தேக நபரொருவர் நேற்று முன்தினம் புதன்கிழமை பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோத முறையில் தேர்தல் பிரசார துண்டுப் பிரசுரங்களை மக்களிடம் விநியோகித்துள்ளார் என பொது மக்களால் கொடுக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

மேலும் இச்சந்தேக நபருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பருத்தித்துறை கற்கோவளம் புனிதநகரைச் சேர்ந்த 61 வயதுடையவர் என பொலிஸ் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் சுவரொட்டிகள் உரித்தெடுக்க முடியாத வகையில் ஒட்டப்படுவதாக அண்மையில் தேர்தல் திணைக்கள அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5-60)

## இசைப்பேருரை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் இசைப் பேருரை இன்று வெள்ளிக்கிழமை மாலை 6மணிக்கு காரை நகர் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இவ் இசைப்பேருரையினை சென்னைப் பல்கலைக்கழக இசைத்துறைப் பேராசிரியர் முனைவர் பிரமிளா குருமூர்த்தி வழங்கவுள்ளார்.

இதன்போது கே.கஜன் மிருதங்கத்தினையும் கே.குகபரன் வயலினையும் வாசிக்கவுள்ளனர். (இ-5)

## யாழ்ப்பாண நினைவுகள்-2 நூல் வெளியீட்டு நிகழ்வு

வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள்பாகம் 2 நூல் வெளியீட்டு விழா எதிவரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.35 மணிக்கு யாழ். பிரதான வீதியிலுள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தின் மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண வாழ்வியல் குறித்தான நனவிடைதோய்தல் கட்டுரைகளாக இலங்கையின் முன்ன்ணி நாளிதழ்களில வெளியாகியகட்டுரை களின் தொகுப்பாக வெளிவந்துள்ள இந்த நூலின் வெளியீட்டு விழாவிறகு ஹற்றன்நஷனல் வங்கியின் யாழ்ப்பாண மெற்றோகிளையின் முகாமையாளரும் யாழ இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க தலைவருமான சிவசரவணபவன் சுந்தரேஸ்வரனதலைமை தாங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையினை மட்டக்களப்பு பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் ஆறுமுகம் சௌந்தரலிங்கம் வழங்குவதுடன் மதிப்பீட்டுரையினை காவேரி கலாமன்ற இயக்குநர் ரி.எஸ் ஜோசுவாஏற்புரையினை நூலாசிரியர் வே. தபேந்தரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். நூலின் முதற்பிரதியினை திருமதி வே. இளங்கோவன் சுஜீவா பெற்றுக் கொள்ளவுள்ளார். (இ-5)

## மலசலகூடம் கையளிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஞானம் பவுண்டேசன் நிறுவனத்தினால் சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட சங்கானை கிழக்கு கிராமத்தில் 4.7 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 37 மலசலகூடங்கள் அதன் உரிய பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கானை கிழக்கு தானாவோடை கிராமத்தில் நடைபெறவுள்ளது.

மலசலகூடங்களை உரிய பயனாளிகளிடம் அரசாங்க அதிபர் கையளிக்கவுள்ளார்.

எனவே உரிய பயனாளிகள் தவறாது கலந்து கொணடு நிகழ்வைச் சிறப்பிக்குமாறு ஞானம் பவுண்டேசன் மாவட்ட இணைப்பாளர் க.சிவநீதன் கேட்டுள்ளார். (இ-5)




## விபத்துக்களை தடுத்தல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சு, வீதி அபிவிருத்தித் திணைக்களம், ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன இணைந்து நடத்தும் போக்குவரத்து வீதி முறைகளை அனுசரித்தல் மற்றும் வீதி விபத்துக்களை தடுத்தல் தொடர்பான 2ஆவது விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை யாழ். வேம்படிச் சந்திக்கு அருகில் உள்ள யா/ புனித மரியார் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை சாரதிகளுக்கான பயிற்சிக்கருத்தரங்கும் பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 3.30 மணிவரை நடத்துநர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கும் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொள்ளவுள்ள சாரதி, நடத்துநரின் பெயர் விபரங்களை அனுப்பிவைக்குமாறும் கலந்து கொள்வதை உறுதிப்படுத்துப்படுத்துமாறும் இலங்கை போக்குவரத்துச் சபையின் சாலை முகாமையாளர்களுக்கும் தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கங்களுக்கும் வடமாகாண போக்குவரத்து அமைச்சினால் கோரிக்கைக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்வது போக்குவரத்துச் சேவை ஒழுங்கு முறை அமுலாக்கத்திற்கு மிகவும் அத்தியாவசியமாக வேண்டப்படுகின்றது.

இப்பயிற்சி நெறியானது ஐந்து மாவட்டங்களிலும் நடத்துவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமாகாண மீன்பிடி போக்குவரத்து கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

போக்குவரத்து விதிமுறைகளைச் சீராக நடைமுறைப்படுத்துவதற்கும் வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கும் உரிய முன்பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்கு முறைகள் தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவை ஆகியவற்றில் கடமையாற்றும் சாரதி, நடத்துநருக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கினை நடத்தி வருகின்றது.

அத்துடன் இக் கருத்தரங்கில் சிறப்புத் தேர்ச்சி மிக்க வளவாளர்களினால் விரிவுரைகள் நிகழ்த்தப்படுவதுடன் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான கையேடும் வழங்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தேடல் நிகழ்ச்சி நல்லூரில் இன்று

யாழ். செயற்றிறன் அரங்க இயக்கம் நடத்தி வருகின்ற தேடல் நிகழ்ச்சி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது மென்திறன் விருத்தியில் அரங்கு என்ற தலைப்பில் யாழ். வேலணை மத்திய மகா வித்தியாலய நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் அ. விஜயநாதன் உரையாற்றவுள்ளார். இவர் இருள் அரங்கு என்ற எண்ணக்கருவை பல்கலைக்கழகத்தில் விருத்தி செய்யும் பணியிலும் நாடகத் தயாரிப்புக்களிலும் சிறந்த ஈடுபாடுடையவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் கருத்தரங்கில் நாடக ஆர்வலர்கள் மற்றும் மாணவர்களைக் கலந்து கொண்டு பயன்பெற்றுக் கொள்ளுமாறு செயற்றிறன் அரங்க இயக்கத்தின் நிர்வாக நிதி உத்தியோகத்தர் ந.மதனரூபி கேட்டுக் கொணடுள்ளார். (இ-5)

## தொழில் முயற்சியாண்மை விருத்திப் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

தொழில் முயற்சியொன்றை ஆரம்பிக்கவுள்ள அல்லது நடத்திக்கொண்டிருக்கும் தொழில் முயற்சியை விருத்தி செய்வதற்கு ஆர்வமுள்ள தொழில் முயற்சியாளருக்கு அவர்களது தொழில் முயற்சியாண்மை திறனை விருத்தி செய்வதற்கும் மற்றும் அவர்களது தொழில்முயற்சியை சிறந்த முறையில் கொண்டு செல்வதற்கான தொழில் திட்டம் தயாரிப்பதற்குமான பயிற்சி நெறியொன்றை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபை ஒழுங்கு செய்துள்ளது.

எனவே மேற்குறித்த பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் ஆண்,பெண் என இருபாலாரும் மாவட்ட அலுவலகம், இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை கட்டடம் சுண்டுக்குளி யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப்பணிப்பாளர் சி.சிவகெங்காதரன் அறிவித்துள்ளார். (இ-5)



யாழ்.யோக அரங்க நிறுவனம் நடத்திய சர்வதேச யோகா தின விழா அண்மையில் நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் யோக அரங்க நிறுவன இயக்குநர் எஸ். உமாசுதன் தலைமையுரையினை நிகழ்த்துவதையும் நிகழ்வில் இடம்பெற்ற யோகா ஆற்றுகையின் ஒரு பகுதியையும் கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# யாழ். பெருமாள் கோவில் விவகாரம் குறித்து இந்துக்குருமார் ஒன்றியம் விளக்க அறிக்கை

(யாழ்ப்பாணம்)

**ஈழ மண்ணில் நாராயண வழிபாடு காலாதிகாலமாக இருந்தாலும்கூட எந்தச் சந்தர்ப்பத்திலும் அது பிரிவினையைத் தோற்றவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் யாழ்.பெருமாள் கோவில் விவகாரம் குறித்து யாழ்ப்பாணம் சிவனடியானின் கடிதத்திற்கு பதில் வழங்கும் வகையில் விளக்க அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளது.**

இதுதொடர்பாக சர்வதேச இந்துமதகுருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள், செயலாளர் சிவஸ்ரீ சர்வேஸ்வர ஸ்ரீ காந்தக் குருக்கள் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

16.07.2015 ஆம் திகதி தங்கள் பத்திரிகையில் வெளிவந்த சிவனடியானின் கடிதத்திற்கு சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம் சார்பில் பதில்கள். இவ்வாறான வினாக்கள் இன்று பீடாதிபதிகளுக்கு மாத்திரமல்ல சமயத்தலைவர்கள் ஆதீன முதல்வர்களுக்கும் பொருந்தும் என நினைக்கின்றேன். பீடாதிபதிகள் பற்றி நான் கூறுவதற்கு எதுவும் இல்லை.

ஒரு ஆலயத்திற்கு குருமாாகளுடைய பரம்பரை அல்லது குருபாரம்பரிய மரபு இல்லாது இருக்குமாயின் யார் பூசை செய்வது யார் கொடி ஏற்றுவது என்பதை தீர்மானிப்பவர்கள் பரிபாலகர்கள்,மகாசபையினர்கள், அடியார்கள் ஆவார். இது பெருமாள் கோவிலுக்கும் விதிவிலக்கில்லை. ஈழ மண்ணில் நாராயண வழிபாடு காலாதிகாலமாக இருந்தாலும் கூட எச்சந்தர்ப்பதிலும் அது பிரிவினையைத் தோற்றவில்லை. அதனை எமது சமயப் பெரியார்களும் அனுமதிக்கவும் இல்லை.

பெருமாள் கோவில் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் எமது அமைப்பு சார்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஓர் கடிதம் அனுப்பியுள்ளோம்.அத்துடன் பிரதிகள் பல சமய சமூகத்தலைவர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளோம். அத்துடன் ஆலய பிரச்சினை சார்பாக தொடர்புடைய அரச அதிகாரிகள், அரசியற்கட்சித் தலைவர்கள் மற்றும் தொடர்புடையோர் என சகல தரப்பினருடனும் கலந்துரையாடியுள்ளோம்.

ஒவ்வொரு சைவசமயத்தவரும் தமது இல்லத்தில் நடைபெறும் சடங்குகளுக்கு நல்ல குருக்கள்,சிறப்பாக நடத்தும் குருக்கள் குருமார்கள் வேண்டும் என எக்கஷ்டப்பட்டாவது ஒழுங்கு செய்து சிறப்பாக நடத்துவதையும் அதேசமயம் தமது ஆலய பூசைக்கு தாங்கள் சொல்வதை கேட்கக் கூடியவராகவும் அதேசமயம் கூட்டுவது கழுவுவது முதலான ஆலய பராமரிப்புகள் வரை ஆற்றக்கூடியவரை தேடிக் கண்டுபிடித்து தாங்கள் அடிக்கடி என்ன ஐயர் என்ன என்ன பிரச்சினை என மத்தியஸ்தம் வகிக்க சந்தர்ப்பத்தினை தரக்கூடிய குருமார்களை ஒழுங்கு செய்வதையும் நாம் சகயமாக காணமுடிகின்றது. இதனை இன்று சைவ உலகம் ஏற்றுக் கொண்டு நடக்கின்றது. குருமார்கள் பரிபாலகர்களது கருத்தினை ஏற்க மறுக்கும் சந்தர்ப்பங்களினால் பிரச்சனை உருவாகின்றது. இது தான் அடிப்படை காரணம் ஆகும்.

எமது குருமார்களில் இன்று ஒருவரை ஒருவர் விமர்சிப்பது மிகப் பெருகி விட்டது. நாம் 2010ஆம் ஆண்டு முதல் இன்று வரை குருமார்களது சிறந்த தலைமைத்துவ பீடமாக ஒன்றியத்தினை உயர்த்துவதற்கு ஆற்றிய பணிகள் ஏராளம். அதனைவிட நாம் ஒவ்வொரு நற்பணிகளையும் முன்னெடுப்பதற்கு எமது குருமார்களிடம் இருந்து வரும் விமர்சனங்கள் எதிர்ப்புக்களை சமாளிப்பதற்கும் பதில் கூறுவதற்கும் எடுத்த முயற்சிகள் தான் மிக அதிகம் ஆகும். எம்மோடு சேர்ந்து பணியாற்ற முன்வராத குருமார்கள் தான் எம்மிடம் கேள்வி கேட்டது அதிகம் ஆகும். சைவ சமயத்தவன் ஒருவன் பிற மாவட்டங்களில் தனது சமய வழிபாட்டிற்கும் தனது சமய வாழ்விற்கும் போராடுவதை நாம் காண்கின்றோம். ஓர் சைவசமயத்தன் சைவத்திற்காக போராடுகின்றான் என என்னும் பொழுது நாம் பரம்பரை பரம்பரையாக சைவத்திற்கு தொண்டு செய்கின்றோம் எனக் கூறி சைவத்தினையும் சிவனடியார் களுக்கும் பதிலும் பாதுகாப்பும் கொடுக்க முடியவில்லை என்றால் நாம் செய்வது மகா துரோகம் ஆகும்.

அதேசமயம் எமது அந்தஸ்து பதவி செல்வாக்கு போய்விடும் என எண்ணுவதும் சிவத்துரோகம் ஆகும. சிவபுண்ணிய பூமியை அலங்கரிக்கும் பீடாதிபதிகள், ஆதீனங்கள், சமயத்தலைவர்கள், ஆலய அறங்காவலர்கள், பரிபாலகர்கள், இந்து அமைப்புக்கள் இவர்களுடன் சமயச் சொற்பொழிவாளர்கள் இவர்களது மௌனமும் கலையப்படவேண்டும். வெறுமனே வார்த்தைகளாலும் யாப்புச்சட்டங்களாலும் சைவத்தினைப் பாதுகாக்க பரிபாலனம் செய்கின்றோம் அறங்காவல் புரிகின்றோம் என கூறுவது எம்மை நாமே ஏமாற்றுவதாக அமைகின்றது. மேற்படி ஆலயப் பிரச்சினைகளுக்கு அடியார்கள்தான் உடனடியாக தீர்வு எடுக்க வேண்டும். விநாயக நவக்கிரக வழிபாடுகள் இல்லாத போது, வரும் புரட்டாதிச் சனிக்கிழமை ஆலயத்தினருக்கு அனயார்களால் தக்க பதில் கொடுக்கப்படும்.

பெருமாள் கோவில் சம்பவம் குருமார்களை ஒற்றுமைபபடுத்துவதாகவும் தலைமைத்துவத்தின் அவசியத்தினை உணர்த்துவதா கவும் அமையட்டும். சைவ அபிமானிகள் சைவத்தின் மீது அதிகமான பற்றுடனும் நேர்மையுடையதாகவும் தொண்டாற்ற முன்வருதல் அவசியமாகும்.

தொடர்ந்து விமர்சனங்கள் வேண்டாம்.அது எமது சமயத்திற்கு, சமய நம்பிக் கைகளுக்கு ஆராக்கியமானதாக அமையாது என தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## அமரர் அமிர்தலிங்கத்திற்கு சிலை அமைக்க நடவடிக்கை



வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வளவினுள் வடக்கின் பேரபிமானம் பெற்ற மாமனிதரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்திற்கு விரைவில் சிலை வைக்கப்படவுள்ளது.

மேற்படி மாமனிதருக்கு சிலையமைப்பது தொடர்பில் கடந்த ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி சபையில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும்வலி.மேற்கில்உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் சபை பிரதிநிதிகளும் பொதுமக்களும் எமது மண்ணின் ஈடற்ற தலைவர் அமரர் அமிர்தலிங்கத்திற்கு சிலை வைப்பது தொடர்பில் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றனர்.

எனவே மறைந்த தலைவர் அமிர்தலிங்கத்திற்கு சிலை வைப்பது தொடர்பில் பொது மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஏதேனும் கருத்துக்களை முன்வைக்க விரும்பின் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் தவிசாளர் வலி. மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் நா.ஐங்கரன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-5)

## சிறப்பு பூசைகள்

டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையின்அருள் ஒளி தர்சன மாலையும் ஆடி மாத சிறப்புப் பூசைகள் யாழ்ப்பாணத்தில்நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதியிலுள்ள இளம் கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

டென்மார்க்கிலிருந்து எடுத்து வரப்பட்ட அம்பாளின் திருவடிகளை கண்டு களிக்க அனைத்து அடியவர்களையும் வருகை தருமாறு விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

மேலும் ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் மாதத்தின் இறுதியில் வவுனியா சாந்தசோலை வீதி பூந்தோட்டத்தில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அம்பாளின் சிறப்புப் பூஜைகளும் இடம் பெறுகின்றன.அத்துடன் இலங்கை வானொலிதமிழ்ச்சேவையில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழ மையும் பிற்பகல் 4.30 மணிக்கு சிறப்பு நிகழ்ச்சியாக ஒலிபரப்பப்பட்டுவருகின்ற மையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பதவியேற்பு நிகழ்வு

யாழ்ப்பாணம் இன்னவீல் கழகத்தின் இரண்டாவது பதவியேற்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை தியாகி அறக்கொடை நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருமதி நீ. தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை முன்னாள் அதிபர் திருமதி சு. செல்வமலர் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக இன்னவீல் கழகத்தின் முன்னாள் தலைவி திருமதி சி.நளாயினி மற்றும் ரோக்கியோ சீமெந்துக் கூட்டுத்தாபன விற்பனை முகாமையாளர் க.விஜிகாந் ஆகியோரும் கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் ந.சிவகரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 9.75<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc, PHO பொறியியலாளர்<br>தொ.இ: B/4388 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 40 3/4 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/பிரான்ஸ் NOT PR<br>தொ.இ: B/4341 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 41.25 செவ் 12 இல்<br>உயரம்: 164 cm<br>தகைமை/தொழில்: BSc, MSc/ பொறியியலாளர்<br>தொ.இ: B/4390 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 59.05<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ வங்கி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/4392 |

இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 47.25<br>உயரம்:-5'3"<br>தகைமை/தொழில்: BA, HNDA/ ஆசிரியர்<br>தொ.இ: G/854 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 39.75 செவ்.7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L தனியார்<br>தொ.இ: G/856 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 65.5<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: HNDE, BSc/ அரச தொழில்<br>தொ.இ: G/857 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 20.75 செவ்.12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்/<br>தொ.இ: G/860 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுத் திறனாளிகளுக்கு விசேட அடையாள அட்டை

(குருமன்காடு)

**வடக்கு மாகாணத்தில் வதியும் மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ தகவல்களுடன் கூடிய விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளது என வடமாகாண சுகாதார அமைச்சரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு மாகாணத்தில் வதியும் மாற்றுதிறனாளிகளை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் அவர்களின் தரவுகள் கணனி மயப்படுத்தப்படவுள்ளன.

வடக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கான விசேட தேவைக்குட்பட்டவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். குறிப்பாக நடந்து முடிந்த யுத்தத்தினால் தமது அவயவங்களை இழந்த பலர் விசேடதேவையுடையவர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். எனினும் இவர்களின் எண்ணிக்கை, விசேட தேவையின் தன்மை போன்ற தரவுகள் தெளிவாக இல்லை. இதற்காக சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் சமூக சேவைகள் திணைக்களத்தினால் தரவுகள் திரட்டும் வேலை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான பரீட்சார்த்த நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக தொண்டர்களை வேலைக்கு அமர்த்தி வீடுவீடாகச் சென்று தரவுகள் சேகரிக்கப்பட்டு விபரங்கள் கணனி மயப்படுத்தப்படுமெனவும் தரவுகளின் அடிப்படையில் சுகாதார திணைக்களத்தினால் அவர்கள் தொடர்பாக மருத்தவ பரிசோதனைகள் விசேட நடமாடும் மருத்தவ சேவைகள் மூலம் நடத்தப்பட்டு மருத்துவ நிலை தொடர்பான விபரத்துடன் கூடிய விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதன்மூலம் விசேட தேவையுடையவர்களுக்கான தேவைகளை இலகுவாக இனங்காணமுடியும். அவர்களுக்கான விசேட செயற்றிட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தவும் உத்தேசித்துள்ளதாக அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)





யாவருக்கும்சேவை என்ற தொனிப்பொருளில்சங்கானை லயன்ஸ்கழகம்சார்பில்அதன் தலைவர் லயன் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் நேற்று முன்தினம் சூழல் எமது நண்பன் என்ற லயன்ஸ் கழகத்தின் கோட்பாட்டில் மு/தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலையின் 25 ஆண்டுகள் நிறைவு வெள்ளி விழா ஞாபகார்த்தமாக பயன் தரும் மலைவேம்பு மரக்கன்றுகள் நாட்டப்பபட்டன.

## இளைஞனைக் காணவில்லை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த விசுவலிங்கம் நிஷாந்தன் என்ற இளைஞனை கடந்த இரு மாத காலமாகக் காணவில்லையென வவுனியா பொலிஸ் நிலையத்தில் குடும்பத்தினரால் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது, விசுவலிங்கம் நிஷாந்தன் (வயது- 21) என்ற இளைஞன் வேலை நிமிர்த்தம் காரணமாக கடந்த 22.04.2015 அன்று வவுனியா சென்றுள்ளார்.

வவுனியா சென்ற நிலையில் வீடு திரும்பாத பிரஸ்தாப இளைஞனை பல இடங்களிலும் உறவினர்கள் தேடிய போதும் அவர் தொடர்பான தகவல் கிடைக்கவில்லை. இதனையடுத்து உறவினர்களால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் அன்றைய தினமே முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

அதனைத்தொடர்ந்துஅனைத்துபொலிஸ் நிலையங்களுக்கும் இது தொடர்பான தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இவர் தொடர்பான தகவல் விரைவில் கிடைக்கப் பெறுமென வவுனியா பொலிஸ் நிலையத் தகவல் தெரிவிக்கின்றது. (2-15)

## வவுனியாவில் நூதனமுறையில் திருட்டு; 7 பவுண் தாலியை பறிகொடுத்த பெண்!

வவுனியா, நொச்சிக்குளத்தை சேர்ந்த பெண் ஒருவர் பணத்திற்கு ஆசைப்பட்டு தனது 7 பவுண் தாலிக்கொடியை கடந்த 13ஆம் திகதி திருடர்களிடம் பறிகொடுத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நாகரிகமாக உடையணிந்த ஆணொருவரும், பெண்ணொருவரும் நொச்சிக்குளத்தை சேர்ந்த பெண்மணியை அணுகி தாங்கள் இரத்தினபுரியிலிருந்து வந்திருப்பதாகவும் தங்களிடம் இரத்தினக்கல் ஒன்று இருப்பதாக சிங்களம் மற்றும் தமிழ் கலந்த கொச்சைத் தமிழில் சம்பாஷித்ததுடன் இரத்தினக்கல்லின் பெறுமதி 15 இலட்சம் ரூபா என தெரிவித்தனர். அத்துடன் தாங்கள் வெளியூர் என்பதால் தங்களை நகை உரிமையாளர்கள் நம்பவில்லை. அதனால் இந்த இரத்தினக்கல்லை விற்றுத் தந்தால் ஒரு இலட்சம் தருவதாக தெரிவித்த அவர்கள், துணியில் சுற்றி கட்டப்பட்ட கல் ஒன்றை அப் பெண்ணிடம் கொடுத்துள்ளனர்.

இரத்தினக்கல்லை விற்றுத்தர சம்மதம் தெரிவித்த அப்பெண்ணிடம் திருடர்கள் 15 இலட்சம் ரூபா இரத்தினக்கல்லை எடுத்துச் செல்லும் நீங்கள் நம்பிக்கைக்கு ஏதாவது கொடுத்துவிட்டு செல்லுங்கள் என்று கூறியதிற்கு இணங்க பிரஸ்தாப பெண் தாலியை கழற்றி கொடுத்துவிட்டு சென்றுள்ளார். கடையில் சென்று பார்த்த போது துணியில் சுற்றப்பட்டு இருந்தது ஒரு சிறிய கருங்கல் என தெரிய வந்திருந்தது.

ஏமாற்றப்பட்ட குறித்த பெண் தாலிக் கொடியை வாங்கியவர்களை தேடிச் சென்ற போது அவர்கள் மாயமாகியிருந்தனர். பறிகொடுத்த தாலியின் பெறுமதி சுமார் 3இலட்சத்து 50ஆயிரம் ரூபாவாகும். இது தொடர்பான விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருவதாகவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-250)




## டோம்சோபர் -ரவிகரன் சந்திப்பு; பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன

(முல்லைத்தீவு)

இலங்கைக்கான பிரித்தானிய தூதரகத்தின் அரசியல் செயலாளர் டோம் சோபரிக்கும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கும் இடையில் சந்திப்பொன்று முல்லைத்தீவில் இடம்பெற்றது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவில் உள்ள ரவிகரனின் இல்லத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் வரை நீடித்தது.



இது தொடர்பில் ரவிகரன் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னரான அரசியல் சூழல், நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல் பற்றிய விரிவான பார்வை, தமிழர் தாயகத்தில் இனப்பரம்பல் கோலத்தை மாற்றுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள், தமிழ் இளைஞர்கள் மீது திணிக்கப்படும் புலம் பெயரும் நிர்ப்பந்தம், சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படும் மத அடையாளங்கள் திணிக்கும் நடவடிக்கைகள், தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறிய கடற்றொழில் நடவடிக்கைகள் உள்ளடங்கலாக பல விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 கிராம சேவையாளர் பிரிவுகளில் நிரந்தர கிராம சேவையாளர்களில்லை

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

(மல்லாவி)

**முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள 62 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. இதில் 25 கிராம சேவையாளர்கள் பிரிவுகள் நிரந்தர கிராம சேவையாளர்கள் இன்றி இயங்குவதால் தாம் பல்வேறுபட்ட பாதிப்புக்களை எதிர்கொள்வதாக கிராம மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.**

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 15 கிராம சேவையாளர்கள் பிரிவுகள் உள்ளன.

இவற்றில் 8 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு மட்டுமே நிரந்தர கிராம சேவையாளர் இன்றி பதில் கிராம சேவையாளருடன் இயங்கி வருகின்றது.

இதேபோல் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் 20 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ள நிலையில் 12 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு மட்டுமே நிரந்தர கிராம சேவையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மிகுதி எட்டு கிராம சேவையாளர் பிரிவிற்கும் பதில் கிராமசேவையாளர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

இதேவேளை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 27 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ள நிலையில் 17 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு மட்டுமே நிரந்தர கிராம சேவையாளர்கள் கடமையாற்றுகின்றனர்.

மிகுதி 10 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் பதில் கிராம சேவையாளர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

ஒட்டுமொத்தமாக 25 கிராம சேவையாளர் பிரிவுகளில் நிரந்தர கிராம சேவையாளர்கள் நியமிக்கப்படாமையால் பொதுமக்கள் தமக்கு வழங்கப்படுகின்ற சமுர்த்தி நிவாரணம், வாழ்வாதார உதவித் திட்டங்கள் உட்பட தேசிய ஆள் அடையாள அட்டை, வாக்காளர் பதிவுகள், புதிய குடும்ப அட்டைப் பதிவுகள், நேர்முகப் பரீட்சைக்கான நற்சான்றிதழ் பத்திரம், வாக்காளர் பதிவு உறுதிப்படுத்தல் ஆகிய விடயங்கள் நிரந்தர கிராம சேவையாளர்கள் நியமிக்கப்படாமல் இருப்பதால் கடமையிலுள்ள பதில் கிராம சேவையாளர்களைத் தேடி அலைந்து திரிய வேண்டிய் நிலை காணப்படுவதாக பாதிக்கப்பட்ட பொதுமக்கள் குற்றம் சாட்டுக்கின்றனர்.

மேற்படி கிராம சேவையாளர் வெற்றிடங்கள் மக்கள் மீள்குடியேறிய காலப்பகுதியில் இருந்து காணப்படுவதாகவும் இளைப்பாறிச் சென்ற கிராம சேவையாளர் வெற்றிடங்களுக்கும் ஆளணிகள் நியமிக்கப்படாது இருப்பதாகவும் பொதுமக்கள் சுட்டிகாட்டுகின்றனர். (2-15)

## ஆடிப்பிறப்பு நிகழ்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணை தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆடிப்பிறப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய அதிபர் சி.ஏகாம்பரம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் போது ஆடிக்கூழ் காய்ச்சி சிறப்பு நிகழ்வுகள் இடம்பெறுவதுடன் ஆசிரியர்கள், மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

மேலும் இந்நிகழ்விற்கு முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் செந்தூர்ச் செல்வன் விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (2-5-29)




## வவுனியா மாவட்ட

# பிரஜைகள் குழுத் தலைவர் விசாரணையின்பின் விடுவிப்பு

(மல்லாவி)

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுத்தலைவரும் வவுனியா மாவட்ட காணாமற்போனோரை கண்டறியும் சங்கத்தின் தலைவருமான கிருஷ்ணபிள்ளை தேவராசா (வயது 61) நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பிலுள்ள பயங்கரவாத புலனாய்வு பிரிவின் 2 ஆவது மாடியில் மூடிய அறையொன்றில் வைத்து மூன்று அதிகாரிகளினால் சுமார் நான்கு மணிநேர தொடர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த வாரம் பிரஜைகள் குழுத்தலைவரின் நெடுங்கேணியிலுள்ள அவரது வர்த்தக நிலையத்திற்கு சென்ற வவுனியா மாவட்ட பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்பிலுள்ள பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் தலைமையகத்தின் இரண்டாவது மாடியில் அதிகாரி விமலசூரியா என்பவரை சந்திக்குமாறு அழைப்பாணையொன்றை வழங்கி விட்டுச் சென்றுள்ளார்.

இதற்கமைய நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 9.50 மணிக்கு மேற்படி தலைமையகத்தின் இரண்டாவது மாடிக்கு வடக்கு , கிழக்கு மாகாண சிவில் பாதுகாப்பு அமையத்தின் இரண்டு சட்டத்தரணிகளுடன் சென்ற தேவராசாவை மட்டும் விசாரணைக்காக உள்ளே அழைத்துச் சென்ற குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் சட்டத்தரணிகளைத் திருப்பி அனுப்பி வைத்துள்ளனர்.

முற்பகல் 9.50 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரையிலான சுமார் நான்கு மணிநேர விசாரணையில் வன்னி இறுதியுத்தத்திற்கு முற்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கு அமைய தன்னிடம் விசாரணைகள் நடைபெற்றதாக வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் இச் சம்பவம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு கூறினார். (2-15)



நாட்டை போதைப்பொருளற்ற நாடாக மாற்றவும் ஜனாதிபதியின் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்தும் நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் விழிப்புணர்வு கருத்தரங்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஷ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவிலான பாவனையில் உள்ள போதைப் பொருட்களை தடுக்கும் வகையிலும் குறித்த கருத்தரங்கு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் மதகுருமார், வைத்தியர்கள், கரைச்சிப் பிரதேச செயலக ஊழியர்கள், கிராம சேவையாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# வன்னி மாவட்ட தேர்தல் தொகுதியில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் விபரம்

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத்தேர்தலில் வன்னி மாவட்ட தேர்தல் தொகுதியில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் பற்றிய விபரத்தினை தேர்தல் ஆணையாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இதற்கமைய வன்னித்தேர்தல் தொகுதியில் இரண்டு இலட்சத்து 52ஆயிரத்து 777 வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ள நிலையில் 18அரசியல் கட்சிகளும் 10 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடவுள்ளன.

இவற்றின் சார்பில் 252 வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர்.

தமிழரசுக்கட்சி சார்பில் சிவசக்தி ஆனந்தன், வினோநோதராதலிங்கம், செல்வம் அடைக்கலநாதன், றோய் ஜெயக்குமார், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, வைத்திய கலாநிதி சி.சிவமோகன், பெருமாள் பழனியாண்டி, சாள்ஸ் இருதயநாதன், கந்தையா சிவநேசன் ஆகியோரும் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் சிவநாதன் [illegible] பெருமாள், ச.சிவகுமார், க.தெய்வேந்திரன், மோ. பிரியா, வீ. கலைச்செல்வன், ஆ.உதயசேகர், மா.கேதீஸ்வரநாதன், ந.சுகுமார் ஆகி யோரும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் சிவபாதம் கஜேந்திரகுமார், எஸ்.எம். ஜி.நாதன், சிவரதி ராஜ்குமார், வீ.திகாஸ் விக்னேஸ்வரன், இந்திராணி விவேகானந்தன், செ.பாலசுப்பிரமணியம், க.பார்த்தீபன், ப.ஜெனன், இ.பிரபாகரன் ஆகியோரும் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் [illegible] ரோகண கமகே, வீ.ஜெயதி[illegible]ந்தன், வி.ஜெனகன், எஸ்.கருணதாசா, முகமட் சுபியான், அபுல் கறிம், யேசுதாசன் செபமாலை மார்க் ஆகியோரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் சார்பில் முத்தலி பாபா பாரூக், எஸ். அப்துல் றியாஸ், ஆர். இஸ்மார்த், என்.எம்.பாரிஸ், சி.எம்.யாசிந், பி.எஸ்.சுபாரி, எஸ்.கமிட் காகிஸ், எம்.எம்.சஜிடீன், என்.எம்.பாசான் ஆகியோ ரும் பிரஜைகள் முன்னணி சார்பாக இரா.சுப் பிரமணியம், க.துஷ்யந்தன், க.நவரட்ணம், ர.ரவிக்குமார், ந.தங்கராஜா, இ.துஷ்யந்தன் விக்டர், செ.பீரீஸ், த.ஜெயராணி, வீ.சசிக்குமார் ஆகியோர் பிரதான கட்சிகள் சார்பில் களத்தில் இறங்கியுள்ளனர். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனதில் உறுதி வேண்டும்!



**வி**க்கிரமபுரத்தை ஆட்சி செலுத்தியவிஜயதுங்கஎன்னும்மன்னன் துணிவும் ஞானமும் உறுதியும் கொண்டவன்.

ஒரு நாள் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். அடர்ந்தக் காட்டில் ஒரு அந்தணன் வில்வப் பழங்களை வைத்துக் கொண்டு யாகம் வளர்த்துக் கொண்டிருந்தான். அதைப் பாத்த மன்னன் அந்தணரை அணுகி ஏதோ கேட்க எண்ணினான். பிறகு எதுவும் கேட்கமால் திரும்பி விட்டான்.

பிறகு சேவகர்களுடன் வேட்டையாடச் சென்றான் மன்னன். வெகு நேரம் வரை வேட்டையாடி விட்டு மன்னன் திரும்பினான்.

அப்போது அந்தணன் தீவிரமாக யாகம் செய்து கொண்டிருப்பதைக் கண்டான் மன்னன்.

அந்தணனை அணுகி நீ இந்த வில்லப் பழங்களை கொண்டு யாகம் செய்வதன் கருத்து என்ன? இதனால் என்ன பயன் ஏற்படும்? என்று கேட்டான் அரசன்.

அக்கினி தேவன் மன மகிழ்வோடு எனக்குக் காட்சி அளிப்பார். வரமும் தருவார். இந்த யாக குண்டத்திலிருந்து ஒரு தங்க வில்வப் பழமும் எனக்கு கிடைக்கும்.

அதற்காகவே வெகு நேரமாக யாகம் செய்துகொண்டிருக்கிறேன் ஆனால் இன்னும் காட்சியளிக்கவில்லைகாரணமும்தெரியவில்லை என்று ஒரு ஏகத்தோடு கூறினான் அந்தணன்.

அப்படியானால் என்னிடம் ஒரு வில்வபபழத்தைக்கொடு உனக்காக நான் யாகம் செய்கிறேன் அக்கினி தேவன் மனசாந்தியுடன் காட்சியளிப்பார் என்றான் மன்னன்.

அதற்கு அந்தணன் அலட்சியமாக உள்ளத் தூய்மையும் பக்தியும் இருந்தால் அல்லவா அக்கினி தேவனைக் காண இயலும். புனிதத்துடன் பரிவு பொங்க நான் காலையில் இருந்து தவம் செய்து கொண்டிருக்கிறேன். எனக்கே காட்சி கிடைக்கவில்லை என்றால் உனக்கு மட்டும் எவ்வாறு கிடைத்து விடும்? என்று சலிப்போடு கூறினான்.

அதைப்பற்றி உனக்கு கவலை வேண்டாம் எனக்கு ஒரு விழ்வப் பழத்தைக் கொடு வியப்படைத்தக்க செயல் புரிந்து காட்டுகிறேன் என்று சொல்லி அவன் கையிலிருந்து ஒரு விழ்வப் பழத்தை வாங்கினான். பிறகு மன்னன் மனதை ஒரு நிலைப்படுத்தி தியானத்தில் ஆழ்ந்தான். அதன் பின் அக்கினி தேவனே! இதோ இந்த விழ்வப் பழத்தை அளிக்கிறேன். உனக்குக் கருணை உண்டாகவில்லை என்றால் என் தலையை உனக்கு அளிக்கப் போகிறேன் என்று கூறி தன் கையில் இருந்த விழ்வப் பழத்தை யாக குண்டத்தில் போட்டான்.

மறு நொடியில் யாக குண்டத்திலிருந்து தங்க விழ்வப்பழம் ஒன்று தோன்றியது.

அதைத் தொடர்ந்து அக்கினி தேவனும் தோன்றி உனக்கு என்ன வேண்டும்? என்று கேட்டார் அரசனிடம்.

மன்னன் வணங்கி அக்கினி தேவனே! இதோ நிற்கும் அந்தணன் நினைப்பது போல் கிடைக்க வேண்டும். என்பது தான்தாங்கள் அருள வேண்டிய வரம் என்று அவனுக்குப் பரிந்து கேட்டான் மன்னன்.

அப்படியே ஆகக்கடவது மேலும் நீயும் செழிப்போடு வாழ்வாயாக! உன் அரண்மனைக் கருவூலம் என்றும் நிறைந்திருக்கும் என்று அந்தணனுக்கும் மன்னனுக்கும் சேர்த்து வரம் அருளினார்.

அதைக்கண்டு வியப்புற்ற அந்தணன் அக்கினி தேவரே! நான் வெகு நேரமாகத் தவம் செய்து கொண்டிருந்தும் எனக்கு காட்சி அளிக்காமல் மன்னனுக்கு சிறிது நேரத்திலேயே காட்சி அளித்தீரே அது ஏன்? என்று கேட்டான்.

உலகில் வலிமையான சக்திக்குதான் விரைவில் வெற்றிகிட்டுமே தவிர உன்னைப் போன்ற சுயநலம் கொண்ட மந்தமான சோம்பேறிக்கு அவ்வாறு கிடைக்காது என்று கூறி அக்கினிதேவன் மறைந்துவிட்டார்.

அந்தணன் தங்க விழ்வப்பழத்துடன் புறப்பட்டான்.

அரசன் அரண்மனைக்குத் திரும்பி சென்றான்.

அப்போது அந்த வாலிபன் ஒருவன் மன்னனைக் காண வந்தான்.

மன்னனிடம் தன்னுடைய தவவலிமையால் பித்தளையைப் பொன்னாக மாற்ற இயலும் என்றான் அந்த வாலிபன்.

அவ்வாறே செய்யும்படி மன்னன் அனுமதித்தான்

பெரியபித்தளையை உருக்கி அதன்மீது தன் மடியில் வைத்திருந்த ஒரு பொடியைத் தூவினான்.

அவன் தூவுகையில் ஒரு அரக்கன் தோன்றி அந்தப் பொடி பித்தளை மீது படாமல் தடுத்து விட்டான். ஆகையால் பித்தளை பழையபடி பித்தளையாகக் காணப்பட்டது.

அந்த அரக்கன் மன்னன் கண்ணுக்கு மட்டுமே புலப்பட்டான்.

வாலிபன் திகைத்து தனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை தலை கவிழ்ந்தான்.

உடனே மன்னன் அவனிடம் இருந்து பொடியை வாங்கி அந்தப் பித்தளை மீது தூவினான். அப்போது இந்த அரக்கன் தடுக்காமல் சிரித்து கொண்டே மறைந்துவிட்டான். அதுவும் மன்னன் கண்களுக்கே தெரிந்தது.

பித்தளை பொன்னாக மாறியது!

அனைவரும் வியப்படைந்தனர்.

அந்தண வாலிபன் மன்னனை வணங்கி தான் தெரிந்து கொள்ள வேண்டியவற்றை தெரிவிக்குமாறு வேண்டுக் கொண்டான். மன்னனும் அவ்வாறே தெரிவித்தான்.




- 1762 - ரஷ்யாவின் மூன்றாம் பீட்டர் கொல்லப்பட்டதை அடுத்து அவனது மனைவி இரண்டாம் கத்தரீன் அரசியானாள்.
- 1815 - பிரான்சில் நெப்போலியன் பொனபார்ட் பிரித்தானியர்களிடம் சரணடைந்தான்.
- 1841 - முதலாவது பஞ்ச் இதழ் லண்டனில் வெளியிடப்பட்டது.
- 1911 - யாழ்ப்பாணத்தில் தேசவழமைச் சட்டத்தின் திருமண விதிகளுக்கு மாற்றாக "யாழ்ப்பாண திருமண சிறப்புச் சட்டம்" கொண்டுவரப்பட்டது.
- 1918 - போல்ஷெவிக் கட்சியின் உத்தரவின் பேரில் ரஷ்யாவின் இரண்டாம் நிக்கலாசும் அவனது குடும்பத்தினரும் கொல்லப்பட்டனர்.
- 1918 - டைட்டானிக் கப்பலில் இருந்து 705 பேரைக் காப்பாற்றிய 'கர்பாத்தியா' என்ற கப்பல் அயர்லாந்துக்கருகில் மூழ்கியதில் 5 பேர் கொல்லப்பட்டனர்.
- 1936 - ஸ்பானிய உள்நாட்டுப் போர்: ஸ்பெயினில் அண்மையில் அமைக்கப்பட்ட இடதுசாரி அரசுக்கெதிராக இராணுவக் கிளர்ச்சி ஆரம்பமாகியது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: முதற் தடவையாக நேப்பாம் குண்டுகள் அமெரிக்காவினால் பிரான்ஸ் மீது போடப்பட்டது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்காவின் ஹாரி எஸ். ட்ரூமன், பிரித்தானியாவின் வின்ஸ்டன் சேர்ச்சில், சோவியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் உலகப்போர் தொடர்பான தமது கடைசி உச்சி மாநாட்டை ஜேர்மனியின் பொட்ஸ்டாம் நகரில் ஆரம்பித்தனர்.
- 1955 - கலிபோர்னியாவில் டிஸ்னிலாண்ட்டின் ஆரம்ப நிகழ்வுகள் தொலைக்காட்சி மூலம் காண்பிக்கப்பட்டது.
- 1967 - நாசாவின் சேர்வயர் 4 ஆளில்லா விண்கலம் சந்திரனில் "சைனஸ் மெடை" என்ற இடத்தில் மோதியது.
- 1975 - அமெரிக்காவின் அப்பல்லோ விண்கலமும் சோவியத்தின் சோயுஸ் விண்கலமும் விண்வெளியில் ஒன்றாக இணைந்தன. இரண்டு நாடுகளின் விண்கலங்கள் ஒன்றாக இணைந்தது இதுவே முதற் தடவையாகும்.
- 1976 - கிழக்குத் தீமோர் இந்தோனேசியாவுடன் இணைக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1941 - பாரதிராஜா, இந்தியத் திரைப்பட இயக்குனர
- 1954 - ஏங்கலா மெர்கல், ஜெர்மனி நாட்டு அரசியல்வாதி
- 1971 - சௌந்தர்யா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை (இ. 2004)

### இறப்புகள்

- 1918 - ரசியாவின் மன்னர் இரண்டாம் நிக்கலாஸ் (பி. 1868)

அலெக்சான்ட்ரா ஃபியோதரொவ்னா, அரசி (பி. 1872)
ஒல்கா, இளவரசி (பி. 1895)
தத்தியானா, இளவரசி (பி. 1897)
மரீயா, இளவரசி (பி. 1899)
அனஸ்தாசியா, இளவரசன் (பி. 1901)
அலெக்சி, இளவரசன் (பி. 1904)

- 1972 - எமிலியானுஸ் பிள்ளை, யாழ்ப்பாணத்தின் முதலாவது தமிழ் ஆயர், (பி. 1901)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 241

# அஹங்காரத்தை விடுதல்

...சிரிப்பதற்குக்கூட நாம் கட்டுப்பாடுகளை வைத்துக்கொண்டிருக்கிறோம்! பண்பான முறையில் சிரிப்பதற்குக்கூட, பெயரளவிலான சமூக ஒழுக்க விதிமுறைகள் உங்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறது.

குழந்தைகள் சிரிக்கும் பொழுதுகூட, அவர்களை நெறிப்படுத்துகிறோம். அவர்களுடைய இயல்பான வழிகளில் நாம் குளிர்ந்த தண்ணீரைத் தெளிப்பதைப் போலச் செயற்படுகிறோம். உடனே நாம் அவர்கள் போதுமான அளவு சிரித்துவிட்டதாகச் சொல்லிவிடுகிறோம்! அவர்களது சிரிப்பைக் கூட நெறிப்படுத்த முயற்சி செய்கிறோம்.

தாய்மார்கள் தங்கள் பெண் குழந்தைகளிடம் ஆம்பளமாதிரி சிரிக்காதே; பொம்பள மாதிரி சிரி என்று சொல்வதைக் கேட்டிருக்கிறேன். சிரிப்பை எவ்வாறு பண்படுத்த முடியும்? சிரிப்பு உங்கள் இருப்புத் தன்மையில் இருந்துவரும் ஒரு விடயம்.

நான் சொல்கிறேன், நீங்கள் உங்கள் குழந்தைகளை நெறிப்படுத்துவதெல்லாம், அவர்களையும் உங்களைப் போல் வெறுமனே மந்தமாகவும் நடைப்பிணமாகவும் ஆக்குவதற்குத்தான். நீங்கள் உங்களை முழுமையாகப் பிரதியெடுக்கும் வரை ஓயமாட்டீர்கள்.

இந்த வருடம் அமெரிக்கா சென்றிருந்த பொழுது சில குழந்தைகளுடன் கொஞ்ச நேரத்தைக் கழித்தேன். அவர்களுடன் சுமார் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தேன்.



அவர்களை எவ்வளவு சிரிக்க வைக்க முயன்றும், அவர்கள் சிரிக்காதது கண்டு எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

இன்றைய நாட்களில் குழந்தைகள் ஒரு போலியான பக்குவத்தைப் பெற்று, சிரிக்காமலே சமாளித்து விடுகிறார்கள். குழந்தையிலேயே சிரிக்கவில்லை என்றால் அவர்கள் வளர்ந்த பிறகு என்ன செய்யப்போகிறார்கள்? என்னால் அதைத் தாங்க முடியவில்லை.

மக்கள், என்னுடைய சிரிப்பு தொற்றும் தன்மையுடையதாக இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், முதன்முறையாக அந்தச் சிறுவர்களுடன் என்னுடைய சிரிப்பு தொற்றும் தன்மையை இழந்ததுபோல் தோன்றியது! அவர்கள் அதே பக்குவமான முகத்துடன் என்னை வெறுமனே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் என்னையும் கடுமையாக்கி விடுவார்களோ என்ற அச்சத்தில் அங்கிருந்து வந்துவிட்டேன்!


பாருங்கள். பக்குவத்திற்கும் சிரிப்பைத் தவிர்ப்பதற்கும் சம்பந்தமில்லை. ஆனால், எவ்வாறோ, நாம் பக்குவமடைந்துவிட்டால் தானாகவே கொஞ்சமாகத்தான் சிரிக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். சிரிப்பு மிகவும் பலம் வாய்ந்தது.

ஏனெனில், அது சக்தியை உங்கள் மையத்தில் இருந்து வெறி விளிம்பிற்குக் கொண்டு வருகிறது.

நீங்கள் என்னுடைய வகுப்புகளில் அமர்ந்தால், பெரும்பாலான சமயங்களில் சிரிப்பு மட்டுமே இருக்கும். ஏதோ ஒரு நகைச்சுவையோ அல்லது ஒரு கதையோ சொல்லப்பட்டு, எல்லோரும் சிரித்துக்கொண்டிருப்பார்கள். நான் ஒருபோதும் கடுமைத்தனம் உள்ளே புக அனுமதிப்பதே இல்லை.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து–190

...மனுசப்பய கெட்டசாதிப்பய. எலி களவான்டுட்டுப் போனதையும் எடுத்துத்தின்டுபுட்டு, அந்த எலியையும் சேத்துத் தின்னுபுடுறான்.

வங்காடுகள்ல அலஞ்சு அலஞ்சு கொண்ணவாயன் கடைசியாக் கண்டேபுடிச்சுப்புட்டான் ஒரு எலிச் செலவ.

இத்த வேட்டியப்பொத்துனாப்புல ஒதறி இடுப்புல கட்டி, அக்கினி குண்டத்துல போட்டாலும் எரிய மாட்டேன்னு அழுக்குப் புடிச்சு நிக்கிற துண்டத் தலையில உருமாக் கட்டி, போட்டான் கடப்பாரையப் பொந்துல, பொது பொது பொதுன்னு எறங்குது கடப்பாரை, போயிக் கிட்டேயிருக்கு பொந்து.

எ....எ....எங்க போனாலும் வி....வி.....வி....விடமாட்டேண்டி.

மம்படடி கடப்பாரையை மாத்தி மாத்திப் போட்டு பத்துப் பதினோரு பாகம் கடந்து போனா பொந்தாங் குழியில பளிச்சுன்னு தெரியுது அஞ்சாறு இருங்கச் சோளக் கருது.

இன்ன அளவுன்னு இல்ல கொண்ணவாயனுக்கு வந்த சந்தோசம். புதையலக் கண்டவன் மாதிரி பூரிச்சுப் போனான் பூரிச்சு.

போ....போ...போங்கடி பிள்ளான்னு கடப்பாரையையும் மண்வெட்டியையும் வெறுந்தரையில வீசிட்டு ரெண்டு கையையும் நீட்டி அள்ளுனான் மண்ணோட மண்ணாக் கெடந்த இருங்கச் சோளக் கருத.

கருதையும் அள்ளிப்பிடலாம்; களவாண்ட எலியையும் அமுக்கிப்புடலாங்கற வெறியில வெரசு வெரசாப் பள்ளம் பறிச்சு உள்ளவிட்டான் கைய.

அம்புட்டுத்தான்!

எலியை முழுங்கிட்டுப் பொந்துக்குள்ள சுருண்டு கெடந்த கருநாகம் பொட்டுன்னு போட்டுத் தள்ளிருச்சய்யா கொண்ணவாயன.

யா....யா...யாத்தேன்னு தெறிச்சு விழுந்தான் கொண்ணவாயன். கடிவாயிலிருந்து விறுவிறுன்னு ஏறுது வெசம். வாடி வெளியன்னு வலி உள்ள போயி உசுர இழுக்குது.



செத்தவடத்துல வலது கண்டு தெரியாமப்போச்சு. குழுவெட்டுன புழுதி மண்ணுல கெடந்து உருளுது இத்து எலும்பாப் போன ஒத்தநாடி ஒடம்பு. ஓங்கிக் கத்தவும் முடியல.

கத்துனாலும் சத்தம்போயி முடியிற எடத்துல ஒரு ஆளுமில்ல. வெசம் ஏற ஏறப் பச்சத்தண்ணியாச் சில்லுன்னு போச்சு மேனி; இன்னொரு கண்ணும் மங்குது; எதைப் பாத்தாலும் வெளேர்ன்னு தெரியுது.

மண்டக்குள்ள பளிச் பளிச்ன்னு தெளிக்குது. முக்கிமுக்கிப் பாத்தான்.

கடிவாயில கட்டலாமின்னு அத்துப் பாத்தான் அன்னாக்கயிற; அது அக்க வரல. வகுறு பொருமுது; நெஞ்ச அடைக்குது; கைகால் வேற வீங்குது; உடம்புல பச்சநீலம் பாயுது.

பாம்பு கடிச்சா மூத்திரம் குடின்னு எப்பவோ யாரோ சொன்னது அவன் ஒண்ணுக்கு வார மாதிரி இருக்கு வரல. ரெண்டுக்க வாரமாதிரி இருக்கு; வரல.


செத்தவடத்துல வாயில நொர வந்திருச்சு; அப்பறம் மூக்கு வழியாவும் முட்ட ஆரம்பிச்சிருச்சு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# நைத்திரேற்று (Nitrate)



இன்றைய நாட்களில் குடாநாட்டின் நீரின் தரத்தைப் பற்றி நாம் எடுத்துக் கொள்ளும் போது அதிக முக்கியத்துவம் பெறுபவை நைத்திரேற் மற்றும் வன்தன்மை ஆகும். வன்தன்மை ஆனது எமது குடா நாட்டின் புவியியல் சார்பாக நீரில் ஏற்படும் மாசாக்கமாகும்,இது எம்மால் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாத ஒன்றாகும். ஆயினும் நைத்திரேற் தொற்றானது மனிதனால் ஏற்படுத்தப்படும் மாசாக்கமாகும். எனவே நாம் இதனைப் பற்றி தெளிவுற அறிந்து இதனை தடுப்பதற்கு இயலுமானவற்றைச் செய்தல் வேண்டும். நைத்திரேற் தொற்றினை அறிந்து கொள்வதற்கு முன்பாக நாம் நைத்திரேற்றின் சில இயல்புகளை அறிந்து கொள்வது நன்றாகும். இதன மூலம் நாம் நைத்திரேற்றின் தொற்றல் அடையும் இயல்பு நோயாக்கும் இயல்பு என்பவற்றை இலகுவாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

நைத்திரேற் என்பது நைதரசன் (N) மற்றும் ஒட்சிசன் (O) சேர்ந்த ஓா இரசாயன பதார்த்தம். இது வேறுபட்ட சேதன, அசேதனப் பொருட்களுடன் இணைந்து காணப்படுகின்றது. இந்த பல அணுச் சேர்ந்த அயனின் மூலக் கூற்று சூத்திரமானது "$NO_3^-$"ஆகும். அநேகமான அசேதன நைத்திரேற் உப்புக்கள் சதா




ரண அமுக்க, வெப்பநிலையில் இலகுவாக கரையக் கூடியவை ஆகும். அதாவது கரைதிறன் கூடியதாகும்.

நைத்திரேற் ஆனது நைத்திரேற் வட்டம் மூலம் சூழலில் ஓர் சமநிலையிலும் பேணப்பட்டு உருவாகின்றது. ஆனால் மனிதனின் முறையற்ற செயற்பாடுகளின் மூலம் இவ்வட்டமானது குழப்பமடைந்து மனிதனுக்கே பெரும் தீங்கை ஏற்படுத்திய வண்ணமுள்ளது.

நைத்திரேற் ஆனது விவசாயத் தேவைக்கான அசேதன உர உற்பத்தியில் அதன் கரையும் இயல்பையும் உயிரியல் ரீதியாக அழிவடையும் இயல்பையும் அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் நைத்திரேற் ஆனது தாவரங்களின் வளர்ச்சி மற்றும் போசனைக்கு இன்றியமையாத ஒன்றாகும். பொதுவாக நீரானது விவசாய நிலங்களின் நீர் மூலமும், மலசலகூடக் கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள் மூலமும் நைத்திரேற்றின் தொற்றலுக்கு உள்ளாகின்றது. இதன் அதிக கரைதிறன் இலகுவாக நீருடன் கொண்டு செல்ல ஏதுவாக அமைகின்றது.


யாழ்.குடா நாட்டைப் பொறுத்தவரை சில இடங்களில் மாத்திரமே நன்னீர் வளம் நிரந்தர நீராகக் காணப்படுகின்றது. இந்நிரந்தர நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்டு அப் பகுதியில் மக்கள் செறிந்த பிரதேசமாகக் காணப்படுவதுடன் இங்கு விவசாய நடவடிக்கைகளும் அதிகளவில் காணப்படுகின்றது. குடா நாட்டின் நீர்வளம் ஆனது கல்சிய பாறைகளுக்கிடையில் காணப்படும் குகைகளில் சேமிக்கப்படுகின்றது. இப்பாறைகளின் மேல் காணப்படும் மண்படையானது மெல்லியதாகவும் பாறைகளின் உட்புகவிடும் தன்மையும் அதிகமாக காணப்படுவதால் விவசாய கழிவுகள் இலகுவாக இந்நிலக்கீழ் நீர் வளத்தை தொற்றலடையச் செய்கின்றன. அத்துடன் விவசாயிகள் தமது விளைச்சலை மட்டும் கரு த்தில் கொண்டு அதிகளவில் உரங்களைப் பயன்படுத்துவதும், அதிக நீரைப் பாய்ச் சுவதும் (flood irrigation) அதிகமாக நீர்வளம் நைததிரேற் தொற்றுக்குள்ளாகக் காரணமாகின்றது. Nitrate செறிவானது உலக சுகாதார நிறுவனத்தால் (WHO 4th Edition) 50 mg/l ஆக அதன் அனுமதிக்கக் கூடிய செறிவாக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இது 11mg/l Nitrate as Nitrogen எனவும் கொள்ளலாம். இதனை சார்பாகக் கொண்டே அனைத்து நாடுகளும் தமக்குரிய குடிநீரின் தரத்தை நிர்ணயித்து கொண்டுள்ளன. அதன் பிரகாரமே இலங்கையில் SLS 614 part II (2013 ஆம் பதிப்பு) 50mg/l ஐ அதன் உச்ச வரம்பாக அறிவித்துள்ளது. இந்த செறிவு எல்லையானது முழுமையாக Methomoglobinemia எனும் நீலக்குழந்தைகளை அடிப்படையாக வைத்தே நிர்ணயிக்கப்பட்டவை.

நைத்திரேறின் Entero hepatic metabolism இன் போது இடைநிலையாக நைத்திரைட் (Nitrite) உருவாகின்றது. இந் நைத்திரைட் ஆனது ஹீமோகுளோபினில் உள்ள nguR (Ferrous – fe $^{2+}$) அயன்களை பெரிக் (Ferric - fe $^{3+}$) அயன்களாக ஒட்சியேற்றுவதால் ஹீமோகுளோபினின் ஒட்சிசனை காவும் தன்மை பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது. இதனால் அங்கங்களின் தசைகளில் ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்பட்டு ஆபத்தான நிலைமையை உருவாக்குகின்றது. இதுவே Methemoglobinemia என அழைக்கப்படுகின்றது. இது சிறுகுழந்தைகளில் (infant) ஏற்படும் போது அது நீலக்குழந்தை நோய் என அழைக்கப்படுகிறது, சில சந்தர்ப்பங்களில் இந்நோய்த் தாக்கத்தின் மூலம் இறப்பும ஏற்படுகின்றது. ஆகவே கட்டாயமாக சிறுகுழந்தைகளும், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மாரும் இத்தொற்றான நீரைப் பருகுவதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

மற்றும் நைத்திரேற் ஆனது குறிப்பிடத்தக்களவிற்கு அதிகமாக மனிதனால் உள்ளெடுக்கப்படும் பொழுது அவை புற்றுநோயாக்கியாகத் தொழிற்படும் சந்தர்ப்பங்களும் அதிகளவில் இருப்பதாகப் பல ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. அதாவது உள்ளெடுக்கப்படும் நைத்திரேற் ஆனது புற்று நோயாக்கியான "நைத்திரோ சமைனஸ் (Nitrosamines) ஆக உடலில் மாற்றம் அடைந்து உணவுக் கால்வாய் (Esophageal) மற்றும் வயிற்று (Stomach) புற்று நோய்க்கு காரணமாகின்றது.


நைத்திரேற் எம் குடாநாட்டு நீரில் மற்றைய பகுதிகளிலும் பார்க்க அதிகமாக காணப்படுகின்றது என்பது அனைவரும் அறிந்ததே. இதற்கு முக்கிய காரணம் எமது தரைக்கீழ் கட்டமைப்பும், விவசாய நடவடிக்கைகளும் என மேலே அறிந்து கொண்டோம். நைத்திரேற் எனும் ஓர் இரசாயன பதார்த்தம் மட்டும் அல்லாது அதனுடன் சேர்த்து பயன்படுத்தப்படும் ஏனைய மிகக்கொடிய நச்சான மற்றய இரசாயன பதார்த்தங்களுக்கு (Agro Chemicals – Pesticide weedicides fungicide etc) என்ன நடக்கின்றது? அவை தானாகவே இல்லாதொழிந்து போகின்றனவா? இல்லையெனில் எம் நீரில் அவற்றின் நிலைதான் என்ன? இவை தொடர்பான ஆய்வுகள் மிகச் செலவு கூடியவை என்பதால் நாம் Nitrate எனும் சிறுவட்டத்திற்குள்ளேயே நின்றுவிடுகின்றோம். இவ் உயிர் கொல்லும் இரசாயனங்கள் தொடர்பான விடயங்களில் மௌனித்து நிற்கின்றோம். இவை நீண்ட கால, குறுகிய கால விளைவுகளை ஏற்படுத்தவல்ல மிகக் கொடிய இரசாயனங்களாகும். Nitrate ஆனது ஓர் குறிப்பிட்ட அளவிற்கு மேலாக காணப்படும் ஆயின் அதனை ஓர் குறிகாட்டியாகக் (Index) கொண்டு அடுத்த கட்ட ஆய்வுகளுக்கு செல்ல வேண்டியது கட்டாயமாகும்.

இவ்வாறு தாவரத்துக்கிடப்பட்ட உரத்தின் மிச்ச மீதி கலந்த நீரிலேயே இத்தகைய அபாயம் உள்ள போது அதையே உறிஞ்சி விளையும் அவ் உணவுப்பொருட்களின் நிலை என்ன? ஓர் பல்கலைக்கழக ஆய்வில் எமது சாதாரண காய்கறி வகைகளான கத்தரி, கரட் போன்றவற்றில் மற்றைய நாடுகளில் உள்ளதைவிட 200 மடங்கு Nitrate உள்ளதாக அறியப்பட்டுள்ளது. ஆயினும் அது தொடர்பான முழுமையான தகவல் எம்மிடம் இல்லதா போதும் மக்களுக்கு ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலேயே இதனை இங்கு தெரிவிக்கின்றோம்.




அத்துடன் Nitrate ஐ பரிகரிக்கும் (treatments/ removals) நடைமுறைகளானது அதிகளவாக காணப்படுகின்ற போதிலும் அவை அதி தொழில நுட்பம் வாய்ந்தவையாகவும், அதிக செலவீனம் கொண்டவையாகவும், உள்நாட்டு சந்தையில் கிடைக்கப் பெறாத தொழில்நுட்பம் கொண்டவையாகவும் உள்ளது. இன்று உள்நாட்டு சந்தையில் காணப்படும் RO (Reverse Osmosis) தொழில் நுட்பம் மட்டும் ஓரளவு Nitrate ஐ அகற்றக் கூடியதாக உள்ளது. ஆயினும் RO சுத்திகரிப்பானது அதிக விலை கொண்டதாகவும் பாரிய செலவு கொண்டதாகவும் உள்ளது. சாதாரண மக்களின் பாவனைக்கு எட்டும் வகையில் இவை இல்லை.

இந்த விவசாய இரசாயன தொற்றானது நிச்சயமாக முறையற்ற மற்றும் அதீத இரசாயன பாவனையினால் தான் ஏற்படுகின்றது எனத் தெரிந்தும் எமது திணைக்களத்தினாலோ, அரசாங்கத்தினாலோ




அதனை கட்டுப்படுத்த முடியாத நிலை உள்ளதென்பது வருத்தத்திற்குரியது.

விவசாயிகளின் முழுமையான வருமானம் அவர்களின் விவசாயத்தை நம்பியதாகவே இருக்கின்றது. எனவே அவர்கள் தரமான (வெளித் தோற்றளவில்), அதிகளவிலான விளைச்சலை மட்டுமே எதிர்பார்கின்றனர். மற்றும் இன்று பயன்படுத்தும் நாற்றுகள் (Hybrids) விவசாய இரசாயன பிரயோகம் இன்றிப் பயன்தரமாட்டாதனவாகவும் உள்ளது.

பலதரப்பட்ட ஆராய்ச்சிகள், விழிப்புணர்வூட்டல்கள் மேற்கொள்ளப்படும் போதும் அது வெற்றியைப்பெறமுடியாமல் உள்ளதற்கு காரணம் விவசாயிகள் எதிர்கொள்ளவேண்டியுள்ள வர்த்தகப் போட்டியும் சந்தைப்படுத்தலும ஆகும். ஆயினும மக்கள் விழிப்ப டைந்து தங்கள் சுக வாழ்வைக் கருத்தில் கொண்டு சேதன மரக்கறிகளை (Organic Vegetables) தேர்வு செய்வார்களேயானால் விவசாயிகளுக்கு சேதன மரக்கறிக்கான சந்தைப்படுத்தும் வாய்ப்பு ஏற்படுவதுடன் மற்ற மரக்கறிக்கான தேவை குன்றைய அவர்கள் தானாகவே இரசாயனப் பாவனையைக் கைவிட்டு சேதனப்பசளையினைப் பயன்படுத்தும் நிலைக்கு உந்தப்படுவார்கள். சேதன மரக்கறி எனக் குறிப்பிடப்படுவது முழுமையாக இயற்கையான சேதனப்பொருட்களை மட்டும் கொண்டு செய்யப்படும் விவசாயம். அதாவது சுருக்கக் கூறுவோமானால் பண்டைய காலத்தினர் மேற்கொண்ட பாரம்பரிய நடைமுறைகளாகும்.

ஆதலால் எம் மக்களுக்கு நைத்திரேற் பற்றிய விழிப்பூட்டல் மிகவும் அவசியமான ஒன்றாகும். இதன் மூலமே நிலத்தடி நீர்வளமானது விவசாய இரசாயன கழிவுகளின் தொற்றலில் இருந்து பாதுகாக்கப்படுவதற்கும் தொற்றுக்குள்ளான நீரில் இருந்து மக்கள் தம்மை பாதுகாத்துக் கொள்ளவும் முடியும்.

சு.சரவணன்
இரசாயனவியலாளர்

## வாரத்திற்கு ஒரு புதிர்! 139

செவ்வாய்க்கிரகத்தை ஆராய இந்தியாவினால் அனுப்பப்பட்ட செயற்கை கோளின் பெயர் என்ன?

புதிர் 139 இற்கான விடைகளை 27.07.2015 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கு.குணாளன்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர் (தகுதிகாண்)
மீன்பிடி விஞ்ஞானத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 138 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

கே. ராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை

**புதிர் 138 க்கான கேள்வியும் விடையும்:**

மனிதனுக்கு அடுத்தபடியாக மரபணுத் தொகுப்பு (GENOME) முழுமையாக அறியப்பட்டுள்ள முள்ளந்தண்டுளி உயிரினம் எது?

PUFFER FISH

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 139

சரியான விடை:-..........

முழுப்பெயர்:-..........

முகவரி:-..........

தொலைபேசி இல:..........

கையொப்பம்:..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர்களுக்கு மதுபானம் விநியோகிக்கும் வேட்பாளர்கள்

## கபே அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

**வாக்காளர்களுக்கு போதைப்பொருள் மற்றும் மதுபானங்களை வழங்கி வாக்குகளை பெற்றுக் கொள்ள வேட்பாளர்கள் முயற்சிப்பதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக கபே அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.**

புத்தளம், பதுளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல் சட்டமூலத்தில் இலஞ்ச ஊழலை அதிகரித்தல் குற்றமாக கருதப்படுவதுடன், மதுவரி கட்டளை சட்டத்தின் விதிகளை மீறும் நடவடிக்கை என கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

எந்தவொரு வகையிலாவது பொருட்களை வழங்குதல் தேர்தல் சட்டத்தை மீறும் நடவடிக்கை என்பதுடன் இவ்வாறு மதுபானங்களை பெற்றுக்கொடுப்பதனால் அழுத்தங்களை பிரயோகிக்கும் நடவடிக்கையாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மதுபான வகைகளை இலவசமாக பெற்றுக் கொடுப்பதனால் அதிகமான வாக்காளர்களையும், ஆதரவாளர்களையும் தம்மிடம் ஈர்த்துக்கொள்ளும் வகையில் வேட்பாளர்கள் செயற்படுவது பிரயோக தேர்தலுக்கு முரணானது.

கபே அமைப்பு இந்த செயற்பாடுகள் குறித்து மதுவரி திணைக்களத்திற்கும், தேர்தல்கள் திணைக்களத்திற்கும் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினம் முதல் கபே அமைப்பிடம் இதுவரையில் 244 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அவற்றில் 224 முறைப்பாடுகள் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பிலும், மிகுதி 20 முறைப்பாடுகள் வன்முறைகள் தொடர்பிலும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கபே அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# ஜனாதிபதி சு.கட்சியை காட்டிக்கொடுத்துள்ளார்

(கொழும்பு)

ஊழல்களை மறைப்பதற்காகவே ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்ததாக மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்ட நிலையில் இது தெளிவாக புலப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

மத்திய வங்கி முறிக்கொள்வனவு தொடர்பிலேயே அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டது.

எனினும் அதற்கு எதிராக நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை.

மாறாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதாக பிரசன்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் அதன் ஆதரவாளர்களையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஒருமுறை காட்டிக்கொடுத்துள்ளார் என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.


இது ஐக்கிய தேசியக் கட்சியின் நன்மைக்காகவே செய்யப்பட்டுள்ளது என்றும் பிரசன்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 | 300 | 400 |
| தக்காளி | 200 | 140 | 90 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 40 | 60 | 50 |
| கோவா | 100 | 100 | 100 | 80 | 100 |
| கரட் | 120 | 140 | 150 | 240 | 140 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 30 |
| புடோல் | 40 | 40 | 70 | 60 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 40 | 70 |
| சின்ன வெங்காயம் | 200 | 150 | 150 | 200 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 150 | 120 | 150 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 90 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 200 | 100 | 100 | 140 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 60 | 80 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 | 160 | 100 |
| பீற்றூட் | 100 | 140 | 120 | 120 | 120 |
| கறிமிளகாய் | 120 | 200 | 200 | 200 | 140 |
| முருங்கைக்காய் | 120 | 200 | 300 | 140 | 200 |
| போஞ்சி | 200 | 200 | 170 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | 40 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 60 | 70 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-40 | 50 | 40 | 40 | 50 |
| இராசவள்ளி | 200 | 140 | 160 | — | 120 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 200 | 240 | 180 |
| முள்ளங்கி | 100 | 40 | 50 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 20 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 434


டொறின் மன்மதநாயகம்




சிவம் சக்தி




துஷா துஷா




இந்துஜன் ரமணன்




கிரு கிருஜிகா



சானுகா பத்மநாதன்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தலில் புதிய ஜனாதிபதியின் நிலைப்பாடு என்ன?

**05.07.2015 அன்று சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் ஜனாதிபதி வெள்ளைக்கொடியுடன் சரணடைகிறாரா? எனும் தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் தமிழாக்கம் ....**



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள் வரவிருக்கும் பாராளுமன்ற தேர்தல் களத்தில் குதிப்பதற்கு ஆயத்தமாக கடந்தமாத இறுதி வாரங்களிலேயே சில அரசியல் அழுத்தங்களை வெளிக்காட்டியபடி தேர்தல் அரங்கத்தில் மீண்டும் கால் பதித்தார்.

முன்னர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட அவரை தொடர்ந்து பதவியேற்ற தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இறுதியில் சரணடையும் விதத்தில் நீண்டகாலமாக திட்டமிடப்பட்டு ஒப்பேற்றப்பட்டதே இந்த ஒட்டுமொத்த அரங்கேற்றமாகும்.

அவரது சொந்த நகரான தங்கல்லையில், 'அதிஎசல' முழுமதி தினத்தன்று தனது அரசியல் பிரவேசத்தை மீளவும் ஆரம்பிக்கும் அந்த பிரகடனத்தை அவர் வெளியிட்ட குறிப்பான அத்தருணம் தந்திரமான முறையில் நன்கு அவதானமாக திட்டமிடப்பட்டதேயாகும். தன்னை எவருமே தடுத்து நிறுத்திவிட முடியாது என்ற உறுதியான தீர்மானமொன்றில்லாமல், தான் தேர்தலில் களமிறங்குவதை அவர் இவ்விதம் பிரகடனப்படுத்துவதற்கு வாய்ப்பில்லை.



'ஏனையோரைப்போல் கட்சியை விட்டு வெளியேறியவன் நானில்லை' என்ற தனது வழமையான கூற்றினையே தனக்கான ஒரு பற்றுக்கோடாக கொண்டவராக இருந்தார். தற்போது சிறிசேன அவர்கள் தலைமை தாங்கும் 'SLFP' கட்சியை விசுவாசமாய் பின்பற்றும் ஏனைய அனைவரதும் மனதில் எதிரொலிக்க வைக்கும் ஒரு உறுதியான செய்தியாகவே இது இருக்கிறது.

கடந்த பல மாதங்களாகவே தனது சொந்த 'SLFP' கட்சிக்குள் மட்டுமல்லாது அது சார்ந்த விரிவான 'UPFA' கூட்டணிக்குள்ளும் தனது சொந்த செல்வாக்கினை நிலைநாட்டி, தலையீடுகளையும் மேற்கொள்வதன் மூலம் பொதுவான அரசியல் என்ற குட்டையைக் குழப்பி அனுகூலம் தேடுவது போன்ற ராஜபக்சவுடைய செயற்பாடுகளைவிட சிறந்த வேறு விடயங்களெதனையுமே நாடு அப்போது காணவில்லை.

தனது ஆதரவாளர்களுடன் ஏனையோர் மத்தியிலும் தான் தொடர்ந் தும் கொண்டிருந்த அரசியல் பிரசன்னத்துடன் பிடிவாதமான செயற்பாடுகள் மூலமும் தனக்கான ஆதரவினை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள அவரால் முடிந்தது.

ஆகஸ்ட் 17 ஆம் திகதியென நாட்குறிப்பிடப் பட்ட பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக் கல் தினம் யூலையின் இந்த வாரத் தொடக்கத்திலேயே ஆரம்பிக்க ப்பட்டதுடன் அரசியலுக்குள் ராஜபக்சவின் மீள் பிரவேசத்தை தடுப்பதற்கான சிறிசேனவின் முயற்சிகளனைத்தின் மத்தியிலும் ராஜபக்ச தனக்கான பேராதரவுக்கென திரட்டியிருந்த மக்களின் ஆதரவு அலையின் காரணமாக அவரது முயற்சிக்கு சிறிசேன அதே வாரத்தில் சரணாகதியானார். ராஜபக்சவின் தலைமையின் கீழ் முன்னொரு தடவை 'SLFP'யின் பொதுச் செயலராக இருந்தும் வெறும் கைப்பொம்மையாகவே இருந்ததாக பின்னர் ஒத்துக் கொள்ளவிருந்த அவர் கட்சியை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவிருந்த கடின முயற்சியிலும் தோல்வியையே சந்தித்தார்.

தனது செயற்பாட்டு வழிமுறைகளினூடாக உருவான நம்பிக்கையற்ற அவலமான சூழ்நிலை காரணமாக மக்கள் ஏற்கனவே ஜனவரி 8 இல் அளித்திருந்த தீர்ப்பின் மூலம் ஜனாதிபதி ராஜபக்சவின் பொறுப்புக்களை நிராகரித்து தமக்கு அளித்திருந்த புதிய அரச ஆணையை மீண்டும் பழைய நிலைக்கே சிறிசேன திருப்பியிருந்தார். அதாவது, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் விருப்பத்திற்கு மாறாக தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி 'SLFP' பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகள் மற்றும் அது சம்பந்தப்பட்ட அந்தஸ்துகளையும் வழங்கியிருந்தார்.

இவர்களுள் சிலர் ஜனாதிபதி ராஜபக்சவினது பதவிக்காலத்தில் இடம் பெற்ற குற்றச்செயல்கள் மட்டில் சந்தேகத்திற்குரியவர்களாக இருப்பவர்களாவர். தற்போதைய ஜனாதிபதி இதனை மேற்கொண்டதற்கான காரணம் நண்பர்களை உருவாக்குவதன் மூலம் கட்சித் தீர்மானங்களுக்கு கூடுதல் பலம் திரட்டுவதேயாகும். இவ்விதமாக ராஜபக்ச சார்பினரே 'SLFP' கட்சிக்குள் நடந்த அதிகார போராட்டத்தில் தெளிவான வெற்றியைப்பெற சிறிசேன தரப்பினர் மோசமான பின்னடைவைச் சந்தித்ததுமல்லாமல் 'UNP' க்கு அரசாங்கம் அமைப்பதற்கு அவர் அளித்திருந்த தேர்தல் வாக்குறுதியின் நிமித்தம், தானே தனது சொந்த அமைச்சரவையை தெரிந்துகொள்ள முடியாது போனதற்கான விளைவையும் சிறிசேன சுமந்து கொள்ள வேண்டியவரானார்.

ராஜபக்ச தரப்புக்கான ஆதரவு எண்ணிக்கை அதிகரிப்பிற்குக் காரணம் மாயமோ மந்திரமோ அல்ல. ஆரம்பத்தில் புதிதாக தெரிந்துகொள்ளப்பட்ட ஜனாதிபதி சிறிசேனா பக்கம் ஈர்க்கப்பட்டவர்களான அனேகர் ராஜபக்சவை நட்டாற்றில் கைவிட்டது போல் தடுமாற வைத்திருந்தனர்.

ஆனாலும் 'SLFP' பாராளுமன்ற உறுப்பினர்களுக்கெதிராக ஊழல் குற்றச்சாட்டு வலை வீசப்பட்டதுடன் மோசடிக்காரர்களுக்கும் சமூக விரோதிகளுக்கும் வேட்புமனுவெதுவும் இனிமேல் கிடையாது என்ற எச்சரிக்கை ஜனாதிபதி சிறிசேனாவினால் பகிரங்கமாக அறிவிக்கவும்பட்டபோது ராஜபக்ச தரப்பு உறுப்புரிமை பலம் மேலும் மேலும் பெருகிற்று.

உட்கட்சி இழுபறி தோல்வியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அதே நேரம் ஊழல்களுக்கெதிரான முன்னணி"யின் செயற்பாடுகளை வேகம் குறைக்கும்படி விடுக்கப்பட்ட அரச ஆணை காரணமாக இரண்டாவது பின்னடைவும் ஏற்பட்டது.

முன்னாள் ஊழல் மோசடி பேர்வழிகளான அமைச்சர்களை தண்டிப்பதென்ற தேசிய கடமையுணர்வினை கட்சி அரசியல் நலன்கள் தோற்கடித்துவிட அரச நிர்வாகத்தை தூய்மைப்படுத்துவதென்ற தேர்தல் வாக்குறுதிகள் மேற்கொள்ளப்பட்ட வேகத்திலேயே எளிதாய் மறக்கடிக்கவும்பட்டதாயிற்று.

தேர்தல் வாக்குறுதிகளிலிருந்து ஏற்கனவே பின்வாங்கித் திரும்பிய அரசின் அரைவட்ட திருப்பம், ராஜபக்சவுக்கு வேட்புமனு வழங்குவதில்லை என்ற பகிரங்க அறிவித்தலின் பின்னர் அதனை அவருக்கு வழங்குவதென்ற உடன்பாட்டைத் தொடர்ந்து அரசின் பின்வாங்கலை பூர்த்தியாக்கும் முழுவட்டத்திருப்பமாகிற்று.

ஊழல் மோசடிப் பேர்வழியான ஒருவருக்கு 'SLFP' எவ்விதமாக வேட்புமனு வழங்கலாமென்று அதன் தலைவர்களுடன் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட வாதப் பிரதிவாதங்களைத் தொடர்ந்து ராஜபக்சவுக்கு அனுமதி வழங்குவதில்லை என தமது பிரதமமந்திரிக்கு ஜனாதிபதி அவர்களால் திரும்பத் திரும்ப வழங்கப்பட்டிருந்த வாக்குறுதிகள் எல்லாம் காற்றாய்ப் பறந்து போயின.

'SLFP' க்குள்ளாகவே புரட்சியொன்று வெடித்துக் கிளம்பும் தயார் நிலை ஆபத்து உள்ளூர இருக்கவே செய்தது. கட்சியை இருகூறாகப் பிளவுறச் செய்வதன் மூலம் உருவாகும் வாய்ப்பினை எதிர்வரும் தேர்தலில் 'UNP' பெற்றுப் பயன்பெறும் விதத்தில் ஒரு சிக்கலான முயற்சியையும் எதிர்கொள்ளும் ஆபத்தொன்றும் சிறிசேனவிற்கு இருந்தது.

கட்சித் தலைமையிலிருந்து அவரேகூட வெறியேற்றப்படும் நிலைமையொன்றும் ஏற்படலாமென்பதையும் மறுத்துவிட முடியாது. இருப்பினும் அவர் தெரிந்து கொள்ளக்கூடிய கடினமான முயற்சிகள் சிலவும் அவருக்கென இருக்கின்றன.

**-இணையம்-** (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாவின் ஒப்பந்தங்கள் பிரதமர் ரணிலால் இரத்து!

(கொழும்பு)

**மூன்று மில்லியன் ரூபா பெறுமதியான வீடுகளை ஏழு மில்லியன் ரூபாவென பொய் கூறி தவணையடிப்படையில் விற்பதற்காக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலையீட்டினையடுத்து இரத்துச் செய்யப்பட்டிருப்பதாக முன்னாள் பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.**

ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டவர்களுள் அநேகமானவர்கள் தமிழர்களாக இருந்த போதும் ஒப்பந்தப் பத்திரங்கள் தமிழில் இல்லாமை கவலைக்குரிய விடயமென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையை பாதுகாப்பதற்காக கோத்தபாய ராஜபக்ஷவின் மேற்படி ஒப்பந்தங்களை இரத்துச் செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு விடுத்த பணிப்புரைக்கமைய ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதற்கு பதிலாக இவர்களுக்கு ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி முதல் இலவசமாக உறுதியுடன் கூடிய வீடுகள் வழங்கப்படுமென்றும் அவர் உறுதியளித்தார்.

சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



கோத்தாபய ராஜபக்ஷ மக்களை தமது வீடுகளிலிருந்து பலவந்தமாக வெளியேற்றியதன் மூலம் மனித உரிமையை மீறியது மாத்திரமன்றி அப்பாவி மக்களிடமிருந்து கொள்ளையடிக்கவும் முயன்றுள்ளார்.

போலி பெறுமானத்திற்கு வீடுகள் விற்பனை செய்வதனை தடுத்து நிறுத்த வேண்டிய அதேநேரம் அபிவிருத்தி வேலைகளுக்காயினும் மக்களை குறித்த இடத்திலிருந்து அப்புறப்படுத்துவதற்கு தேசிய கொள்கையொன்றை நடைமுறைப்படுத்த புதிய அரசாங்கத்தின் கீழ் விரைவில் பாராளுமன்ற சட்டமொன்று நிறைவேற்றப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு நகரின் ஒதுக்குப்புறங்களில் சுமார் 80-90 வருடங்களாக வாழ்ந்த மக்கள் பலவந்தமாக அந்த வீடுகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர். பாடசாலை புத்தகப் பைகள் தூக்கி எறியப்பட்டன. பெக்கோ இயந்திரங்கள் மூலம் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. இவர்களுக்கு புது வீடுகள் வழங்குவதாக கூறப்பட்டது. ஆனால் பலர் இன்றும் பலகை வீடுகளிலேயே வாழ்கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதியின் கருத்து ஐ.ம.சு. கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரத்தை மோசமாகப் பாதிக்குமாம்

## வாசுதேவ தெரிவிப்பு


ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அண்மைய கருத்து, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்தை மிக மோசமாக பாதிக்கும் என முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கருத்து பிழையானது.

ஜனாதிபதி இவ்வாறான ஓர் கருத்தை வெளியிடாமல் இருந்திருக்க வேண்டும். அதுவே பொருத்தமானது.

ஜனாதிபதியின் கருத்து தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் எதிர்ப்பை வெளியிட்டிருந்தேன்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவும் இதனை எதிர்த்திருந்தார்.



தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஜனாதிபதி வெளியிட்ட கருத்து தேர்தல் நடவடிக்கைகளை மோசமாக பாதிக்கும் என வாசுதேவ நாணயக்கார சிங்கள பத்திரிகையொன்றுக்கு மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகேந்திரன் குறித்த ஜனாதிபதியின் நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக்கட்சி பரிசீலனை செய்ய வேண்டும்

## ரஞ்சித் மத்தும பண்டார சுட்டிக்காட்டு

மத்திய வங்கியின் ஆளுநர் குறித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சி மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை பதவி விலகுமாறு கோருவது பொருத்தமானது என தாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறியதாக ஜனாதிபதி அண்மையில் ஆற்றிய விசேட உரையில் குறிப்பிட்டிருந்தார்.


ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியிருந்தார்.

மத்திய வங்கிய ஆளுநர் விவகாரம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நாடாளுமன்றில கருத்து வெளியிட்டிருந்தார்.

எனவே இதுபற்றி நான் அதிகமாக பேசப்போவதில்லை. ஆறு மாத காலத்திற்கு முன்னதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்களின் அதிக வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டார்.

நாட்டை மீளவும் பின்னோக்கி நகர்த்த ஜனாதிபதி விரும்பவில்லை.

நல்லாட்சி முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதனை [illegible] மீளவும் திருடர்கள் [illegible]



கைப்பற்ற முயற்சிக்கின்றனர்.

மக்களின் நாடித் துடிப்பை அறிந்து ஜனாதிபதி செயற்பட்டு வருவதாக அமைச்சர் ரஞ்சித் மத்தும புண்டார கொழும்பு ஊடகமொன்றுக்கு மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## மெய்ப்பொருள் காண்பது அறிவு

தந்தியை விட வேகமாக போகக்கூடியது எது? என்று கேட்டார் ஒருத்தர்.

"வதந்தி" என்றார் இன்னொருவர்.

அவர் கூறியதில் தவறில்லை.

வதந்தி வேகமாக பரவுவதற்கு என்ன காரணம்? ஒன்றுக்கு இரண்டாக மிகைப்படுத்திச் சொல்லும் மனித சுபாவம் ஒரு காரணம். சொல்வதை அப்படியே நம்புவது இன்னொரு காரணம்.

"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு " என்றார் வள்ளுவர்.

யார் எதைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பி விடுவதா? அறிவு வேலை செய்ய வேண்டும். அதில் எந்தளவுக்கு உண்மையிருக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும். முக்கிய பொறுப்பிலுள்ளவர்களுக்கு இது மிக முக்கியமான ஒரு தகுதி.

ஒரு நாட்டில் சாதாரண ஆள் ஒருத்தன் இருந்தான். அவனிடம் ஒரு கழுதை இருந்தது. அதை மிகவும் பிரியமாக வளர்த்தான். அவனுக்கு அது மிக நெருக்கமான நண்பன். வேறு மனிதர்கள் யாரும் கிடைக்கவில்லை போலிருக்கிறது. அந்தக் கழுதைக்குக் கந்தர்வசேனன் என்று பெயர் வைத்தான். இந்தப் பெயரைச் சொல்லித்தான் அதை அவன் கூப்பிடுவான். அவ்வளவு பிரியமாக வளர்த்த அந்தக் கழுதை ஒருநாள் திடீரென்று இறந்து விட்டது. இவன் மிகவும் கவலைப்பட்டான். சாப்பிடக்கூட பிடிக்கவில்லை. முகத்தை உம் என்று வைத்துக் கொண்டு மிகவும் கவலையுடன் இருந்தான்.

அந்த நேரம் பார்த்து அவனுக்கு வேண்டப்பட்ட ஒருத்தன் அந்தப் பக்கமாக வந்தான். அவனைப் பார்த்தான்.

"என்னப்பா இப்படி உட்கார்ந்திருக்கிறாய்? " என்று கேட்டான். கந்தர்வசேனன் இறந்து விட்டதாகச் சொல்லி குலுங்கிக் குலுங்கி அழுதான் அந்த ஆள்.

"கந்தர்வசேனன் யார்? " என்று கேட்டான். இவன் இப்படிக் கேட்டவுடன் அவன் சத்தம் போட்டு அழ ஆரம்பித்தான். அவன் அழும் வேகத்தைப் பார்த்ததும், " சரி கந்தர்வசேனன் என்பது முக்கியமான ஒரு பெரிய மனுஷன் போலிருக்கிறது" என்று முடிவு செய்து கொண்டான்.

நம்முடைய நண்பனின் துக்கத்தை நாமும் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று நினைத்தான். உடனே தலையை மொட்டையடித்துக் கொண்டான். மீசையை எடுத்து விட்டான். கறுப்பு உடையை அணிந்து கொண்டான்.

கந்தர்வசேனன் இறந்த செய்தி காற்றுவாக்கில் பரவ ஆரம்பித்தது. ஊரிலுள்ளவர்களெல்லாம் இந்த செய்தியைக் கேட்டதும் அவர்களும் தலையை மொட்டையடித்துக் கொண்டு கறுப்புத் துணியைக் கட்டிக் கொண்டார்கள்.

ஒருநாளில் நகரம் முழுவதும் துக்கத்தில் ஆழ்ந்துவிட்டது. எங்கே பார்த்தாலும் மொட்டத்தலை. கறுப்புத்துணி.

அந்த நாட்டு அமைச்சர் இதைப் பார்த்தார். மக்களெல்லாம் கவலையாக இருக்கிறார்களே என்று நினைத்து சிலரைக் கூப்பிட்டு விசாரித்தார்.

கந்தர்வசேனன் இறந்து விட்டார். அதுதான் துக்கம் அனுஷ்டிக்கிறோம் என்றார்கள். அவராவது கொஞ்சம் யோசிக்க வேண்டுமல்லவா. ஒன்றும் விசாரிக்கவில்லை.

"மக்களின் துயரத்தில் நாமும் பங்கெடுக்க வேண்டும்" என்று நினைத்து அவரும் மொட்டையடித்துக் கொண்டு துக்கம் அனுஷ்டிக்க ஆரம்பித்தார். அமைச்சர் இப்படி இருக்கிறார் என்ற செய்தி அரசருக்கு எட்டியது. அவரும் மொட்டை போட்டுக் கொண்டு துக்கம் அனுஷ்டிக்க ஆரம்பித்தார்.

அன்றிரவு ராஜா மொட்டைத் தலையுடன் மிகவும் சோகமாக அந்தப்புரத்துக்கு வந்தார். என்னங்க இது? என்ன விடயம்? உங்களுடைய துக்கத்துக்கு என்ன காரணம்? என்று ராணி கேட்டார்.

ராஜா மிகவும் கவலையுடன் "கந்தர்வசேனன் இறந்து விட்டாராம். மக்களெல்லாம் கவலையோடு இருக்கிறார்கள். அதனால் நானும் அவர்களோடு துக்கத்தில் பங்கெடுத்துக் கொள்கிறேன். அது ஒரு ராஜாவின் கடமையல்லவா?" என்றார்.

அது சரி கந்தர்வசேனன் யார்? உங்களுடைய அப்பாவா? அண்ணனா? எதற்காக தலையை மொட்டையடித்தீங்க? என்று கேட்டார் ராணி. அதன்பின் தான் ராஜா யோசிக்க ஆரம்பித்தார். ஆமாம்.... அதுவும் சரிதான் என்று நினைத்து அமைச்சரைக் கூப்பிட்டு விபரத்தைக் கேட்டார். அவரும் அதற்குப் பின் தான் யோசிக்க ஆரம்பித்தார். மக்களைக் கூப்பிட்டு விசாரித்தார். ஒவ்வொருவராக விசாரித்துக் கொண்டே கடைசியாக அந்த ஆளிடம் போய்ச் சேர்ந்தார்கள். கந்தர்வசேனன் யார்" என்று கேட்டார்கள்? என்னுடைய கழுதை என்றான் அவன்.

ராஜாவும் அமைச்சரும் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார்கள். எல்லோரும் சொல்வதை கண்ணை மூடிக் கொண்டு நம்ப ஆரம்பித்தால் கதை இப்படித்தான் போய் முடியும். ஸ்ரீ சிவானந்தர் சொன்ன குட்டிக்கதை இது. ஒருத்தர் என்னிடம் வந்தார்.

"சேர் 10 பேர் ஒரே குடையில் வந்தோம். ஆனால் ஒரு சொட்டு தண்ணி கூட யார் மீதும் படவில்லை " என்றார்.

"அது எப்படி?" என்றேன்.

"ஏனென்றால்...அப்ப மழையே பெய்யவில்லையே" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2015~17.08.2015

## ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நேரம்!



**ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நேரம்! சுக்ரனை இராசிநாதனாகப் பெற்றதால் கவர்ச்சியாகப் பேசிக் காரியங்களை சாதித்துக்கொள்ளும் துலாம் இராசிநேயர்களே!**

ஆடிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே ஜென்மச் சனியின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கின்றது. எனவே ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

ஏழரைச் சனியில் ஜென்மச் சனி விலகி மீண்டும் வக்ர இயக்கத்தில் உங்கள் ராசிக்கே வந்திருக்கிறார். சனி வக்ர இயக்கத்தில் இருப்பதால் அவ்வளவு கடுமையான பாதிப்புகள் ஏற்படாது.

இருந்தாலும் அலைச்சலை குறைத்துக்கொள்வது நல்லது. அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது உத்தமம். உழைப் பிற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே என்று வருத்தப்பட வேண்டாம். ஒவ்வொரு முறையும் செலவழிக்கும் பொழுது யோசித்து செலவழித்தால்தான் வீண் விரயங்களிலிருந்து விடுபட இயலும்.

சனிக்கிழமை தோறும் சனிபகவான் வழிபாட்டை முறையாக மேற்கொள்ளுங்கள். எள்தீபம் ஏற்றினால் நல்லது நடக்கும். சனி கவசம் பாடினால் சந்தோஷம் நிலைக்கும்.

குரு லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே பணப்பற்றாக் குறை அகலும் என்றே சொல்லலாம். உத்தியோகத்தில் எதிர்பாராத முன்னேற்றம் ஏற்படும். கூடுதல் சம்பளம் தருகிறோம் என்று ஒரு சிலர் உங்களைக் கூப்பிடுவர். வெளிநாட்டு யோகம்கூட ஒரு சிலருக்கு வந்து சேரலாம்.

அயல்நாட்டு பயணத்தில் ஆர்வம் காட்டுபவர்கள் சுய ஜாதகத்தை ஒருமுறை புரட்டிப்பாருங்கள். திசா புத்தி பலம் பெற்றிருந்தால் எண்ணியபடியே அந்நிய தேசத்திற்கு செல்லலாம். இல்லையேல் புண்ணிய ஷேத்திரங்களுக்கு சென்று வழிபாடுகள் செய்து இங்கேயே பணிபுரியலாம்.

ஜென்மச் சனி விலகிய பின்னால் அயல்நாடு செல்வது நல்லது. உண்மையிலேயே உங்கள் ராசிக்கு 10 ஆம் இடத்தில் சூரியனும், புதனும் இருப்பது யோகம் தான். புத ஆதித்ய யோகத்தின் அடிப்படையில் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

கடை திறப்பு விழாக்களுக்குச் செய்த ஏற்பாடுகள் அனுகூலமாக அமையும். வீடு வாங்க, விற்க எடுத்த முயற்சிகளில் இருந்த விவகாரம் தீரும். குரு பார்வையால் சகோதர ஸ்தானம் பலப்படுகிறது. எனவே, உங்கள் முன்னேற்றத்திற்கு உடன பிறப்புகள் ஒத்துழைப்புச் செய்வர்.

**கடகத்தில் செவ்வாய் நீச்சம் பெறும் நேரம்!**

தனாதிபதி செவ்வாய் ஜுலை 31 ஆம் திகதி நீச்சம் பெறுகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. வருமானப் பற்றாக் குறை ஏற்படும். 'வாங்கல்-கொடுக்கல்களில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நண்பர்களிடம் ஒப்படைத்த பொறுப்பு மீண்டும் உங்களிடமே திரும்பி வரலாம். சொத்துக்கள் வாங்க, விற்க எடுத்த முயற்சியில் கொஞ்சம் தாமதம் ஏற்படலாம். உடன்பிறப்புகளை அனுசரித்துக் கொள்ளுங்கள்.

சப்தமாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. முருகப்பெருமான் வழிபாடு உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடும்.




**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் முதல் திகதி சிம்ம ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 9, 12இறகு அதிபுதி லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். செலவு வருவதற்கு முன்னரே வரவு வந்து சேரும். செயறபாடுகளில் வெற்றி கிடைக்கும்.

உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர். உன்னத வாழ்விற்கு அடித்தளம் அமைத்துக் கொள்வீர்கள். மாமன், மைத்துனர் வழி யில் இருந்த மனக்கசப்பு மாறும். பெற்றோர்களின் பாச மழையில் நனைவீர்கள்.

கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். இம்மாதம் வியாழன் தோறும் குரு வழிபாட்டையும், சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டிய மாதமாகும். ஆகாரத்திலும் அதிக கட்டுப்பாடு செலுத்துங்கள். வரவறிந்து செலவு செய்வது நல்லது. குரு பலம் நன்றாக இருப்பதால் பணத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணி மாற்றம் கிடைக்கும். பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் திடீரென மாற்றப்படலாம்.

கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும். சர்ப்ப கிரகங்களால் தடை ஏற்படாமலிருக்க சர்ப்ப சாந்தியைச் செய்து கொள்வது நல்லது.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## வருமானம் திருப்தி தரும் நேரம்!



**வருமானம் திருப்தி தரும் நேரம்! செவ்வாயை இராசிநாதனாகப் பெற்றதால் செல்வாக்கு மிக்கவர்களாக விளங்கும் விருச்சிக இராசி நேயர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது குருவின் பரிபூரண பார்வை தன ஸ்தானத்தில் பதிவதால் பணப் புழக்கம் அதிகரிக்கும். பக்கபலமாக இருக்கும் நண்பர்களின் ஒத்துழைப்பும் கூடுதலாக இருக்கும்.

எந்தக் காரி யத்தையும் எடுத்தோம், முடித் தோம் என்று செய்து முடிப்பீர்கள். இல்லம் தேடி சுபச் செய்திகள் வந்து கொண்டே இருக்கும்.

தொழில் ஸ்தானத்தில், தன பாக்யாதிபதியான குரு சுக்ரனுடன் கூடிச் சஞ்சரிக்கின்றார். எனவே, புதிய தொழில் வாய்ப்புகள் ஒரு சிலருக்கு வந்து சேரும். புகழ் மிக்கவர்களின் பட்டியலில் இடம்பிடித்து பொன்னான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ளப் போகிறீர்கள்.

புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். எண்ணங்களை நிறைவேற்றுவது குருவின் பார்வை பலம்தான். எனவே குருவின் பார்வை குடும்ப ஸ்தானத்திலும், சுகஸ்தானத்திலும், ரோக ஸ்தானத்திலும் பதிவதால் குடும்ப மேன்மை, கொடுத்த வாக்கை காப்பாற்றும் தன்மை, வங்கிச் சேமிப்பு உயர்வு, வாழ்க்கைத் தேவைகள் பூத்தியாகும் அமைப்பு உண்டு.

ராசிநாதன் அஷ்டமத்தில் சஞ்சரிப்பதால் கவலைப்பட வேண்டியதில்லை. செவ்வாய் உங்கள் ராசிநாதனாக மட்டுமல்லாமல் ஆறாமிடத்திற்கும் அதிபதியாகிறார்.

எனவே, 6 இற்கு அதிபதி 8 இல் சஞ்சரிக்கும் இந்த நேரம் 'விபரீத ராஜ யோகம்' செயற்படும். எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திடீர் திருப்பங்கள் ஏராளமாக நடைபெறும்.

உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேறறம் கண்டு ஆச்சரியப்படுவர். அரசியல்வாதிகளால் அனுகூலம் கிடைக்கும்.

குடும்பத்தில் நீண்ட நாட்களாக தடைப்பட்ட சுபகாரியங்கள் தடையின்றி நடைபெற வழிபிறக்கும். ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் இப்பொழுது நடைபெறுகிறது. வக்ரச் சனியின் ஆதிக்கமாக இருப்பதால் விரயங்கள் சுபவிரயமாக மாறும்.

வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். குழந்தைகளுக்கான சீர்வரிசைப் பொருட்களை வாங்கிச் சேர்க்க முற்படுவீர்கள்.

**கடக செவ்வாயின் சஞ்சாரம்!**

ஜுலை 31 ஆம் திகதி கடக ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 6 இற்கு அதிபதி நீச்சம் பெறுவது யோகம்தான். கடன் சுமை குறைய புதிய வழிபிறக்கும். வாங்கல், கொடுக்கல்களை ஒழுங்கு செயது கொள்வீர்கள்.

வள்ளல்களின் ஒத்துழைப்பும், வங்கிகளின் ஒத்துழைப்பும் கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள். இல்லம் கட்டிக் குடியேற வேண்டுமென்ற ஆசை நிறைவேறும். பத்திரப் பதிவிலிருந்த தடைகள் அகலும். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து இணைவர். உடன்பிறப்புகளின் இல்லத்தில் நடைபெறும் விழாக்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். பூர்வீக சொத்துக்கள் சரியான முறையில் பாகப்பிரிவினை ஏற்படும். வெளிநாட்டு யோகம் ஒரு சிலருக்கு வந்து அலை மோதும். வி.ஆர்.எஸ் பெற்றுக் கொண்டு ஒரு சிலர் சுயதொழில் செய்ய முன்வருவர். என்ன இருந்தாலும் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது அவசியம். அங்காரக வழிபாடு நன்மையளிக்கும்.

**சிம்ம புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் முதல் திகதி சிம்ம ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் ராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்குப் புதன் அதிபதியாவார். லாபாதிபதியாக விளங்கும் புதன் 10 இல் சஞ்சரிக்கும் பொழுது யோகாதிபதியாக மாறி தொழில் வளத்தைப் பெருக்குவார். எனவே, இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். லாபம் எதிர்பார்த்தபடி வந்துசேரும். மாமன், மைத்துனர் ஒத்துழைப்பு மனதிற்கினிய விதத்தில் கிடைக்கும். சேமிப்பு அதிகரிக்கும். இந்த நேரத்தில் செய்தொழிலை விரிவு செய்ய முன்வருவீர்கள். தொழில் நிலையத்திற்கென்று கட்டடங்கள் வாங்குவது அல்லது கட்டுமானப் பணிகளை மேற்கொள்வது போன்றவைகள் ஏற்படலாம். அனுமன் வழிபாட்டில் ஆர்வம் காட்டினால் மேலும் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ள இயலும். இம்மாதம் பிரதோஷத்தன்று நந்தியெம்பெருமானை வழிபட்டு வாருங்கள். செவ்வாய் தோறும் ஆனைமுகப் பெருமானையும், ஆறுமுகப் பெருமானையும் வழிபட்டு வருவது நல்லது.




**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

பொருளாதார நிலை உயரும் மாதமாகும். பொன், பொருள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். தொழிலில் போதிய வருமானம் வந்து சேரும். கணவன்- மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். குழந்தைகளின் எதிர்காலக் கனவுகளை நனவாக்குவீர்கள். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். பெற்றோர்களின் ஆதரவோடும், பிரபலஸ்தர்களின் ஒத்துழைப்போடும் முன்னேற்றம் காண்பீர்கள். ஆனைமுகப் பெருமான் வழிபாடு ஆனந்தம் வழங்கும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவல வாழ்க்கை

ஈராக்கில் பெரும் பகுதியை கைப்பற்றி வைத்துள்ள ஐ.எஸ். ஐ.எஸ். தீவிர வாதிகள் அங்குள்ள சிறுபான்மை மக்களை கொன்று குவித்து வருகிறார்கள். யாஷ்தி சிறுபான்மையினராக உள்ளனர். அவர்கள் வசித்து வந்த பகுதி பலவற்றை ஐ.எஸ். ஐ.எஸ். தீவிர வாதிகள் கைப்பற்றியுள்ளனர். அவர்கள் யாஷிதி பெண்களை கடத்தி சென்று பாலியல் அடிமைகளாக பயன்படுத்தி வருகிறார்கள்.

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிர வாதிகள் பிடியில் இருந்து நூற்றுக்கணக்கான பெண்கள் தப்பியோடி வருகின்றனர். அவர்கள் தங்களது அடையாளத்தை வெளிப்படுத்தாமல் நிருபர்களுக்கு அண்மையில் பேட்டியளித்தனர் . அதில், புஷ்ரா என்ற பெண் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டு எங்கள் கிராமத் துக்கு பக்கத்தில் உள்ள பகுதிகளை ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாதிகள் கைப்பற்றினார்கள். எங்கள் கிராமம் அதன் நடுப்பகுதியில் இருந்தது. நாங்கள் எங்கும் தப்பி செல்ல முடியாதபடி அந்த பகுதி முழுவதையும் முற்றுகையிட்டு இருந்தனர். ஒருநாள் இரவு எங்கள் ஊரை கைப்பறினார்கள்.

அந்த ஊரில் இருந்த பெண்கள் அனைவரையும் தனியாக அழைத்து சென்றனர்.

அதே போல் ஆண்களையும் தனியாக அழைத்து சென்றனர். எங்களை அங்குள்ள பாடசாலைக் குள் கொண்டு சென்று அடைத்தனர்.

ஆண்களை வேறு ஒரு இடத்திற்கு அழைத்து சென்று பெரும்பாலானவர்களை சுட்டு கொன்றனர். இரவு முழுவதும் துப்பாக்கி சத்தம் கேட்டுக் கொண்டே இரு ந்தது.

மறுநாள் காலையில் ஐ.எஸ் ஐ.எஸ். தீவிரவாதிகள் பலர் நாங்கள் இருந்த பாடசாலைக்குள் வந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் அங்கிருந்த பெண்களை தங்களுக்கு தேர்வு செய்து கொண்டார்கள். அழகான பெண்கள் மற்றும் இளம் பெண்களை தங்களோடு அழைத்து சென்றனர்.

அதேபோல என்னையும் அழைத்து சென்றனர். அங்கு வைத்து எங்களை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கினர். ஒருநாளைக்கு ஐந்து முறை பாலியல் வல்லுறவுக்கு ஆளானோம். ஒவ்வொரு இடமாக அழைத்து சென்று கொடுமை செய்தார்கள். ஒவ்வொரு நாளும் மாறி மாறி வேறு வேறு ஆட்கள் எங் களை அழைத்து செல்வார்கள். ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத் தில் 60 வயதில் இருந்து 70 வயது வரை உள்ள முதியோர்களும் இருக்கிறார்கள். அவர்கள் தான் மிகவும் கொடுமையாக நடந்து கொண்டார்கள். வயது அதிகமான அவர்கள் சிறுமிகளை தேர்வு செய்வார்கள். ஒருநாள் இரவு அவர்கள் பிடியில் இருந்து நாங்கள் தப்பித்து விட்டோம் என அப்பெண் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஐப்பான் ராணுவம் போரிட அனுமதி!

**ஜப்பான் இராணுவத்தினர் வெளிநாடு சென்று சண்டையிடும் அனுமதியை வழங்கும் சர்ச்சைக்குரிய பாதுகாப்பு மசோதாவை அந்நாட்டு நாடாளுமன்றத்தின் கீழவை நிறைவேற்றியுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஜப்பான் துருப்புகளுக்கு இவ்வாறான அதிகாரம் வழங்கப்படுவது இதுவே முதல்முறை என வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**



இந்த மாற்றத்தை தொடர்ந்து முன்னெடுத்து வரும் ஜப்பான் பிரதமர் ஷின்ஸோ அபே, ஜப்பான் சந்திக்கும் புதிய அச்சுறுத்தல்களை, குறிப்பாக சீனாவிடமிருந்து வரக்கூடிய புதிய அச்சுறுத்தல்களை சமாளிக்க இந்தச் சட்டம் உதவும் என்று தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்த திருத்தத்தை எதிர்ப்பவர்களோ, இரண்டாம் உலகப் போருக் குப் பின்னர் ஜப்பான் கடைப்பிடித்துவரும் அமைதிக்கான அரசியலமைப்பை மீறும் விதமாக இந்த புதிய திருத்தம் அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தின் கீழவையில் பிரதமர் ஷின் ஸோவின் அரசாங்கத்திற்கு வலுவான பெரும்பான்மை உண்டு என்பதால் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது. எதிர்க்கட்சிகள் இந்த வாக்கெடுப்பை புறக்கணித்தன. இந்த புதிய மசோதா பெரும்பாலான ஜப்பான் மக்களால் எதிர்க்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஆளில்லா விமானம் ஊடுருவல் இந்தியாவுக்கு பாக். கண்டனம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானிய வான் பரப்புக்குள் இந்தியாவின் ஆளில்லா விமானம் ஒன்று ஊடுருவியது தொடர்பில் இந்தியத் தூதரை அழைத்து பாகிஸ்தான் அரசாங்கம் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய காஷ்மீர் பகுதியில் பறந்து புகைப் படங்களை எடுத்துக் கொண்டிருந்த இந்த டிரோனை பாகிஸ்தான் இராணுவம் சுட்டு வீழ்த்தியிருந்தது.

காஷ்மீரில் எல்லைக் காவல் படையைச் சேர்ந்த பெண்ணொருவர் கொல்லப்பட்டதற்கு பாகிஸ்தானிய அரசிடம் இந்தியா புதனன்று கண்டனம் தெரிவித்திருந்தது.

பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு நடக்கக்கூடிய பிராந்திய மாநாடொன்றில் கலந்து கொள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீஃப் சென்ற வாரக் கடைசியில் விடுத்த அழைப்பை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏற்றுக் கொண்டிருந்தார்.

இந்த இரு நாடுகளுக்கும் இடையில் முறுகல் அடைந்துள்ள உறவுகள் சுமுகமாக அண்மையில் நடந்த முயற்சியாக இவ்விடயம் கருதப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அவுஸ்திரேலியாமீது கடும் விமர்சனங்கள்

தங்களிடம் தஞ்சம்கோரி வந்தவர்களை பப்புவா நியூகினியில் குடியேற்றும் அவுஸ்திரேலியாவின் கொள்கை கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்தக் கொள்கை கொண்டு வரப்பட்டு இரண்டு ஆண்டுகள் கடப்பதை முன்னிட்டு ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று, தஞ்சக் கோரிக்கையாளர்களை அவுஸ்திரேலிய அரசு நடத்தும் விதத்தை "பெருந்துன்பம்" என்று வர்ணித்துள்ளது.

2013ஆம்ஆண்டில்கொண்டு வரப்பட்ட கொள்கையின்படி, அவுஸ்திரேலியா பப்புவா நியூகினிக்கு சுமார் 400 மில்லியன் டொலர் பணத்தைக் கொடுக்கிறது.

பதிலுக்கு பப்புவா நியூகினி அவுஸ்திரேலியா சார்பில் தஞ்சக் கோரிக்கையாளர்களை தடுத்து வைத்திருந்து, அங்கேயே குடியமர்த்த வேண்டும்.

இந்தக் கொள்கையை அவுஸ்திரேலியா நியாயப்படுத்தியே வந்துள் ளது.

ஆனால், வெற்றி கரமாக மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களை விட, தடுப்பு முகாமில் உயிரிழந்தவர்களே அதிகம் என்று ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)




## கிரீஸ் நாடாளுமன்றத்தில் சிக்கன மசோதா நிறைவேற்றம்

(கிரீஸ்)

கிரீஸ் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சிக்கன நடவடிக்கை மசோதாவுக்கு பெரும்பாலான எம்.பிக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

கிரீஸைக் கடன் சிக்கலில் இருந்து மீட்கும் புதிய திட்ட மசோதாவை அந்நாட்டு பிரதமர் அலெக்சிஸ் சிப்ரஸ் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். அப்போது பேசிய அவர், "இந்தக் குழப்பமான சூழலில், மசோதா ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது மட்டுமே மிச்சம் உள்ளது. மசோதாவுக்கு ஆதரவு இல்லையெனில் நான் எனது பதவியை இராஜினாமா செய்கிறேன்" என்றார்.

இதன் பின்னர் நடந்த நாடாளுமன்ற கூட்டத்தில் 229 எம்.பிக்கள் ஆதரவாகவும் 64 பேர் எதிர்த்து வாக்களித்தனர். பின்னர் ஒருமனதாக ஐரோப்பிய யூனியன் திட்டங்களுக்கு ஆதரவு அளித்த எதிர்க் கட்சிகளின் ஒப்புதலோடு மசோதா நிறைவேறியது.

இந்த மசோதாவில் வருவாய் வரியை அதிகரிப்பது, முதியோர் ஓய்வூதியங்களைக் குறைப்பது, செலவீனங்களை கட்டுப்படுத்துவது, ஊழியர்களுக்கான சலுகைகளை திரும்பப் பெறுவது என பல திட்டங்கள் இடம் பெறுகின்றன. மசோதாவுக்கு சிப்ரஸின் கட்சி எம்.பிக்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்த நிலையில் உட்கட்சிக் கூட்டத்துக்கு பின்னர் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட்டது.

ஆனால், மசோதா நிறைவேறும் வேளையில், கிரீஸ் நாடாளுமன்றத்துக்கு எதிரே சுமார் 12 ஆயிரம் பேர் போராட்டத்தில் ஈடுபட்டதால் வன்முறை வெடித்தது என் பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மயானத்தை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை முன்வைப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்கு கீழுள்ள வேம்பிராய் மயானத்தின் நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாக பொது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த மயானத்தை மீசாலை வடக்கு மற்றும் கிழக்கு, மேற்கு ஆகிய பகுதிகளிலும் வேம்பிராய், மட்டுவில், சரசாலை ஆகிய பகுதிகளிலும் உள்ள மக்கள் தமது இறுதிச் சடங்கு தகனக் கிரியைகளுக்கு பயன்படுத்தி வருகின்ற னர்.



இந்நிலையில் இம்மக்களது தேவைகள் இம்மயானத்தில் முழுமையாக நிறைவேற்றப்படுவதில்லை.

அதாவது தமது தகனக் கிரியைகளுக்கு மயானத்தில் செய்யப்படவேண்டிய அத்தியாவசிய பராமரிப்புப் பணிகள் நீண்டகாலமாக செய்து கொடுக்கப்படவில்லை என மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் கிணறு மற்றும் அதனைச் சுற்றியுள்ள சூழல் என்பன கவனிப்பாரன்றிக் காணப்படுகின்றது.

பொதுமக்கள் தமது தேவைக்காக நீர் முதலானவற்றை வீட்டில் இருந்து கொண்டு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பானபிரச்சினைகளை பொதுமக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவித்தும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதனால் பொது மக்கள் மேலும் பல தரப்பட்ட சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

எனவே குறித்த மயானத்திற்கு தகனக் கிரியை பராமரிப்புப் பணிகள் மற்றும் மயானம் அமைந்துள்ள சூழல் கிணறு என்பன புனரமைக்கப்பட வேண்டும்.

இதற்கு சாவகச்சேரி பிரதேச சபை முற்று முழுதாக கவனம் செலுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சு.கவின் முன்னாள் எம்பிக்கள் 99 வீதமானவர்கள் மகிந்தவுடன்

(கொழும்பு)


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களில் 99 வீதமானவர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இருப்பதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒப்புக் கொண்டுள்ளதாக கட்சியின் உப தலைவர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்தவிற்கு வேட்புமனு வழங்குமாறு 99 வீதமான சுதந்திரக் கட்சி உறுப் பினர்கள் தம்மிடம் கோரியதாக மைத் திரிபால சிறிசேன ஒப்புக்கொண்டுள்ளார்.

மகிந்தவிற்கு வேட்புமனு வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரியமைக்கான காரணம் அவர் நாட்டுக்கு ஆற்றிய அளப்பரிய சேவையை கருத்திற்கொண் டாகும்.

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியீட்டியதன் பின்னர் பிரதமராக தெரிவு செய்யப்படுவதற்கு மகிந்த ராஜபக்ஷவை விடவும் சிரேஷ்ட உறுப்பினர் இல்லை.

இதனை கட்சியின் முக்கியஸ்தர்களான சுசில் பிரேமஜயந்த, அனுர பிரியதர்சன யாப்பா, ஜோன் செனவிரட்ன உள்ளிட்டவர்கள் மகிந்தவை பிரதமராக்குமாறு கோரி வருவதாகவும் குமார வெல்கம, கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது தெரிவித்துள்ளார். (இ-7)




# அம்பாந்தோட்டை மக்களுக்கு மகிந்த சேவையாற்றியுள்ளாரா?

## பிரதி அமைச்சர் பெரேரா கேள்வி



(கொழும்பு)

**அம்பாந்தோட்டை மக்களுக்கு சேவையாற்றியிருந்தால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தப்பிச்சென்று குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டிருக்க வேண்டிய அவசியமில்லை என பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.**

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அம்பாந்தோட்டை மக்களுக்கு சேவையாற்றவில்லை. அதன் காரணமாகவே தப்பிச் சென்றும் வேறு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட நேரிட்டுள்ளது.

கடந்த ஐந்தாண்டு காலத்தை மக்கள் மறக்கமாட்டார்கள். ஒரு சொட்டு இரத்தம் கூட சிந்தாமல் கடந்த ஜனவரி மாதம் 8ம் திகதி இந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. 100 நாள் திட்டத்தில் இவ்வளவு சேவை செய்த நாம் ஐந்து ஆண்டுகள் கிடைத்தால் எவ்வளவு சேவைகளை மக்களுக்கு ஆற்றமுடியும். நிச்சயமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு 113 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றுத் தாருங்கள்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 17ம் திகதி மேலும் ஆறு பேரையும் அழைத்துக் கொண்டே களுத்துறை மாவட்டத்தில் நாடாளுமன்றம் செல்வேன் என அஜித் பெரேரா சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)

## மகிந்தவை யானை தாக்கும் ரஞ்சன் ராமநாயக்க ஆரூடம்



(கொழும்பு)

மரத்திலிருந்து வீழ்ந்த மகிந்தவை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 17ஆம் திகதி யானைத் தாக்கும் என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டம் எனது பிறந்த ஊராகும் கம்பஹாவிற்கு நான் பரசூட் மூலம் குதிப்பது மாவட்டத்தை சுத்தப்படுத்தவே தவிர கொள்ளையடிப்பதற்கு அல்ல.

குட்டி ரோமபுரியை அழிவடையச் செய்தது யார் என்பது எல்லோருக்கும் தெரியும்.

கடந்த காலங்களில் மக்கள் பணத்தில் கை வைக்காத காரணத்தினால் நாடாளுமன்றில் ஊமை போன்று செயற்படவில்லை.

நாட்டில் நிலவிய சட்டம் ஒழுங்கீனங்களுக்கு எதிராக உயிர் அச்சுறுத்தலை கருத்திற்கொள்ளாது எதிர்க்கட்சியிலிருந்து குரல் கொடுத்தேன்.

பணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தைரியமாக குற்றச் செயல்களுக்கு எதிராக குரல் கொடுக்க என்னை அரசியலுக்கு கொண்டு வந்த இரத்தினபுரி மக்களுக்கு நான் கடனில்லை.

இரத்தினபரி மாவட்ட மக்க ளுக்கு நான் செய்த மிகப் பெரிய சேவை, களவெடுக்காமல் இருந்தமையாகும்.

நாம் ஜனவரி மாதம் 8ஆம் திகதி அடைந்த வெற்றியுடன் மகிந்த மரத்திலிருந்து வீழ்ந்தார்.

ஒகஸ்ட் மாதம் 17ஆம் திகதி குருநாகலில் மகிந்தவை மாடு முட்டாது, யானையே தாக்கும் என ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

மரம் ஏறி வீழ்ந்தவனை மாடு முட்டிய கதை என்பதற்கு நிகரான பழ மொழியை அடிப்படையாகக் கொண்டு ரஞ்சன் ராமநாயக்க, மகிந்தவின் தேர்தல் தோல்வி குறித்து மேற்கண்டவாறு ஆரூடம் தெரிவித்துள்ளார். (இ-7)

## மகிந்தவின் தலைமையில் இன்று நடக்கும் முதலாவது கூட்டத்தில் பங்கேற்பதில்லை

**அமைச்சர் துமிந்த திஸாநாயக்க முடிவு**

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளது.

முன்னணியின் சார்பில் அந்த மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, கூட்டத்தில் கலந்து கொள்ள போவதில்லை என தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் ஒரே மேடையில் அமர விரும்பவில்லை எனக் கூறி அவர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார். எனினும் கூட்டத்தை ஏற்பாடு செய்வதற்கான உதவிகளை வழங்க அவர் இணங்கியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் கல்வி சேவைகள் அமைச்சராக பதவி வகித்த துமிந்த திஸாநாயக்க, அரசாங்கத்தில் இருந்து மைத்திரிபால சிறிசேன வெளியேறிய போது அவருடன் இணைந்து துமிந்தவும் வெளியேறினார்.

மகிந்த ராஜபக்ஷவின் எதிர்ப்பாளர்களில் சிலர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து விலகி நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் கீழ் போட்டியிடும் நிலையில், துமிந்த திஸாநாயக்க உட்பட சிலரே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவானவர்களுக்கு எதிரான செயற்பாடுகளை மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் மேற்கொண்டுள்ளதாகவும் மகிந்த தரப்பின் பிரதான இலக்கு துமிந்த திஸாநாயக்க எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## சு.கவின் முடிவு நெருங்கிவிட்டது

(கொழும்பு)

ஜனவரி 8 ஆம் திகதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியின் பின்னர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு முன்னேறிச் செல்ல பொன்னான வாய்ப்பு கிடைத்ததாகவும் அந்த கட்சியில் இருக்கும் அதிகார பேராசை கொண்ட சிலர் அதனை தடுத்ததன் காரணமாக சுதந்திரக் கட்சி தனது முடிவை நெருங்கியுள்ளதாகவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 58 இலட்சம் வாக்கு வங்கி இருப்பதாக கூறும் நபர்களுக்கு ஒகஸ்ட் 18 ஆம் திகதி உண்மை தெரிய வரும்.

சிலர் போடும் கணக்குகளுக்கு பொதுத் தேர்தலில் மக்கள் சரியான பதிலை வழங்குவர். முந்தைய அரசாங்கம் சமுர்த்தி உதவி பெறுவோரை தனது அரசியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தியது. சமுர்த்தி உதவி பெறுவோர் தற்போதைய அரசாங்கத்துடன் இணைந்துள்ளனர் எனவும் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவிடமிருந்து பெறப்பட்ட கடனுக்கு மகிந்த சுயவிருப்பிலேயே அதிக வட்டி

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு



(கொழும்பு)

**அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிர்மாணப் பணிகளுக்காக சீனாவிடமிருந்து பெறப்பட்ட கடனுக்கு அதிகூடிய வட்டி வீதத்தை செலுத்த வேண்டியுள் ளமைக்கான பிரதான சூத்திரதாரி மகிந்த ராஜபக்ஷ என்பது ஆதாரங்களுடன் ஊர்ஜிதமாகியுள்ள நிலையில் சீனாவை குற்றம் சுமத்துவது அர்த்தமற்றதென முன்னாள் பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

மகிந்த ராஜபக்ஷ தனது சுய இலாபத்திற்காக நாட்டு மக்களை அதள பாதாளத்திற்குள் தள்ளி யிருப்பது ஆதாரங்களுடன் நிரூபணமாகியுள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

அப்போதைய நிதியமைச்சராகவிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விசேட அமைச்சரவை அனுமதியுடன் அதிகூடிய வட்டியை கடனாக திருப்பிச் செலுத்தியுள்ளார். இதில் சீனாவின் தலையீடு கிடையாது. இது மகிந்த ராஜபக்ஷவால் தனிப்பட்ட முறையில் எடுக்கப்பட்ட தீர்மானம் என்பதற்கான சாட்சியங்கள் எம்மிடம் உள்ளன. இதற்காக பல பில்லியன் ரூபா நட்டத்தை இலங்கை எதிர்கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

சீனாவிடமிருந்து அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணிகளுக்காக பெறப்பட்ட கடனுக்கு 1.4 சதவீத வட்டி மாத்திரமே திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய நிலையில் மகிந்த ராஜபக்ஷ சீன அரசாங்கம் கேட்காமலேயே அதிகூடிய 6.3 சதவீத வட்டியை கட னாக திருப்பிச் செலுத்தியுள்ளாரென்றும் முன்னாள் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

சீன அரசாங்கம் கடனாக வழங்கிய தொகை, அறவிடப்பட்ட வட்டி வீதம் தொடர்பில் சீனாவிலுள்ள இலங்கைத் தூதுவர் முன்னாள் நிதியமைச்சின் செயலாளர் பி.பி. ஜயசுந்தரவுக்கு எழுதிய கடிதம், மகிந்த ராஜபக்ஷ நிதியமைச்சராக தனது கையெழுத்தில் சமர்ப்பித்துள்ள அமைச்சரவைப் பத்திரம் ஆகியன எம்மிடம் உண்டு. முடியுமானால் இல்லையென மகிந்த ராஜபக்ஷ நிரூபித்துக்காட்ட வேண்டுமென்றும் அவர் சூளுரைத்தார்.

மகிந்த ராஜபக்ஷ தனது சொந்த தேவைக்காக சுய இலாபத்திற் காக சீனா கூட கேட்காத அதி கூடிய வட்டியை வழங்கி நாட்டு மக்களை படுகுழியில் தள்ளியுள்ளார். இதற்காக நாம் சீனா மீது விரல் நீட்டுவது அர்த்தமற்றது. அவர்கள் மீது எந்த தவறுமில்லை. இழைக்கப்பட்ட அனைத்து தவறுக்குமான சூத்திரதாரி மகிந்த ராஜபக்ஷ மாத்திரமே என்றும் அவர் தெரிவித்தார்.

இதனை தடுப்பதற்காக திறைசேரி அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிகள் பிரயோசனமற்று போனதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

## மெகா ஒப்பந்தங்களை செய்தவர்களுக்கு தண்டனை வழங்க விரைவில் சட்டமூலம்

### அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

மெகா ஒப்பந்தங்களை செய்து கொண்ட நபர்களுக்கு தண்டனை வழங்குவதற்காக சட்டமூலம் கொண்டு வரப்படும் என நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். மைத்திரியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்களை நிறைவேற்றி கொள்ள முடியாது போனது. நாடாளுமன்றத்தை செயற்படுத்த கடந்தகாலத்தில் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இதனால், அரசியலமைப்புச் சபையை ஏற்படுத்தி ஊழல், மோசடிகளை ஒழிக்கும் அரசியலமைப்பு ரீதியான ஆணைக்குழுக்களை



நியமிப்பதே எமது அடிப்படை பணியாகும். இதன் ஊடாக கடந்த காலத்தில் இடம்பெற்ற முகாமைத்துவ, நிதி ரீதியான பாரியளவிலான மெகா ஒப்பந்தங்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்குவதற்காக சட்டமூலம் கொண்டு வரப்படும். மைத்திரி ஆட்சி என்ற பெயரில் முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவது எமது பிரதான நோக்கம்.

அவற்றில் உள்ள சில விடயங்களை நிறைவேற்ற முடியாது போனது. ஜனாதிபதித் தேர்தலில் கிடைக்க ஆணை அப்போது நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்பதே இதற்கு காரணம். நாட்டுக்கு தற்போது நிலையான ஆட்சி அவசியம். அனைத்து அரசியல் கட்சிகளும் புதிய யுகம் மற்றும் புதிய பயணத்திற்கு தயாராக வேண்டும். மகிந்த ராஜபகஷவின் பயணத்தை தோற்கடிக்க வேண்டும் என்பது எமது அடிப்படையான எதிர்பார்ப்பல்ல எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## சுதந்திரக்கட்சி கிராமங்களை அபிவிருத்தி செய்யவில்லை

### மல்வத்த மகாநாயக்கர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கடந்த 20 வருடங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையிலான அரசாங்கம், கிராம அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கவில்லை என்று மல்வத்த மகாநாயக்கர் தெரிவித்துள்ளார்.

மல்வத்த மகாநாயக்கர் திப்பட்டுவாவே சித்தார்த்த ஸ்ரீ சுமங்கல தேரரிடம் நேற்று முன்தினம் மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆசிப்பெறச் சென்ற போதே இந்த கருத்து வெளியிடப் பட்டுள்ளது.

அம்பாந்தோட்டையில் மக்களுக்கான அடிப்படை வசதிகள் செய்துக்கொடுக்கப்படாமல், விமான நிலையமும் துறைமுகமும் அமைக்கப்பட்டது.

இதன்காரணமாகவே மக்கள் முன்னைய அரசாங்கத்துக்கு வாக்களிக்கவில்லை என்றும் மல்வத்த மகாநாயக்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பொறுத்தவரையில் அந்தக்கட்சி ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படும் போது தமது கை சின்னத்தை மறந்துப் போயுள்ளது.

இது மாற்றியமைக்கப்பட வேணடும். கை சின்னமே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அடையாளப் படுத்தும் சின்னமாக அமையும் என்றும் மகாநாயக்கர் தெரிவித்தார்.

இதன்போது கருத்துரைத்த பிரசன்ன ரணதுங்க, சந்திரிகா குமாரதுங்க ஆட்சியில் இருந்தபோதே அபிவிருத்திகள் இடம்பெறவில்லை. எனினும் மகிந்த ஆட்சியின் போது கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன என்று தெரிவித்தார். (இ-7)

## மகிந்த பிரதமராக வேண்டுமெனக் கூறி பூஜைகளில் ஈடுபடும் ஷிராந்தி ராஜபக்ஷ

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதமராக வேண்டும் என பல ஆசிர்வாத பூஜைகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிராந்தி ராஜபக்ஷ ரன்வல விகாரைக்கு சென்று விசேட பூஜையில் ஈடுபட்டுள்ளார்.

பொதுத்தேர்தலில் கூட்டணியில் போட்டியிடும் உபாலி குணரத்னத்தின் ஏற்பாட்டில் இப்பூஜை



வழிபாடுகள இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

### ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில்

## திருடர்கள் உள்ளிட்ட குற்றவாளிகளுக்கு வேட்பு மனு வழங்கப்பட்டது எதற்காக?

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் ஊழல் மோசடிகள், திருடர்கள் உள்ளிட்ட குற்றவாளிகளுக்கு ஏன் வேட்பு மனு வழங்கப்பட்டது என்பதனை நாட்டு மக்களுக்கு விளக்க வேண்டுமென கேகாலை மாவட்டத் தலைவர் அதாவுத செனவிரட்ன கேள்வி எழுப்பியுள்ளார்.


நான் தலைமை தாங்கும் கேகாலை மாவட்டத்தில் ஊழல் மோசடிகள் மற்றும் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இரண்டு பேருக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் வேட்பு மனு வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பு மனு தயாரிப்பில் தாம் தலையீடு செய்யவில்லை என ஜனாதிபதி கூறியுள்ளார். அவ்வாறு எனில் திருடர்கள் மோசடிக்காரர்களுக்கு யார் வேட்பு மனு வழங்கியது. யார் அவ்வாறு அதிகாரம் வழங்கியது.

திருடர்கள், மோசடிக்காரர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதால் கொள்கை அடிப்படையிலான அரசியலில் ஈடுபட்டு வரும் எனக்கு மக்கள் முன்னால் சென்று வாக்கு கோர முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என அதாவுத செனவிரத்ன ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 100,200 மீற்றர் பெண்களுக்கான ஓட்டம் யாழ். இந்து மகளிர் கல்லூரி தங்கம்





வடமாகாண தடகளப்போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி நிதர்ஷனா சுதாகரன் 100 மீற்றர் , 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கப்பதக்கத்தினைப் பெற்றதோடு 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் சிறந்த பெறுபேற்றினை பெற்ற வீராங்கனையாகவும் தெரிவானார்.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 2015 ஆம் ஆண்டுக்கான தடகளப்போட்டிகள் அண்மையில் வவுனியாவில் இடம்பெற்றது.

இதில் 19 வயது பிரிவுக்குட்பட்ட போட்டியில் மானிப்பாய் நவாலி தெற்கினைச் சேர்ந்த யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி நிதர்ஷனா சுதாகரன் 100 மீற்றர் ஓட்டம், 200 மீற்றர் ஓட்டம் ஆகியவற்றில் தங்கப்பதக்கத்தினை பெற்றுக் கொண்டார். மற்றும் 100 மீற்றர் ஓட்டத்திற்கான சிறந்த பெறுபேற்றினை பெற்ற வீராங்கனையாகவும் தெரிவானார். (கு)

## மாகாண மட்ட மெய்வல்லுநர் போட்டி



வவுனியா கல்வியியற் கல்லூரி மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்ற வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதின் கீழ் பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் புத்தூர் வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலய பாடசாலை மாணவி செல்வி சந்திரகுமார் கஜனி முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைத் தட்டிக்கொண்டார். (கு)



வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் அண்மையில் வடக்கில் உள்ள 5 மாவட்டங்களுக்கு இடையிலான கராத்தே போட்டியை (ரக்குவாண்டு) கைதடி நவீல்ட் பாடசாலையில் நடத்தியது. இதில் பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற கிளிநொச்சி மாவட்ட அணியையும் ஆண்களுக்கான போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற கிளிநொச்சி மாவட்ட அணியையும் போட்டி பிரமுகர்கள், நடுவர்கள் மற்றும் பயிற்சி ஆசிரியர் சென் சே.விஜயராஜினையும் படத்தில் காணலாம்.

## 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான சிநேகபூர்வ உதைபந்தாட்டம்

நாடளாவியரீதியில் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தாட்டக் கழகங்களை உருவாக்கும் நோக்கில் இலங்கை உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கம் (Sri Lanka Soccer Masters Association) வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் வடமாகாண கௌரவ ஆளுநர் ஒன்றிணைந்து நடத்தும் சிநேகபூர்வ (40 வயதுக்கு மேற்பட்டோருக்கானது) உதைபந்தாட்டப்போட்டி நாளை (சனிக்கிழமை) பிற்பகல் 4.30 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் ஸ்ரீலங்கா சொக்கர் மாஸ்டர்ஸ் (XI) அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் வி.க.விளையாடவுள்ளது.

இலங்கை உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கத்தில் அகில இலங்கை ரீதியில் 42 கழகங்கள் அங்கத்துவம் பெற்றுள்ளன என இச்சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் ம.மதியழகன் தெரிவித்துள்ளார். (கு)



வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான பட்மின்டன் போட்டியில் வலய மட்டத்தில் முதலாமிடத்தையும் மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தையும் பெற்ற கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை பாடசாலை அணியினரையும் பொறுப்பாசிரியர்களையும் படத்தில் காணலாம்.

## வங்கப்புலி அபார வெற்றி தொடரை பறிகொடுத்தது தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் வங்கதேச அணி அபார வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியுள்ளது.

தென்னாபிரிக்கா- வங்கதேசம் அணிகள் இடையே 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடர் நடைபெற்றது.

இதன் முதல் இரு போட்டிகளில் தென்னாபிரிக்கா, வங்கதேச அணிகள் தலா ஒரு வெற்றி பெற்றுள்ளன. இந்நிலையில் கடைசி ஒருநாள் போட்டி சிட்டாகாங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. மழை காரணமாக ஆட்டம் 40 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடக்க வீரர்களாக டி காக், அம்லா களமிறங்கினர்.

டி காக் 8 ஓட்டங்களில் வெளியேற, அம்லா (15), டுபிளசி (6) அடுத்தடுத்து சாகிப் அல்ஹசன் பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர். ரோசோ (17) நிலைக்கவில்லை.

டுமினி ஒரு அளவு தாக்குப் பிடித்தாடினார். இறுதியில் 40 ஓவர்கள் முடிவில் அந்த அணி 169 ஓட்டங்கள் எடுத்தது.

இதையடுத்து டக்வொர்த் விதிப்படி 40 ஓவர்களில் 170 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்கதேசம் களமிறங்கியது.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய தமிம் இக்பால் மற்றும் சவுமிய சர்கர் தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களின் பந்தை அடித்து ஆடினர்.

சிறப்பாக ஆடிய சவுமிய சர்கர் 90 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.

இறுதியில் 26.1 ஓவர்களில் 1 விக்கெட் இழப்பிற்கு 170 ஓட்டங்கள் எடுத்து வங்கதேசம் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 2-1 என்ற கணக்கில் தொடரையும் கைப்பற்றியது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுடைய உண்மையான கண்ணியம் தன்னைப் பற்றி நன்கு அறிந்து கொள்வதிலே உள்ளது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# காலமாற்றம் வகுத்து வாழ்ந்த தமிழினத்தின் நிலை காணீரோ!

தமிழர்களின் பண்பாடு என்பது மிகவும் பெறுமதியானதும் அர்த்தமுள்ளதுமாகும். உயர்ந்த பண்பாட்டைத் தமிழினம் கொண்டிருந்ததால்தான் திருவள்ளுவரால் திருக்குறள் என்னும் உலகப் பொதுமறையை உருவாக்க முடிந்தது.

குடும்ப வாழ்வை இல்லறம் என்று குறிப்பிடுகின்ற மிக உயர்ந்த உன்னதம் உலகில் வேறு எந்த இனத்திலும் காணமுடியாது.

கணவன், மனைவி, பிள்ளைகள், உறவுகள் கூடி வாழ்கின்ற வாழ்வியலை ஒரு பெரும் அறமாகக் கருதுகின்ற நடைமுறை தமிழர்களுக்கு இருக்கக் கூடிய மிக உயர்வான சிறப்பு.

இன்று ஆடிப்பிறப்பு. சூரியன் தெற்கு நோக்கி நகருகின்ற காலம் ஆரம்பமாவதால் இதனை தட்சணாய காலம் என்று வகுப்பர். இதேபோல தை மாதம் முதலாம் திகதி சூரியபகவான் வடக்கு நோக்கி நகர்வார். இது உத்தராயண காலம். சூரியன் ஆறு மாதம் வடக்கு நோக்கியும் அடுத்த ஆறுமாதம் தெற்கு நோக்கியும் நகருகின்ற காலத்தை வகைப்படுத்தி அதற்கேற்றால் போல் உணவு வகைகளை மாற்றுகின்ற தமிழர்களின் வாழ்வு எத்துணை சிறப்பானது.

தட்சணாயகாலம் ஆரம்பமாகும் போது பனங்கட்டிக் கூழ் காய்ச்சிக் குடித்து காலமாற்றத்திற்கு ஏற்ப உணவுமுறையை மாற்ற ஆரம்பிக்கின்றோம். இங்ஙனம் உணவுப் பழக்கத்திலும் கூட தமிழினம் தன்னை ஒழுங்குபடுத்தியது. எனினும் இன்று எங்களின் சிறப்பை நாங்கள் உணரவில்லை. மேலைத்தேய நாகரிகமும் சினிமா மோகமும் எங்கள் வாழ்வின் அடிப்படைகளை சீர்குலைத்துவிட்டன.

இதுதவிர, எங்களின் பண்பாட்டை எங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதிலும் அதனை பேணுவதிலும் நாங்கள் பஞ்சி கொண்டவர்களாகவே இருக்கிறோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் தர்மசக்கரக் கொடிகள் பறக்கவிடப்படுகின்றன. பௌத்த சிங்கள மாணவர்களின் இறை நம்பிக்கைக்கு இது எத்துணை சான்று என்பதை நாம் கண்டறிய வேண்டும். அதேநேரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சேர் பொன் இராமநாதனின் கொடையால் கிடைத்த உயர் கலாபீடம்.

அங்கு பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமான் எழுந்தருளியிருக்கின்றார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்பது அந்தப் பரமேஸ்வரனின் பெயரால் உருவாக்கப்பட்ட பரமேஸ்வரா கல்லூரி என்பதும் தெரிந்ததே.

எனினும் பரமேஸ்வரப்பெருமான் வருடத்தில் ஒருமுறை திருநெல்வேலியை- யாழ்.பல்கலைக்கழகத்தைச் சுற்றி வீதியுலா வருவார். வாழைகள் கட்டி, மகர தோரணங்கள் நாட்டி, வீதிகள் தோறும் கும்பங்கள் வைத்து பரமேஸ்வரப் பெருமானை மக்கள் வழிபாடு செய்வர். ஆனால் இந்த நடைமுறை எத்தனையோ ஆண்டுகளாக இல்லாமல் போய்விட்டது.

ஏன்? இந்த நிலைமை. தென்பகுதியில் இருந்து வந்த பௌத்த சிங்கள மாணவர்கள் வெசாக் பண்டிகை நாளில் மட்டுமன்றி, ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் யாழ்.பல்கலைக்கழக நுழைவாயிலில் பௌத்த மதக் கொடிகளை பறக்கவிடும் போது, பல்கலைக்கழகத்தில் இருக்கும் பரமேஸ்வரனை வெளியில் கொண்டுவர முடியாமல் போனது ஏன்?

பயம் என்று சொல்லி தப்பித்துக் கொள்கின்ற மரபுதான் காரணமா?

முதலில் எங்களின் இனத்தை-சமயத்தை பாதுகாக்க நாங்கள் தயாராக வேண்டும். இதைவிடுத்து செயலற்ற வார்த்தைகள் பேசுவதால் எதுவும் நடந்துவிடாது.

நாங்கள் எங்களின் கலாசாரத்தை, பண்பாட்டை, சமய நடைமுறைகளை பின்பற்றும் போது மற்றவர்களும் அதை மதிப்பார்கள்.

# போதை எதிர்ப்பு கொடிவாரத்தில் 13 மில். ரூபாய் யாழில் சேகரிப்பு

யாழ்.மாவட்டத்தில்போதைப் பொருள் எதிர்ப்பு கொடிவார சேமிப்பின் மூலம் 13 மில்லியன் ரூபாய் நிதி சேகரிக்கப்பட்டுள்ளதாக வாழ்வின் எழுச்சி திணைக் களத்தின் யாழ். மாவட்ட பணிப்பாளர் கே.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டின் போதைப்பொருள் எதிர்ப்பு கொடிவாரத்தில் 33 வாழ்வின் எழுச்சி (சமுர்த்தி வங்கிகளினாலும் 13 மில்லியன் ரூபாய் நிதி சேகரிக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 32 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் சேகரிக்கப்பட்டு முதலிடம் பெற்றது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு 21 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் சேகரித்தது இரண்டாவது இடத்தையும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு 19 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் சேகரித்து 3 இடத்தையும் பெற்றுள்ளது.

இதில் அதிகூடிய நிதி சேகரிப்பில் ஈடுபட்ட வாழ்வின் எழுச்சி வங்கிகளில் உடுப்பிட்டி வங்கி 11 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாயும் வல்வெட்டித்துறை வங்கி 11 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாயும் நெல்லியடி வங்கி 10 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாயுமாகச் சேகரித்துள்ளன.

அதிகளவான நிதி சேகரிப்பில் ஈடுபட்ட வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர்களின் வரிசையில் உடுப்பிட்டி வங்கியைச் சேர்ந்த சி.நிமலினி 3 இலட்சத்து 17 ஆயிரத்து 371 ரூபாயும் யாழ். மேற்கு வங்கியைச் சேர்ந்த பி.வசிகரன் 3 இலட்சத்து ஆயிரத்து 830 ரூபாயும் உடுப்பிட்டி வங்கியைச் சேர்ந்த சி. சுமதி 2 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாயும் சேகரித்துள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு போதைப் பொருள் எதிர்ப்பு கொடிவார சேமிப்பில் 11.7 மில்லியன் ரூபாய் நிதி சேகரிக்கப்பட்டது.

இம்முறை அதைவிட அதிகமான தொகை சேகரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேமிப்பானது மது, புகைத்தல் போன்ற செயற்பாடுகளை தடை செய்து மக்களுக்கு விழிப்புணர்வை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட செயற்றிட்டமாகும்.

இதில் சேகரிக்கப்படும் நிதியில் இருந்து சமுர்த்தி பயனாளிகளுக்கு துவிச்சக்கரவண்டிகள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள், சுயதொழில் உதவிகள் வழங்குதல், பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் கல்விச் செயற்பாடுகளுக்கு நிதியுதவி வழங்குவது போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# ஜனாதிபதி மைத்திரியின் உரை புத்தூக்கத்தை அளித்துள்ளது

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லாட்சி எதிர்ப்பார்ப்புக்களை தகர்ப்பதில்லை என்பதனை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிரூபித்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வேட்புமனு வழங்கியதனால் குழப்பமடைந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கு, ஜனாதிபதி மைத்திரியின் அண்மைய உரை புத்தூக்கத்தை அளித்துள்ளது.

ஜனவரி மாதம் 8ஆம் திகதி பெரும்பான்மையான மக்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வெற்றி பெறச் செய்தனர்.

மக்கள் எதிர்பார்த்த நல்லாட்சியை ஜனாதிபதி பாதுகாப்பார் என்பது நாட்டு மக்களுக்கு தெளிவாகியுள்ளது.

நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி மீது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

நல்லாட்சியை ஏற்படுத்த ஒத்துழைப்பு வழங்கிய ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிவில் அமைப்புக்களின் நம்பிக்கையை ஜனாதிபதி சிதறடிக்கவில்லை என்பது மகிழ்ச்சி அளிப்பதாக ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

பியகம பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (எ-11)




## இனிய பதில் கூறுங்கள்

★ ஒருவர் தர்மம் செய்கிறாரென்றால், அவர் அல்லாஹ்வின் மீது கொண்ட நல்லெண்ணத்தின் காரணமே.

★ ஒருவர் கஞ்சத்தனம் செய்கிறார் என்றால் அவர் அல்லாஹ்வின் மீது கொண்ட தவறான எண்ணத்தின் காரணமேயாகும்.


★ வாழ்நாளெல்லாம் கஞ்சனாக இருந்து விட்டு மரணவேளையில் கொடை வள்ளலாக மாறும் மனிதனைப் பார்த்து இறைவன் கோபம் அடைகின்றான்.

★ நீங்கள் ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர். ஒருவர் மீது ஒருவர் துவேசம் கொள்ளாதீர்.

★ எவரிடமும் உங்கள் தேவைகளை மறைமுகமாகச் சொல்லிக் கேளுங்கள். ஏனென்றால் ஒவ்வொன்றிற்கும் பொறாமைப்படுபவன் இருந்து கொண்டே இருக்கிறான்.

★ வசதி இல்லாதவன் உங்களிடம் ஏதேனும் கேட்டால் கொஞ்சமேனும் கொடுத்து அனுப்புங்கள் அல்லது இனிய வார்த்தைகளால் பதில் சொல்லுங்கள்.

★ கஞ்சத்தனத்தைப் பற்றி பயந்து கொள்ளுங்கள். ஏனென்றால் உங்கள் முன்னோர்கள் கஞ்சத்தனத்தின் காரணமாகத் தான் அழிந்து போனார்கள்.



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## அசூயை, அனசூயை- மனதில் ஒரு பகுதி

உலகிலேயே மிகச் சிறந்த சூழ்நிலை நிலவினாலும் அங்கே எப்போதும் குற்றம் கண்டுபிடிப்பதற்கு என்று ஒருவித மன அமைப்பு உள்ளது. இவ்வித மனநிலை கொண்டவர்களிடம் நீங்கள் மிகச்சிறந்த ஒன்றைக் கொடுத்தாலும், அதில் அவர்கள் குற்றம் கண்டுபிடித்துவிடுவார்கள். மிகச்சிறந்த நண்பனிடத்தும் அல்லது மிக அழகான ஓவியத்திலும் கூட ஏதோ தவறு காண்பார்கள். இந்த மனஅமைப்புதான் அசூயை என்பது. இந்தவித மனஅமைப்பு கொண்டவர்கள் புனிதமான ஞானத்தை அறிந்து கொள்ள முடியாது. அசூயை என்பது குற்றம் காண்பது. எங்கும் எதிலும் கெட்ட நோக்கத்தோடு பார்ப்பது. யாரோ ஒருவர் உள்ளே வந்து கொண்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது காற்று வீசுகிறது. நீங்கள் கதவை மூடுகிறீர்கள். ஆனால் வந்து கொண்டிருப்பவர், நீங்கள் அவர் முகத்தில் அறைந்து மூடுவது போல் கதவை மூடுகிறீர்கள் என்று நினைக்கிறார்!. இது அசூயை.

ஒருவரிடம் நட்பாக இருக்கிறீர்கள். பத்தாண்டுகளுக்குப் பிறகு நீங்கள் ஒரு தவறைக் காண்கிறீர்கள்; அந்த நட்பு வேண்டாம் என்று தீர்மானிக்கிறீர்கள். அப்போது அந்த நட்பில் எந்த நல்லதும் உங்களுக்குத் தெரியவில்லை. இது அசூயை.ஆன்மீகப் பாதையை விட்டு விலகிப்போன அக்கணமே அப்பாதையில் எல்லாமே தவறு என்று நீங்கள் பார்க்கிறீர்கள்ஒரு குழந்தை தன் தாயைப்பார்த்து, " அம்மா நீங்கள் என்னை நேசிக்கவில்லை!" என்று சொல்கிறது. இது அசூயை. குழந்தையின் பார்வை தவறானது; ஒரு தாய் தன் குழந்தையிடம் அன்பைக் காட்டவில்லை என்றால் வேறு யார் காட்டுவார்கள்? அது தாய்க்கும் வருத்தம் தருகிறது. இதுபோலத்தான் யாராவது ஒருவர் என்னிடம் வந்து, " குருஜி, உங்களுக்கு என்மேல் அன்பு இல்லை!" என்று சொல்வது. நான் அவர்களை நேசிக்கவில்லை என்றால், உலகில் வேறு யார்தான் அவர்களை நேசிப்பார்கள்?ஆனாலும் குரு எப்போதும் வருந்துவதில்லை.

வெவ்வேறு மெய்யறிவு நிலைகளில் அறிவு வெவ்வேறு விதமாக இருக்கும். ஒரு குறிப்பிட்ட மெய்யறிவு நிலையில் நீங்கள் அனசூயை ஆகிவிடுகிறீர்கள்.அனசூயை என்பது குற்றம் காணும் குணம் இல்லாமல் இருப்பது.அர்ஜுனன் அனசூயாவாக இருப்பதால்தான் ராஜ இரகசியத்தை அவனுக்கு வழங்குவதாக அவனிடம் ஸ்ரீகிருஷ்ணன் சொல்கிறார். " நீ எனக்கு மிகவும் நெருக்கமாக இருந்தாலும் நீ என்னிடம் குற்றம் காண்பதில்லை"மற்றவரிடம் இருந்து நாம் தூர இருக்கும்போது அவரிடம் உள்ள தவறை நாம் கவனிக்காமல் தவறவிடுவது எளிது. ஆனால் நெருங்கியுள்ள போது எந்தத்தவறும் உங்களிடமிருந்து தப்பிக்காது. வெகு தொலைவிலிருந்து பார்க்கும்போது பள்ளங்கள் தெரிவதில்லை. மிக நெருக்கமாக இருக்கும்போது சம தரையிலும் துளைகள் தெரியும். துளைகளில் மட்டுமே கவனம் போனால் பொருட்களின் பரிமாணத்தை நீங்கள் காணமுடியாது.

அனசூயையில் நீங்கள் இல்லையென்றால் உங்களுக்கு ஞானத்தைக் கொடுப்பதில் அர்த்தமில்லை. ஏனென்றால் உங்களிடம் ஞானம் மலராது.முகம்பார்க்கும் ஒரு நிலைக்கண்ணாடியில் தூசி படிந்திருந்தால், நீங்கள் அதைச் சுத்தம் செய்ய முடியும். ஆனால் உங்கள் கண்களில் கண் புரை வளர்ந்து கண் பார்வை மங்கியிருந்தால் எவ்வளவு தூசி தட்டினாலும் அதனால் பலனில்லை. எனவே முதலில் நீங்கள் உங்கள் கண்புரையை அகற்றவேண்டும். பிறகு கண்ணாடி ஏற்கனவே சுத்தமாக இருப்பதை நீங்கள் காண்பீர்கள்.அசூயை குற்றம் கண்டுபிடிப்பது "இவ்வுலகம் முழுவதும் அறிவு, கூர்மையற்று இருக்கிறது. உலகமே சரியில்லை". "உலகைப் பற்றிய என் நோக்கு தான் மங்கலாக உள்ளது" என்று அறிவதுதான் அனசூயை. உங்களுடைய நோக்கு தவறான நோக்கு என்று நீங்கள் அறிந்து கொள்ளும் போதே ஏற்கனவே பாதி சிக்கல்கள் மறைந்து விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நில மசோதா விவகாரத்தில் பா.ஐ.க.அரசு தீவிர முயற்சி

(டில்லி)

**நிலம் கையகப்படுத்தும் மசோதா விவகாரத்தில், மாநில அரசுகள் இடையே ஒருமித்த கருத்தைக் கொண்டுவந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிட, பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு தீவிர முயற்சி எடுத்துவருவதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.**



நிலம்கையகப்படுத்துதல்மசோதா தொடர்பாக விவாதிப்பதற்காக நிதி ஆயோக் அமைப்பின் 2 ஆவது நிர்வாகக் குழுக் கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் நேற்று முன்தினம் (புதன்கிழமை) டில்லியில் நடைபெற்றது. இதில் மத்திய கொள்கைக் குழு வின் தலைவரான பிரதமர் நரேந் திர மோடி பேசுகையில்,

மத்தியில் எனது அரசு அமைந்ததும், நிலம் கையகப்படுத்துதல் தொடர்பாக 2013 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தைச் செயற்படுத்துவது குறித்து பல்வேறு மாநிலங்களும் கவலை தெரிவித்தன. 2013 ஆம் ஆண்டு சட்டத்தில் இடம்பெற்றுள்ள சரத்துகளால், வளர்ச்சி பாதிக்கப்படும் என்று பல்வேறுமாநிலங்களும்கருதின. எனவே அந்தச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்று சில மாநிலங்களின் முதல்வர்கள் வலியுறுத்தினர். இது தொடர்பாக எனக்கு கடிதங்களையும் அவர்கள் எழுதினார்கள.

"டீம் இந்தியா"வின் ஒரு பகுதியாக வளர்ச்சி நடவடிக்கைகளில் அனைத்து மாநிலங்களும் கவனம் செலுத்த வேண்டும். கடந்த ஓராண்டு நமக்கு நல்ல தொடக்கமாகும். கடந்த ஓராண்டில், திட்டமிடுதல் தொடர்பான நடவடிக்கையில் மாநிலங்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. மத்திய கொள்கைக் குழுவின் துணை குழுக்களில் மாநில முதல்வர்கள் தலைமை வகிக்கிறார்கள்.

மத்திய அரசால் வகுக்கப்படும் வளர்ச்சித் திட்டங்கள், மாநிலங்களுடன் கலந்தாலோசித்து கொண்டு வரப்பட வேண்டும் என்பதே எனது கருத்தாகும். வளர்ச்சி தொடர்பாக மாநிலங்கள் தெரிவித்த கவலைகளை அடிப்படையாக வைத்தே, நிலம் கையக மசோதா தொடர்பாக 3 முறை அவசரச்சட்டம் கொண்டு வரப்பட்டது. அதேபோல், விவசாயிகளுக்கும், அவர்களுக்குரிய இழப்பீடு கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாகிஸ்தான் படைகள் மீண்டும் தாக்குதல்

## இந்தியா கடும் கண்டனம்

இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ளது. இதை மீறும் வகையில் பாகிஸ்தான் அடிக்கடி தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

நேற்று முன்தினம்ஜம்மு அருகே அக்னூர் செக்டார் பகுதியில் சர்வதேச எல்லை கட்டுப்பாட்டு கோடு அருகே கனாசக் என்ற இடத்தில் உள்ள இந்திய இராணுவ சாவடிகளை குறி வைத்து திடீர் தாக்குதல் நடத்தினார்கள். உடனே இந்திய வீரர்கள் எதிர் தாக்குதல் நடத்தினார்கள். பாகிஸ் தான் படையினர் எல்லைப் பகுதி யில் உள்ள கிராமங்களை குறி வைத்து தாக்கினார்கள். இந்த தாக் குதலில் பாலிதேவி என்ற பெண் பலியானார். மேலும் பாதுகாப்பு படை வீரர்கள் உட்பட 6 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதனால் எல்லையின் கிராமப் பகுதியில் பதற்றம் நிலவுகிறது. இதற்கிடையே காஷ்மீர் எல்லையில் ஆர்.எஸ்.புரா பகுதியில் 2 ஆவது நாளாக நேற்றும் பாகிஸ்தான் படைகள் அத்துமீறலில் ஈடுபட்டன. இதில் 4 பேர் காயம் அடைந்தனர். பாக்கிஸ்தானின் அத்து மீறலால் இரு நாடுகளிடையே உறவில் பாதிப்பை ஏற்படுத்தும் நிலை உருவாகியுள்ளது. இதையடுத்து இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதர் ராகவன், பாகிஸ்தானின் வெளியுறவு செயலாளரை சந்தித்து இந்தியாவின் கடும் கண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் அத்துமீறலால் இந்தியப் பெண் பலியாகி இருக்கிறார். இது கண்டனத்துக்குரியது என்றும் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

இந்திய தூதரின் இந்த புகாரை சகித்துக்கொள்ள முடியாத பாகிஸ்தான் அவர் மீது உளவு பார்த்த விவகாரம் தொடர்பாக குற்றஞ்சாட்டி மனு அனுப்பியுள்ளது. (இ-7)

# ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கு கர்நாடகவின் திருத்தப்பட்ட மனு ஏற்பு

(டில்லி)

வருமானத்துக்கு அதிகமாக சொதுக்குவித்த வழக்கில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து பெங்களூர் தனிநீதிமன்ற நீதிபதி குன்ஹா கடந்த ஆண்டு செப்டெம்பர் 27ஆம் துகதி தீர்ப்பு அளித்தார்.



இதை எதிர்த்து ஜெயலலிதா உள்ளிட்ட 4பேரும்கர்நாடக உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தனர். இந்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த நீதிபதி குமாரசாமி கடந்த மே மாதம் 11ஆம் திகதி ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேரையும் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கினார்.

நீதிபதி குமாரசாமி வழங்கிய தீர்ப்பில் கணித பிழைகள் இருப்பதாக குற்றஞ் சாட்டப்பட்டன. இதை தொடர்ந்து ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில் உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து கர்நாடக அரசு உச்ச நீதிமன்றில் கடந்த மாதம் 23 ஆம் திகதி மனுத்தாக்கல் செய்தது. இந்த மீள்பரிசீலனை மனு சுமார் 2 ஆயிரம் பக்கங்களை கொண்டதாக இருந்தது.

கர்நாடக அரசின் மேல்முறையீட்டு மனுவில் குறைபாடுகள் இருபதால் திருத்தம் செய்து புதிய மனுவை தாக்கல் செய்யுமாறு உச்ச நீதிமன்றம் பதிவாளர் உத்தர விட்டிருந்தார்.

இதை தொடர்ந்து கர்நாடக அரசு உச்ச நீதிமன்றில் திருத்தப்பட்ட மனுவை தாக்கல் செய்தது.

இந்த மனுவை உச்ச நீதிமன்ற பதிவாளர் நேற்று ஏற்றுக் கொண்டார். அதற்கு வழக்கு எண் 11477 ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே வழக்கு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது. (இ-7)





# இந்தியா மீது பாகிஸ்தான் குற்றச்சாட்டு

எல்லையில் இந்திய இராணுவம நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் உயிரிழந்தனர் என்று பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளதாக டான் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் இராணுவத்தினர் எல்லைப்பகுதியில் உள்ள கிராமங்களை குறிவைத்தும் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் பாலிதேவி(வயது- 42) என்ற பெண் பரிதாபமாக உயிரிழந்தார். 6 பேர் படுகாயம் அடைந்தனர். படுகாயம் அடைந்தவர்கள் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதற்கிடையே பாகிஸ்தான் இராணுவம், எல்லையில் ஆர்.எஸ். புரா உள்ளிட்ட 5 இந்திய நிலைக்ளை குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளது. இந்திய இராணுவம் தரப்பில் பதிலடி கொடுக்கப்பட்டது.

இதில் கிராம மக்கள் 3 பேர் காயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இச்சம்பவம் எல்லைக் கிராம மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இவ் விவகாரம் தொடர்பாக இந்தியா, பாகிஸ்தான் தூதரை அழைத்து மனு வழங்கியுள்ளது.

இந்நிலையில் இந்திய இராணுவம் நடத்திய தாக்குதலில் 4 பேர் பலியாகினர் என்று பாகிஸ்தான் இராணுவம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பேருந்து கவிழ்ந்து விபத்து; 63 மாணவர்கள் படுகாயம்!

பெரம்பலூரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே, 93 மாணவர்களுடன் சென்ற தனியார் பாடசாலை பேருந்து கவிழ்ந்த விபத்தில் 63 மாணவர்கள் படுகாயம் அடைந்தனர்.

பெரம்பலூர் மாவட்டம் பரலக்கரையில் தனலெட்சுமி என்ற தனியார் பாடசாலை செயற்பட்டு வருகிறது. இந்த பாடசாலையில் சேரலி, கல்பாடி, மருவத்தூர், ஏரையூர், அகரம் சீகூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மாணவர்கள் படித்து வருகின்றனர்.

நேற்றுக் காலையில் இந்த பகுதிகளில் இருந்து 93 மாணவ- மாணவிகளை பாடசாலை பேருந்து ஒன்று ஏற்றிக் கொண்டு வேகமாக சென்றது. பேருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள பாலக்கரை என்ற பகுதியில் வந்தபோது, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் 63 மாணவ-மாணவிகள் பலத்த காயம் அடைந்தனர்.

இதை பார்த்த அருகில் இருந்த பொதுமக்கள் விரைந்து வந்து மாணவர்களை மீட்டுள்ளனர். அப்போது, பேருந்தில் அவசர வழிக் கதவு திறக்கப்படவே இல்லை. கடைசி வரை போராடி திறக்காததால் பொதுமக்கள் கதவை உடைத்து மாணவர்களை மீட்டுள்ளனர்.

காயம் அடைந்த மாணவ-மாணவிகள் உடனடியாக பெரம்பலூர் அரசு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த விபத்து தொடர்பாக பேருந்து சாரதி ராஜாதி ராஜாவை பொலிஸார் கைது செய்தனர்.

விபத்துக்குள்ளான பேருந்து கடந்த 23 ஆம் திகதி எப்சி காட்டப்பட்டுள்ளது. அப்போது பேருந்து இயக்கதரமற்றது என்று வட்டார போக்குவரத்து அலுவலர் சான்றிதழ் அளித்துள்ளார். பின்னர் பேருந்து மீண்டும் எப்சி காட்டப்பட்டுள்ளது. அப்போது, பேருந்துக்கு நற்சான்று வழங்கப்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட பேருந்தை இயக்க எப்படி அதிகாரிகள் அனுமதி வழங் கினார்கள் என்ற கேள்வி எழுந் துள்ளது. இதேபோல் கடந்த மாதம் அரியலூரில் பாடசாலை பேருந்து கவிழ்ந்த விபத்தில் 4 மாணவர்கள் பலியானார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைபேசிக்கு முறையிடலாம்

பொதுத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்கான தொலைபேசி இலக்கங்களை, தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று அறிவித்துள்ளார்.

தேர்தல்கள் செயலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே தேர்தல்கள் ஆணையாளர் இந்த இலக்கங்களை அறிமுகப்படுத்தி வைத்தார்.

இதற்கமைய, 011 2887756, 011 2887759 மற்றும் 011 2877631 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டோ அல்லது 011 2887717 மற்றும் 011 2877636 ஆகிய தொலைநகல் இலக்கங்களுக்கோ முறைப்பாடுகளை அனுப்பி தேர்தல்கள் தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்கள் நேற்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் தினங்களில் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# மகிந்தவுக்காக றோ களத்தில்!

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக இந்திய புலனாய்வு சேவையான றோ செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாக ஏற்கெனவே தகவல்கள் வெளியாகி இருந்தன.

இதனடிப்படையில், பல்வேறு காரணங்களை கூறி இலங்கை வந்துள்ள இந்திய புலனாய்வு சேவையின் உறுப்பினர்கள் பல மாவட்டங்களில் நிலை கொண்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

மகிந்த ராஜபக்ஷவின் வெற்றி என்பது இந்தியாவின் தேவை என்பதுடன் தேர்தல் பிரசாரங்களின் போது இலங்கை அரசாங்கத்தின் தலையீடுகளால், மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரங்களில் தொய்வுகள் ஏற்பட்டால், அது குறித்து இந்திய அரசாங்கத்திற்கு அறிவித்து அடுத்த கட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு றோ அமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டியலில் றோ அமைப்பின் உறுப்பினர் ஒருவர் உள்ளடக்கப்பட்டுள்ளதன் காரணமாக தான் அதில் இருந்து விலகி கொண்டதாக பேராசிரியர் நளின் டி சில்வா கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# மகிந்தவின் பாதுகாப்பை குறைக்க முடியாது

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் பாதுகாப்பை குறைக்க முடியாது. அவரின் பாதுகாப்பை குறைப்பதற்கு சட்டத்தில் இடமில்லை என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட வேட்பாளர்களுக்கான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பிரசாரப் பணிகளில் ஈடுபடாது பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுவர்.

இந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடாத வரையில் பிரச்சினையில்லை.

எந்தவொரு வேட்பாளருக்கும் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பை குறைப்பதற்கு எனக்கு அதிகாரமில்லை.

சபாநாயகர், அமைச்சரவை அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் உள்ளிட்டவர்களுக்கு அரசியல் சாசனத்தின் அடிப்படையில் பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக முன்னாள அமைச்சர்களுக்கு பாதுகாப்பை வாபஸ் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர் என்ற ரீதியில் பெரிய கட்சியோ அல்லது சிறிய கட்சியோ அனைத்து தரப்புக்களையும் ஒரே விதமாக நடத்த வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அச்சுறுத்தல் காணப்படும் வேட்பாளர்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணை யாளர் தெரிவித்துள்ளார். (எ-11)

# ஆஸி ஆதிக்கம்

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான ஆஷஸ் தொடரின் 2-வது டெஸ்ட் போட்டி லண்டன் லோர்ட்சில் நேற்று தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா முதலில் பேட் செய்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக டேவிட் வோர்னரும் கிறிஸ் ரோஜர்சும் களம் இறங்கினர்.

இவர்கள் முதல் விக்கெட்டுக்கு 78 ரன்களை சேர்த்து நல்ல தொடக்கம் தந்தனர். வோர்னர் 38 ரன்களில் (42 பந்து, 7 பவுண்டரி) மொயீன அலியின் பந்து வீச்சில் கேட்ச் ஆனார்.

இதன் பிறகு துணை கப்டன் ஸ்டீவன் ஸ்மித் ஆட வந்தார். ரோஜர்சும், ஸ்மித்தும் நிலைத்து நின்று ஆடி அணியின் ஸ்கோரை மேலும் வலுப்படுத்தினர்.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் ஒரு விக்கெட் இழப்புக்கு 337 ரன்கள் குவித்துள்ளது. கிறிஸ் ரோஜர்ஸ் 158 (282 பந்து, 25 பவுண்டரி), ஸ்டீவன் ஸ்மித் 129 ரன்களுடன் (217 பந்து, 13 பவுண்டரி, ஒரு சிக்சர்) களத்தில் உள்ளனர். (க)

# நாடு திரும்பினார் சந்திரிகா

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க நேற்று வியாழக்கிழமை நாடு திரும்பியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடு திரும்பிய அவர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வேட்பு மனு பெற்று கொடுத்தது தொடர்பாக விசேட கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் நல்லாட்சிக்காக ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து செயற்பட திட்டமிட்டுள்ள அவர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக தேர்தல் கூட்டங்கள் பலவற்றில் பேசவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# அரசாங்க...

கான எரிபொருள் கட்டணத்தை சொந்த பணத்தை கொண்டு செலுத்த வேண்டும்.

தேர்தலுக்கான விமானங்கள், உலங்கு வானூர்திகளை பயன்படுத்தினால், அதற்கான செலவுகளை அவர்களே ஏற்கவேண்டும் எனவும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

உத்தியோகபூர்வ வாகனங்களைத் தேடி அறிந்து அதற்கான கட்டணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியது அமைச்சுகளின் செயலாளர்களது பொறுப்பு எனவும் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# ஜனாதிபதி...

நிறுத்துவதன் மூலம் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி சிறுபான்மை மக்களின் வாக்குகளை பெறமுடியாதென்று மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்த கருத்து குறித்து ஏற்றுக்கொள்ள முடியாது. மகிந்த ராஜபக்ஷ ஒரு இனவாதி அல்ல என்றும், அவர் மீது எதிர்க் கட்சிகள் சுமத்தும் ஓர் அடிப்படையற்ற குற்றச்சாட்டு இது என்றும் கூறினார்.

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலில் பிரவேசிப்பதை தடுப்பதற்கு பல சர்வதேச சக்திகள் முயற்சி செய்து வருவதாக புகார் கூறிய வட்டினாபஹா சோமானந்த தேரர், அத்தகைய சதி முயற்சிகளுக்கு சார்பாகவே ஜனாதிபதி சிறிசேனவின் கருத்துக்கள் அமைந்துள்ளதாகவும் குற்றம் சாட்டினார். (எ-12)

# தேர்தல் ஆணையாளர் உத்தரவு அதிபர் இடமாற்றம் இரத்து!

## வடக்கு மாகாணத்தில்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அதிபர்களின் இடமாற்றத்தை உடனடியாக இரத்துச் செய்யுமாறு தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, அண்மையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் சில பாடசாலைகளின் அதிபர்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். இது பல்வேறு மட்டங்களில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையில் சில பாடசாலைகளின் அதிபர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் பல்வேறு மட்டங்களின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர். அந்த வகையில் இந்த விடயம் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

இதனையடுத்து தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய, அதிபர்களின் இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்தல் விடுத்துள்ளார்.

அவர் தனது 10-07-2015 திகதியிடப்பட்ட PE/2015/19/JAF03 இலக்கமுடைய கடிதம் மூலம் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட அதிபர்கள் இடமாற்றம் தேர்தல் சட்ட விதிகளுக்கு மாறானது எனவும் எனவே இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட குறித்த அதிபர்களின் என இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு அறிவித்தல் விடுத்துள்ளார்

குறித்த தேர்தல்கள் ஆணையாளரின் கடிதத்தின் பிரதி வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ந)

# கூட்டமைப்பின் விஞ்ஞாபனம் அடுத்த வாரம் வெளியீடு!

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் அடுத்த வாரம் வெளியிடப்படுமெனக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

அத்துடன் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டமும் அடுத்த வாரம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து தொடர்ந்து கிராம மட்ட ரீதியாக பிரசாரங்கள் முன்னெடுக்க உள்ளதாகவும் மாவை சேனாதிராசா குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற நிலையில் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் மற்றும் தேர்தல் பிரசாரம் தொடர்பில் வினவிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்,

அடுத்த மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் வடக்கு கிழக்கு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கமைய முதலாவது பிரசாரக் கூட்டம் அடுத்த வாரம் யாழில் ஆரம்பமாகவுள்ளது.

இதனைத் தொடர்ந்தும் பிரதேச ரீதியாக பிரசாரக் கூட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற அதே வேளையில் கிராம மட்டத்திலும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இக் கூட்டங்களில் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தனும் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனமும் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. இதில் தமிழ் மக்களின் அன்றாட மற்றும் அடிப்படைப் பிரச்சினைகளை உள்ளடக்கி தமிழ் மக்களுக்கான தீர்வைக் கோரி தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படவுள்ளது.

இதேவேளை நடைபெறவிருக்கும் தேர்தல் பிரசாரங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் தற்போது கலந்துரையாடி வருகின்றோம். இதற்கமைய கட்சியின் பிரசாரங்களை யாழில் முன்னெடுக்க உள்ளோம். இதற்கு மக்கள் தமது ஆணையை வழங்குவார்கள் என்றும் நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-4)

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව
VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA
CHUNNAKAM

My No : Np /14/41(15)/03.06/07/S/2015 Date: 16.07.2015

**பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்**

**வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால் பயன்படுத்தப்பட்ட பின்வரும் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன**

காலம்:27.07.2015

இடம்:தலைமை அலுவலகம்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

பொருட்கள் விபரம்: மரக் கதவுகள், மர யன்னல்கள், கண்ணாடி யன்னல்கள், ஓடுகள்

**நிபந்தனைகள்:**

01)ஏலதாரராகக் கலந்து கொள்பவர் ரூபா 100.00 (NBT தவிர) மீளளிக்கப்படாத வைப்புப பணமாகச் செலுத்த வேண்டும்.

02)சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே ஒப்புக்கொண்ட ஏலத் தொகையின் முழுத தொகையினையும் செலுத்திப் பொருட்களை அலுவலகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.

03)20.07.2015 தொடக்கம் 24.07.2015 வரை அலுவலக நேரத்தில் (காலை 09.00 முதல் மாலை 04.15வரை) தலைமை அலுவலக வளாகத்தினுள் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் தொலைபேசி இலக்கம் - 021 224 0017 இல் தொடர்பு கொள்ளலாம்,

04)மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்,

தி.பிரகாஷ்,
தவிசாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். (சி-1605)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி...

ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய கருத்துக்களை அண்மையில் ஊடகங்களிடம் கூறியதாக தெரிவித்த வட்டினாபஹா சோமானந்த தேரர், தேர்தலில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதிமகிந்தராஜபக்ஷ மீண்டும் தோற்கடிக்கப்படுவாரென மைத்திரி கூறியிருந்ததைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தென்று விமர்சித்தார்.

இதன் மூலம் இலங்கை நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பிற்கு பெரிய அளவில் பாதிப்புக்கள் ஏற்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இருக்கும் ஜனாதிபதி சிறிசேன இவ்வாறான கருத்துக்களைக்கூற முடியாது. இது கட்சியின் ஒழுக்க விதிமுறைகளை மீறும் ஒரு செயல்.

தேர்தலின்போது ஐக்கிய தேசியக்கட்சிக்கு மறைமுகமான ஆதரவைப் பெற்றுக்கொடுப்பதற்காகவே ஜனாதிபதி சிறிசேன இவ்வாறான கருத்துக்களை கூறியுள்ளார்.

எனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கைமேற்கொள்ளுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரிடம் எழுத்து மூலமான வேண்டுகோளை தாம் விடுத்துள்ளதாக வட்டினாபஹா சோமானந்த தேரர் கூறினார்.

பௌத்த பிக்குகள், அரசியலில் உட்கட்சி விவகாரத்தில் இவ்வாறான கோரிக்கைகளை விடுப்பது நியாயமானதா என்கிற கேள்விக்கு பதிலளித்த வட்டினாபஹா சோமானந்த தேரர், தமது அமைப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு கிளை அமைப்பாக செயற்பட்டு வருவதாகவும், எனவே அந்த கட்சிக்கு பாதிப்புக்கள் ஏற்படும்போது அதனை தம்மால் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்க முடியாது என்றும், அதன் காரணமாகவே தாம் இந்த முறைப்பாட்டை சமர்ப்பிக்க தீர்மானித்ததாகவும் கூறினார்.

முன்னாள்ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தேர்தலில்

23ஆம் பக்கம் பார்க்க


CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

(C-1599)



ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்;

பிரெஞ்சு மொழி




- பிரெஞ்சு கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்)
- யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.
- இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMASஐ வழங்குகின்றது. AF மாணவர்களுக்கு DELF கட்டணம் 3850/- ஏனையோருக்கு 9900/-எங்கு படித்தாலும் இலங்கையில் AFஇல் மட்டுமே DELF பரீட்சை எழுதலாம்
- Audio-Vidio மூலமான கற்பித்தல்கள். Audio CDs. ஆயிரக்கணக்கான நூல்களை இலவசமாக பாவிக்கலாம்
- பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள். எந்த வயதினரும் படிக்கலாம்
- யாழ், வன்னி, தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AFஇல் படித்தே FRANCE,CANADA... செல்கிறார்கள்.

இவ்அனைத்து நன்மைகளும் AF இல் மட்டுமே

26.7.15, சனி,ஞாயிறு 2-4 pm உடன் பதிவுசெய்யுங்கள்

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி. யாழ்ப்பாணம்.

(1143)



## தேவை

திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்தியில் அமைந்துள்ள எமது பட்டயக்கணக்காளர் நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

கணக்காளர் / கணக்கியல் பயிலுனர்கள்

B.com/ HNDA பட்டம் பெற்றவர்
A/L வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்தோர் விண்ணப்பிக்கலாம்.

(1153)

தொலைபேசி இலக்கம்: 021 2222478, 0768351521



## வாடகைக்கு உண்டு

Projector, Sound System மற்றும் தளபாட வசதிகளுடன் கூடிய அழகிய வகுப்பறை யாழ்.நகரப் பகுதியில் வாடகைக்கு உண்டு.

(1140)

தொடர்புகளுக்கு: 077 649 3351



## பதவிக்கான தேடல்

இலங்கையில் வெற்றிகரமாக இயங்கிவரும் எமது Granton நிறுவனத்திற்கான புதிய கிளைகள் ஆரம்பமாக உள்ளன.

(மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு) இவ் இடங்களில் பணி ஆற்றுவதற்கு பணியாளர்கள் தேவையாக உள்ளனர்.

★O/L, A/L முடித்தவர்கள் தொடர்பு கொள்ளவும்

★O/L இல்லாதவர்களுக்கும் விசேட பதவி வாய்ப்புக்கள் உள்ளன.

Note :- கொடுப்பனவுகள் பேசித் தீர்மானிக்கப்படும் (1158)

தொடர்புகளுக்கு: 0774458134



## பலரது வேண்டுகோளுக்கு அமைய

சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில் மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய

Business & Hotel Management

2ஆம் அணி

யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும் விசா உத்தரவாதம்!



SEGi University & Colleges | B.H.M.S. Business & Hotel Management School | nmit | William Angliss Institute
MALAYSIA | SWITZERLAND | NEW ZEALAND | AUSTRALIA

அனுமதிகளுக்கு 077 36 16 798

கற்கைநெறி ஆரம்பம் ஜூலை 28 செவ்வாய்

பிரசித்திபெற்ற சுற்றுலா மையங்களுக்கான விசேட பயணம் & யாழ், கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் நேரடிப் பயிற்சி

SIKARAM Get Set for Careers & Take off Your Dreams

FREE ENGLISH COURSE

வெளிநாடு செல்ல விரும்பாதோருக்கு யாழ், கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தருகிறோம்.

Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம். (வைத்தியசாலை பின்புறம்) Tel: 021 222 00 11






(C-160)



## வாக்களிப்பில் பங்குபற்ற முன் ஆயத்தம் செய்வோம்

1. வாக்காளர் அட்டையை முன்கூட்டியே பெற்றுக் கொள்வோம்.
2. வாக்காளர் அட்டை கிடைக்காத நிலையிலும் வாக்களிக்க உங்களுக்கு உரிமை உண்டு.
3. தேசிய அடையாள அட்டை வாக்களிப்புக்கு அவசியமானது.
4. தேசிய அடையாள அட்டை இல்லாத நிலையில் தேர்தல் ஆணையாளரால் வழங்கப்படும் சிறப்பு அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளுங்கள்.
5. வாக்களிப்பு நிலையத்தை முன்கூட்டியே அறிந்து கொள்ளுங்கள்.
6. நீங்கள் தெரிவு செய்யும் கட்சியையும் பிரதிநிதியையும் முன்கூட்டியே அறிந்து கொள்ளுங்கள்.
7. நோயாளர்கள், முதியோர்கள் வாக்களிப்பு நிலையத்துக்கு செல்வதற்கு வாகன முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.
8. நேரத்துடன் வாக்களிப்பு நிலையத்துக்கு சென்று வாக்களியுங்கள்.

குறிப்பு: மேலதிக தேவைகளுக்கு உங்கள் கிராம சேவையாளரை நாடுங்கள்

வாக்களிப்போம் ஜனநாயகத்தைப் பேணுவோம்

அனுசரணை

கரித்தாஸ் கியூடெக் யாழ்ப்பாணம்

(C-1585)



## பாராளுமன்றத் தேர்தல் - 2015

சுயேட்சைக்குழு இலக்கம் 2





தந்தை செல்வா வழியில்



தளபதி அமிர்தலிங்கத்தின் தெரிவில்

அரசியல் களம் கண்ட ஆறுமுகம் நடேசு இராசேந்திரன்

ஆகிய என்னை கட்சியொன்றின் தற்போதைய தலைமை ஏமாற்றியதால் சுயேட்சையாக போட்டியிடுகிறேன். ஒரு புதிய மாற்றத்திற்காக மட்டுமல்ல, புதியதோர் அத்தியாயத்தின் ஆரம்பமாகவும் தேர்தலில் குதித்துள்ளேன். தமிழ் மக்கள் எல்லோரும் (அரிவாள்) சின்னத்திற்கும் எனது இலக்கம்.1 (ஒன்று) க்கும் புள்ளடியிட்டு என்னை அமோக வெற்றியடையச் செய்யுமாறு வேண்டுகிறேன்..

ஆறுமுகம் நடேசு இராசேந்திரன்

| X | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|

(C68)

சுயேச்சைக் குழு இலக்கம் - 2 X


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.